# கோபுரம்

தகவல் இதழ்
மாசி - 1998



இலங்கையின் சுதந்திரதின
பொன்விழாச் சிறப்பிதழ்

இந்து சமய கலாசார அலுவல்கள்
திணைக்கள வெளியீடு


# சத்குரு தியாகராஜர் உற்சவம்





தியாகராஜர் ஆராதனை நிகழ்ச்சியில் கலைஞர்கள், நாதஸ்வரக் கச்சேரி இசைப்பதையும், இசைக் கலைஞர்கள் பஞ்சரத்தின கீர்த்தனைகள் இசைப்பதையும், நிகழ்ச்சிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்திய தூதரகத்தின் உதவி இந்தியத் தூதுவர் பி.என்.பிரகாஷ், தூதரகத்தின் கல்விப் பகுதி உயரதிகாரி திரு. இளங்கோ, கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி ஆர். கைலாசநாதன் ஆகியோரையும் படங்களிற் காணலாம்



# கோபுரம்

இலங்கையின் சுதந்திர தினப்
பொன்விழாச் சிறப்பிதழ்

இந்து சமய, கலாசார
அலுவல்கள் திணைக்கள
வெளியீடு

மலர் - 9 இதழ் - 1

1998

ஈசுவர வருடம் - மாசி மாதம்

கோபுரம் இதழ் பற்றிய உங்கள்
எண்ணங்களை கீழ்வரும்
முகவரிக்கு எழுதி அனுப்பி
வையுங்கள்.

பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார
அலுவல்கள் திணைக்களம்,
98, வோட் பிளேஸ்,
கொழும்பு - 7.

## உள்ளே...!

★ திணைக்களச் செய்திகள்.

★ தஞ்சாவூரில் உலகசைவ மாநாடு.

★ இரத்தினபுரி மாவட்டத்தில் இந்துசமய கலாசாரப்பணிகள்.

★ திருகோணமலை மாவட்டத்தில் திணைக்களப்பணிகள்.

★ தொண்டுகள் தொடரட்டும்.

★ இந்துசமய கலாசாரத்திணைக்களத்தின் செயற்பாடுகள்.

★ மண்ணில் நல்ல வண்ணம் வாழ !

★ இந்து சமயத் திணைக்களத்தின் ஆன்மீக அறநெறிப் பணிகள்.

★ இந்து சமயத் திணைக்களத்தின் இணையிலாப் பணிகள்.

★ விரதங்களும் அவற்றின் பெருமையும்.

★ கோதையளித்த இன்தமிழ்.

★ ஷோடச உபசாரம்.

★ அட்ட மூர்த்தம்.

★ ஜபயோகம்.

★ சிவநெறி கண்ட சித்தர்கள்.

★ குருவருள் இன்றேல்.

★ கடவுளை உணர்வது.

★ வாழ்ந்து பார்க்கலாம் வாருங்கள் !

# கல்வி, உயர் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்
# திரு. இ. யோகநாதன் அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இதழான 'கோபுரம்', நாட்டின் சுதந்திர தின பொன் விழாவையொட்டி சிறப்பாக வெளியிடப்படுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை அறிந்து மகிழ்வெய்துகின்றேன்.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்னும் ஆன்றோர் வாக்குக்கு இணங்க நல்வாழ்வுக்கு உகந்த ஆன்மீகச் செய்திகளையும் மற்றும் இலக்கிய, கலாசார பொருள் பற்றிய கட்டுரைகளையும் காலாண்டுக்கு ஒரு முறை சுமந்து வருகின்ற இச்சஞ்சிகையானது சைவர்களாலும் தமிழ் கூறும் நல்லுலகத்தினராலும் ஆவலோடு வாசிக்கப்படுகின்ற ஒன்று ஆகும்.

எண்பதுகளில் அவ்வப்போது வெளியிடப்பட்டு வந்த மலர் தொண்ணூறாம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வந்துள்ளது. திணைக்களச் செயற்பாடுகள் பற்றிய செய்திகளை உள்ளடக்கிய இவ்விதழ் திணைக்களத்தின் செயலாற்றும் திறமையை எடை போடுகின்ற ஒரு ஊடகமாகவும் திகழ்கின்றது.

சுதந்திர தினப் பொன் விழாவையொட்டி வெளியிடப்படுகின்ற இவ்விதழின் வெற்றிக்கு எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*இ. யோகநாதன்*

கல்வி, உயர்கல்வி அமைச்சு
இசுறுபாய,
பத்தரமுல்ல.

# தைப்பொங்கல் விழா'98

தொகுப்பு : க. தங்கேஸ்வரி
*கலாசார உத்தியோகத்தர், மட்டக்களப்பு*

திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்திய தைப்பொங்கல் விழா கலை நிகழ்ச்சிகள் ஜனவரி மாதம் 24ம் திகதி மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி. ஆர். கைலாசநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழா, விசேட பொங்கல் பூஜை வழிபாட்டுடன் ஆரம்பமாகியது. முதலில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி அஜராத்மானந்தஜீ அவர்களின் வாழ்த்துரை இடம்பெற்றது.

தொடர்ந்து மட்டக்களப்பு பாரம்பரிய விளையாட்டுக்கள், போட்டிகள் என்பன இடம்பெற்றன. திருமதி. ஆர். கைலாசநாதன் அவர்களின் தலைமையில் இடம் பெற்ற உரையரங்கு நிகழ்ச்சியில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் கா.சிவத்தம்பி, மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதியரசர் திரு. ஜெ. விஸ்வநாதன், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத் தலைவர் கலாநிதி சி. மௌனகுரு ஆகியோர் சிறப்புரைகள் வழங்கினர்.

"பொங்குக நலமுடன் தமிழர் வாழ்வு' 'எனும் தலைப்பில் இடம்பெற்ற கவியரங்கு தமிழ்மணி, கவிஞர் அகளங்கன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கவிஞர் திமிலைத் துமிலன், கவிஞர் திருமதி. மண்டூர் அசோகா, கவிஞர். செ.குணரெத்தினம், கவிஞர் திக்கவயல் தர்மகுலசிங்கம் ஆகியோர் இவ்வரங்கிற் கவிதைகள் படித்தனர்.

இதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மட். ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் அளித்த "அர்ஜுனன் கர்வபங்கம்", எல்லை வீதி இந்து மகளிர் மன்றம் அளித்த "கோலாட்டம்" புது முகத்துவாரம் விபுலானந்த அற நெறிப் பாடசாலை அளித்த "கரகம்" என்பவற்றுடன் சிறப்பு நிகழ்ச்சிகளாகப் பின்வரும் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

சங்கீத பூஷணம் ஜீவம் ஜோசப் தயாரித்தளித்த "ஜீவஸ்வரங்கள்" என்ற பல்லியம் நிகழ்ச்சி, இதில் நாதஸ்வரம், கிளாறினற், தவில், புல்லாங்குழல் உட்பட பதினாறு வாத்தியங்கள் சேர்ந்த இசை நிகழ்ச்சி இடம் பெற்றது. மட். விபுலானந்த இசை நடனக் கல்லூரி தயாரித்தளித்த கர்நாடக இசை நிகழ்ச்சியில் பல வீணைகள், வயலின்கள் உட்பட பதினாறு வாத்தியங்கள் இடம்பெற்றன.

நிறைவு நிகழ்ச்சியாக மட். விபுலானந்த இசை நடனக் கல்லூரி வழங்கிய "நடனாஞ்சலி நிகழ்ச்சி அமைந்தது.

இவ் விழா காலை 9. மணி முதல் மாலை 4.30 வரை முழு நாள் நிகழ்ச்சியாக நடைபெற்றது. மட்டக்களப்பு கலாசார உத்தியோகத்தர் செல்வி. ச. தங்கேஸ்வரி அவர்களின் நன்றி உரையுடன் பொங்கல் விழா நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன.

## திணைக்களத்தின் புதிய பணிப்பாளர்

1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக திரு. எஸ். தில்லைநடராஜா அவர்கள் நியமனம் பெற்றுள்ளார்.

திணைக்களத்தின் பணிப்பாளராகவும், கலாசார அமைச்சின் இந்து விவகாரங்களுக்குப் பொறுப்பான மேலதிகச் செயலளாளராகவும் பணி புரிந்த திருமதி. ஆர். கைலாசநாதன் அவர்கள் தற்போது கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளராக பணி புரிகின்றார்.



# மகா சிவராத்திரி விழா '98

திருக்கோணேஸ்வரர் ஆலய பரிபாலன சபை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த மகா சிவராத்திரி வைபவம் கடந்த பெப்ரவரி 25ம் திகதி கோணேஸ்வரப் பெருமான் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அன்று பிற்பகல் ஐந்து மணிக்கு முதல் ஜாமப் பூஜையுடன் விழா ஆரம்பமானது. கோணேசர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. மு. கோ. செல்வராசா அவர்களின் தலைமை உரையைத் தொடர்ந்து திரு.வேல்முருகு குழுவினரின் நாதஸ்வரம் இடம் பெற்றது.

அன்பு இல்ல மாணவர்களின் ''வல்லமை தந்திடுவாய் பராசக்தி'' எனும் கும்மி, தெட்சணகான சபா மாணவிகளின் இசை நிகழ்ச்சி, ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி மாணவியரின் இசை நடன நிகழ்ச்சி என்பவற்றைத் தொடர்ந்து இரண்டாம் ஜாமப் பூஜை இடம்பெற்றது.

தொடர்ந்து ஆசிரியை திருமதி. சுலோசனா அவர்களின் நெறியாள்கையில் வீணை இசை இடம்பெற்றது.

திரு. அ. விக்னேஸ்வரன் அவர்களின் பாட்டுக்கு என். சங்கரலிங்கம் வயலின், திருமலை என். காண்டீபன் மிருதங்கம் திரு. அ. பிரபாகரன் கஞ்சிரா, பொன் விபுலானந்தன் மோர்சிங் இசை வழங்கினர்.

பண்டிதர் இ. வடிவேல் அவர்களின் நெறியாள்கையில் செல்வி. பிரியலோஜினி எதிர்மன்னசிங்கம், செல்வி. சூரியபிரபா சூரியமூர்த்தி ஆகியோர் கோணேசர் பதிகம் இசைச் சித்திரம் வழங்கினர்.

நள்ளிரவு லிங்கோற்பவ பூஜையைத் தொடர்ந்து திருமதி.கு. பத்மலோஜினி அவர்களின் பாட்டு இடம்பெற்றது.

இராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரி மாணவர்களின் கான அமிர்தம் நிகழ்ச்சியைத் தொடர்ந்து திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். குமார்வடிவேல் அவர்களின் சிறப்புரை இடம்பெற்றது.

அதிகாலை நான்கு மணிக்கு நான்காம் ஜாமப்பூஜை இடம் பெற்றது.

சிவராத்திரி விழா நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத் தமிழ்ச்சேவை நேரடி அஞ்சல் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## ''பண்பாடு'' ஆய்விதழ் விநியோகம்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆய்விதழான 'பண்பாடு' 1991ம் ஆண்டுமுதல் காலாண்டு இதழாக வெளியிடப்பட்டுவருகின்றது. இவ்விதழில் இந்துசமயம், தத்துவம், தமிழியல், இலக்கியம், வரலாறு போன்ற பல்வேறு துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெறுகின்றன. கட்டுரைகளை அவ்வத்துறைகளில் தேர்ச்சி பெற்ற ஆய்வாளர்கள் எழுதிவருகின்றனர். 'பண்பாடு' தனிப்பிரதி ஒன்றின் விலை ரூபா 25/- ஆகும்.

தற்போது 'பண்பாடு' இதழின் பாவனையைப் பரவலாக்கும் நோக்குடன் பல்கலைக்கழகங்கள், உயர்தரப்பாடசாலைகள், தமிழ் மன்ற நூலகங்கள், பிரதேச செயலக நூலகங்கள், பொது நூலகங்கள் போன்றவற்றுக்கு இலவசமாக விநியோகிக்கும் திட்டமொன்றினைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

மேற்குறித்த நிறுவனங்களைச் சார்ந்த நூலகப் பொறுப்பாளர்கள், தத்தம் நிறுவனங்கள் மூலம் பண்பாடு இதழினை இந்துசமய கலாசாரத் திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பிரிவில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

பல்கலைக்கழகத்துறைத் தலைவர்கள் தமக்கு வேண்டிய பிரதிகளின் தொகையைக் குறிப்பிட்டு கடிதங்களை அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

# இலங்கையின் சுதந்திர தினப் பொன்விழாக் கண்காட்சி

இலங்கையின் சுதந்திர தினப் பொன்விழாவை ஒட்டி அமைச்சுகள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த பொன் விழாக் கண்காட்சி, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், பெப்ரவரி மாதம் 5ம் திகதி முதல் 25ம் திகதி வரை நடைபெற்றது.

இக் கண்காட்சியில் இந்து சமய கலாசார திணைக்களத்தின் காட்சியறை ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இக் காட்சியறையில், திணைக்களத்தின் பணிகளை விளக்கும் காட்சிப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இலங்கையின் இந்து சமய பெரியார்கள் தமிழ்ப் பேரறிஞர்கள் ஆகியோரின் புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அத்துடன், பாரம்பரிய இசைக் கருவிகள், திணைக்களச் செயற்பாடுகளைச் சித்திரிக்கும் புகைப்படங்கள், திணைக்கள நூல் வெளியீடுகள், சிவலிங்க வடிவம், ஆலயங்களிற், பூஜைக்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள், பரத நாட்டியத்தில் பல்வேறு அபிநயங்களையும் முத்திரைகளையும் காட்டும் புகைப்படங்கள், சாகித்திய விருது பெற்ற தமிழ் நூல்கள், திண்ணக்கள நூல் வெளியீடுகள் பரத நாட்டிய உடை அலங்காரம் என்பனவும் இக்காட்சியில் இடம்பெற்றன.

இவற்றுடன், திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, இந்த ஆலயங்கள் அற நெறிப்பாடசாலைகள், இந்து மன்றங்கள் என்பவற்றை மாவட்ட ரீதியாகக் காட்டும் வரை படங்களும் இடம்பெற்றன.

இக் காட்சிக் கூடத்தை அமைப்பதில் கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர், திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர்கள், திரு. வீ. விக்கிரமராஜா, திரு. குமார் வடிவேல், திரு. எஸ். தெய்வநாயகம் ஆகியோரும் திணைக்களத்தின் ஏனைய உத்தியோகத்தர்களும், இணைந்து பணி செய்தமை குறிப்பிடத்தக்கது.

## சுதந்திர தின விசேட பூஜைகள்

இலங்கையின் சுதந்திர தினப் பொன் விழாவையொட்டி பெப்ரவரி மாதம் 4ம் திகதி கண்டி கொட்டுகொடல்ல வீதியில் அமைந்துள்ள கதிரேசன் ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்றன.

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி. ஆர். கைலாசநாதன் அவர்கள், இப் பூஜைகளிற் கலந்து சிறப்பித்தார்.

# திருகோணமலை மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்க்கான கருத்தரங்கு

திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருமலை மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒரு நாட் பயிற்சிக்கருத்தரங்கு பெப்ரவரி மாதம் 22ம் திகதி சென். சேவியர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

திருமலை மாவட்ட கலாசார அலுவலர் திரு. எஸ். மகேந்திரராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கு ஆசிரியர்களின் பஞ்சபுராண ஓதலுடன் ஆரம்பமானது. இறைபணிச் செம்மல். திரு.பொ. கந்தையா அவர்கள் ஆசியுரையும் சிவஞானச் செல்வர், திரு. செ. சிவபாதசுந்தரம் அவர்கள் வரவேற்புரையும் வழங்கினர்.

வடகிழக்கு மாகாண சபை பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் திரு எஸ். அமிர்தலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகச் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார். வடகிழக்கு மாகாண கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சின் ஆலோசகர் திரு. எஸ். அருளானந்தம் அடியார்கள் வாழ்க்கை நெறி எனும் தலைப்பில் கலாசார உதவிப்பணிப்பாளர் திரு. எஸ் எதிர்மன்னசிங்கம், விரதங்களும் விழாக்களும் எனும் தலைப்பிலும், ஆசிரிய ஆலோசகர் திருமதி சித்திதேவி பத்மநாதன், சைவசித்தாந்தம் குருலிங்க சங்கம வழிபாடு எனும் பொருளிலும் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

ஞான சிரோன்மணி பண்டிதர் இ. வடிவேல் அவர்கள் பண்ணிசை, அறநெறிகீதம் என்பன பாடிப் பயிற்சி அளித்தார்.

திரு. எஸ். மகேந்திரராஜா அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு :- எஸ். மகேந்திரராஜா
கலாசார அலுவலர்
திருகோணமலை.



திருகோணமலை மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்க்கான கருத்தரங்கினை கலாசார உத்தியோகத்தர் திரு. எஸ். மகேந்திரராஜா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடகிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் திரு. எஸ். அமிர்தலிங்கம் அவர்கள் உரை நிகழ்த்துவதையும், சிவஞானச் செல்வர் திரு. எஸ். சிவபாத சுந்தரம், இறைபணிச் செம்மல் திரு. பொ. கந்தையா ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும், கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.

# அருள்நெறிவிழா - 1998

## 1997 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட சிறந்த இந்துசமய நூல்களுக்குப் பரிசளித்தல்

1997 ஜனவரி 1ம் திகதி முதல் 1997 டிசம்பர் 31ம் திகதி வரையுள்ள (இரண்டு தினங்களும் உட்பட) காலப்பகுதியில் வெளியிடப்பட்டனவும், இந்துசமயம் பற்றியனவுமான நூல்கள் மதிப்பீடு செய்யப்பட்டுத் தகுதி வாய்ந்த நூல்களின் ஆசிரியர்களிற்குப் பரிசில் வழங்கப்படவுள்ளன.

பரிசுத் தேர்வில் பங்குகொள்ள விரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் நூலின் ஐந்து பிரதிகளையும் அஞ்சல் மூலம் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர். விண்ணப்பத்தையும் நூல்களையும் நேரடியாகவும் ஒப்படைக்கலாம்.

விண்ணப்பங்களுடன் நூல்களும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 1998ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியாகும் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

98, வோட் பிளேஸ்,
கொழும்பு –07.

எஸ். தில்லை நடராஜா,
*பணிப்பாளர்,*
*இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.*

# அருள்நெறிவிழா - 1998

## இந்துசமய நூற் பரிசுத் தேர்வு (1997) மாதிரி விண்ணப்பப்படிவம்

01. நூலின் பெயர் :
02. நூலாசிரியரின் பெயர் :
03. தற்போதைய முகவரி :
04. நிரந்தர முகவரி :
05. நூல் பதிப்பிக்கப்பட்ட நாடும் அச்சக முகவரியும் :
06. நூல் வெளியிடப்பட்ட வருடம் :
    மாதம் : திகதி :
07. நூலின் விலை :

இந்நூல் முதற்பதிப்பு என்பதனையும், இந்நூலின் பகுதிகள் ஏற்கனவே வேறு நூல்களில் இடம்பெறவில்லை என்பதனையும், நூல் முழுமையும் தனி ஒருவராகிய என்னால் எழுதப்பட்டது என்பதனையும் தெரிவிப்பதுடன், மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவையென்றும் போட்டி விதிகளுக்கு உடன்படுகின்றேன் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................... ....................................

திகதி விண்ணப்பதாரர் கையொப்பம்

# கண்டி மாவட்ட அருள் நெறி விழா

*திருமதி.கி. ஜெயறஞ்சி*
*செயலாளர்,*
*சுவாமி விபுலானந்தர் அறநெறிப்பாடசாலை,*
*க/சரஸ்வதி மகாவித்தியாலயம், புசல்லாவ.*

இலங்கை வாழ் மக்களிடையே பக்தி உணர்வையும் அதன் சமய உணர்வையும் ஊட்டி வளர்ப்பதில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் காத்திரமான பல நடவடிக்கைகளை எடுத்து வருவது நாம் தெரிந்ததே. அவ்வகையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கண்டி மாவட்டத்திற்கான அருள்நெறி விழா 15.11.1997 அன்று புசல்லாவ சரஸ்வதி மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் திணைக்களத்தின் இந்து விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளர் திரு.குமார் வடிவேல் அவர்களின் தலைமையிற் நடைபெற்றது.

இவ்வருள் நெறி விழாவில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமிஜி ஆத்மகனாநந்த மகராஜ் அவர்களும், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமிஜி அஜிராத்மனானந்தஜி மகராஜ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தனர். கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ்.இராஜரட்ணம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அருள்நெறி விழாவின் முதல் அம்சமாகவும் ஆன்மீக உணர்வை ஊட்டியதுமான நிகழ்வு ஆன்மீக ஊர்வலமாகும். இவ்வான்மீக ஊர்வலத்தின் ஆரம்பத்தில் இரட்டைப் பாதை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தில் விசேட பூசை இடம்பெற்றது. இவ்விசேட பூசையினை ஆலயத்தின் பிரதம குரு பிரம்மஸ்ரீ பாஸ்கர சர்மா அவர்கள் நெறிப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து ஆலயத்திலிருந்து விழா மண்டபத்தை நோக்கி ஆன்மீக ஊர்வலம் இடம் பெற்றது. ஸ்ரீமத் சுவாமிஜி ஆத்மகநாநந்தஜி மகராஜ் அவர்களும் ஸ்ரீமத் சுவாமிஜி அஜிராத்மானந்தா அவர்களும் முன்னே செல்ல அவர்களைப் பின்தொடர்ந்து திணைக்கத்தின் உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அருள்மொழி அரசி திருமதி.வசந்தா வைத்தியநாதன் கலாசார உத்தியோகத்தர் திருமதி. இராஜேஸ்வரி ஸ்ரீ காந்தா ஆகியோரின் வழிகாட்டலில் ஆன்மீக ஊர்வலம் இடம்பெற்றது. சைவம் வளர்த்த நாயன்மார்கள், சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலானந்தர், ஔவையார், திருவள்ளுவர் ஆகிய அருளாளர்களின் உருவப்படங்களை தாங்கிய வண்ணம் ஊர்வலத்தில் அனைவரும் கலந்து கொண்டனர். அத்துடன் கலாசார அலுவலர் திருமதி. ஸ்ரீகாந்தா, திருமதி.குமார் வடிவேல் ஆகியோரின் வழிகாட்டலில் அறநெறி ஆசிரியர், மாணவர் அருட்பாடல்களை இசைத்த வண்ணம் சென்றனர். வீதிகள் தோறும் மக்கள் பூரண கும்பங்கள் வைத்து சுவாமிஜிகளை வரவேற்று ஆசீர்வாதங்களைப் பெற்று மகிழ்ந்தனர்.

ஆன்மீக ஊர்வலம் விழா மண்டபத்தை அடைந்ததும் விழாவின் அடுத்த அம்சமாக மங்கள விளக்கேற்றல் வைபவம் இடம் பெற்றது. மங்கள விளக்கேற்றல் என்பது ஒவ்வொரு உள்ளங்களிலும் ஞான ஒளியை ஏற்றுதல் வேண்டும் என்னும் தத்துவக் கருத்தை உள்ளடக்கியதாகும். ஸ்ரீமத் சுவாமிஜி ஆத்மகானானந்தஜி அவர்களும் சுவாமிஜி அஜிராத்மநாநந்தஜி அவர்களும் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ்.இராஜரட்ணம் அவர்களும் உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களும் மங்கள விளக்கேற்றினர். அதனைத் தொடர்ந்து சரஸ்வதி மகா வித்தியாலய உப அதிபர் திரு.பி. இராஜேந்திரன், அறநெறி ஆசிரியர் மாணவர் ஆகியோரால் மங்கள விளக்கேற்றி வைக்கப்பட்டது.

தொடர்ந்து சுவாமி விபுலானந்தர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஞ்ச புராணம் இடம்பெற்றது. அதனையடுத்து அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரால் அறநெறிக் கீதம் இசைக்கப்பட்டது. இந் நிகழ்வில் புசல்லாவ சுவாமி விவேகானந்தர் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து கொண்டனர். பிரதி அதிபர் திருமதி. செ. செல்வராஜா அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து, திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். அதனையடுத்து சுவாமிஜி. ஆத்மகனாநந்த மகராஜ் அவர்களினதும் சுவாமிஜி அஜிராத்மானந்தஜி அவர்களினதும் அருளுரைகள் இடம்பெற்றன. அருளுரைகளில் சமய ஒழுக்க நன்னடத்தைகள், சமயக் கருத்துக்கள் என்பன அடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்த நிகழ்வாக புசல்லாவ சுவாமி விவேகானந்தர் அறநெறிப் பாடசாலை மாணவர்களும் சுவாமி விபுலானந்தர் அறநெறிப் பாடசாலை மாணவர்களும் இணைந்து கூட்டுப்பிரார்த்தனை செய்தனர். தேநீர் இடைவேளையைத் தொடர்ந்து கண்டி மாவட்ட அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த மேற்பிரிவு மாணவர்களின் 'ஆன்மீக சிந்தனை' என்னும் நிகழ்ச்சி இடம்பெற்றது. இந் நிகழ்ச்சியில் "எனது பார்வையில் ஆன்மீகம்" எனும் தலைப்பில் அறநெறி பாடசாலை மாணவர்களான சி. கவிதா, சீ. அஜித்குமார், கு.கீதா, என். ராஜி ப. வினாயகஞானலக்ஸ்மி, ஆகியோர் தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர். இவர்களது கருத்துக்களை அருள்மொழியரசி திருமதி.வசந்தா வைத்தியநாதன் அவர்கள் ஆராய்ந்து சீர்தூக்கி தொகுத்து வழங்கினார்.

கம்பளை இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஜனை நிகழ்ச்சியை திருமதி.மாணிக்கவல்லி சோதிலிங்கம் அவர்கள் தயாரித்து வழங்கியிருந்தார். இவ் அற நெறிப்பாடசாலை மாணவியின் நடனம் மிகச் சிறப்பாக அமைந்தது.

தொடர்ந்து கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ். இராஜரட்னம் அவர்களின் சிறப்புரை இடம்பெற்றது. இவர் தமது சிறப்புரையில் விழாவைப் பாராட்டியதுடன் விழாவின் பயன் சகல மக்களையும் சென்றடைந்து அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து அறநெறிப் பாடசாலை சிறுவர்களின் 'ஆன்மீக சிறுவர் கதம்ப நிகழ்ச்சி இடம்பெற்றது. இந் நிகழ்ச்சியில் சிறுவர்கள் கடவுளர். சமயப் பெரியார்கள் போன்று வேடமிட்டு பல ஆன்மீகக் கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தனர். இந் நிகழ்ச்சியை திருமதி. இராஜேஸ்வரி ஸ்ரீகாந்தா அவர்கள் நெறிப்படுத்தியிருந்தார்.

அடுத்ததாக கண்டி இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை சிறுவர்களின் ஔவையாரும் ஆத்திசூடியும் என்னும் ஆன்மீக சிறுவர் கதம்ப நிகழ்ச்சி இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து நடனமொன்றும் இடம்பெற்றது. புசல்லாவ சுவாமி விபுலானந்தர் அறநெறிப் பாடசாலை மா்ணவர்களின் காவடி நடன நிகழ்ச்சி எல்லோரையும் கவர்ந்ததுடன் கண்ணுக்கு விருந்தாகவும் அமைந்திருந்தது. அடுத்து, அருள்மொழியரசி திருமதி. வசந்தா வைத்தியநாதன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். சமயமென்றால் என்ன? வாழ்க்கையென்றாலென்ன? சமயத்துக்கும் வாழ்க்கைக்கும் இடையிலுள்ள தொடார்பு என்ன? போன்ற கருத்துக்கள் அவரது சொற்பொழிவில் காணப்பட்டன.

அடுத்த நிகழ்வாக கண்டி மாவட்ட அறநெறி ஆசிரியர்கள் கலந்து கொண்ட ஆன்மீகக் கவியரங்கு இடம்பெற்றது. ஆன்மீகக் கவியரங்கு கலாசார அலுவலர் திருமதி. இராஜேஸ்வரி ஸ்ரீகாந்தா அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இவ்வான்மீகக் கவியரங்கில் திரு.கே. வீரசிங்கம், திரு.வே. அமிர்தலிங்கம், திரு.மு. கிருஷ்ணபிள்ளை, செல்வி. ச. இரட்ணம் ஆகிய அறநெறி ஆசிரியர்கள் பங்குபற்றினார்.

இவ்விழா கலாசார அலுவலர் திருமதி.இராஜேஸ்வரி ஸ்ரீகாந்தா அவர்களின் நன்றியுரை, பஞ்சபுராணம் அறநெறி கீதம் என்பவற்றுடன் இனிதே நிறைவுற்றது. இவ்விழாவில் புசல்லாவ சுவாமி விவேகானந்தர் அறநெறிப்பாடசாலை, புசல்லாவ சுவாமி விபுலானந்தர் அறநெறிப் பாடசாலை, இரட்டைப்பாதை ஸ்ரீசெல்வ விநாயகர் அறநெறிப் பாடசாலை, புசல்லாவ இந்து இளைஞர் மன்றம் வகுகப்பிட்டிய இந்து கலாசார பேரவை, கண்டி இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை பாரதி அறநெறிப்பாடசாலை, பன்வில செல்வவிநாயகர் அறநெறிப்பாடசாலை, உனுகலோய அறநெறிப்பாடசாலை, மொன்றிகிறிஸ்டோ அறநெறிப்பாடசாலை, கட்டபூலா த.வி.அற நெறிப்பாடசாலை, உடகெந்தேன கிருபா அறநெறிப்பாடசாலை டெல்டா தெற்கு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அறநெறிப்பாடசாலை, நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய கல்லூரி அறநெறிப்பாடசாலை அம்பாக்கோட்டை அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் ஆசிரியர்கள் அங்கத்தினர்கள், பொதுமக்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவின் நிகழ்ச்சிகளை கலாசார உத்தியோகத்தர் திருமதி. ஸ்ரீகாந்தா அவர்களும் சுவாமி விவேகானந்தர் அறநெறிப்பாடசாலைச் செயலாளர் திரு.மு. கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் அவர்களும் தொகுத்து வழங்கினர்.

★ வீட்டைக் கட்ட உதவும் செங்கல் போல வாழ்க்கை என்பது அநுபவங்களின் தொகுப்பு.

★ மனப்பூர்வமாகப் பூஜை செய்வதற்கு துளசிதளமும், வில்வபத்திரமும் கூடப் போதுமானவை.

★ மனிதன் மீது கொள்ளும் அன்பு அவ்வப்போது மாறக்கூடியது. இறைவன் மீது கொள்ளும் அன்பு நித்தியமானது - அது நித்தியானந்தம்.

# தஞ்சாவூரில் உலக சைவ மாநாடு

உலக சைவப் பேரவை, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், திருப்பனந்தாள் ஆதீனம் என்பன இணைந்து நடாத்திய ஆறாவது உலக சைவ மாநாடு 1997 டிசம்பர் 19 முதல் 21ம் திகதி வரை தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

"உலக சகோதரத்திற்கும், மனித மேம்பாட்டிற்குமான சைவம்" என்பது மாநாட்டின் தொனிப்பொருளாகும்.

இந்தியா, இலங்கை, தென்னாபிரிக்கா, மலேஷியா, சிங்கப்பூர், மொரிஷியஸ், பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 1500க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இம் மாநாட்டிற் கலந்து கொண்டனர்.

இலங்கையிலிருந்து உலக சைவப்பேரவை இலங்கைக் கிளைத் தலைவர், திரு.கா. தயாபரன் அவர்கள் தலைமையில் 38 பிரதிநிதிகளும், யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 5 பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி. ஆர். கைலாசநாதன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கலாசார உத்தியோகத்தர் செல்வி. தங்கேஸ்வரி ஆகியோரும் மாநாட்டிற் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த மூன்று தினங்களிலும், 400 ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. இலங்கையைச் சேர்ந்த திரு. என். செல்லப்பா, திரு.ஆர்.. மயில்வாகனம், திரு. த. கனகரத்தினம் திரு.த. செந்தில்வேள், திரு. கே. இ. ஆறுமுகம், திரு.எஸ். எதிர்மன்னசிங்கம், திரு.எம். நாகரத்தினம், திருமதி. வானதி ரவீந்திரன் ஆகியோரின் ஆய்வுரைகளும் இடம் பெற்றன.

மாநாட்டு அமர்வுகளுக்கு தமிழக ஆதீனங்களான, தர்மபுரம், திருப்பனந்தாள், பேரூர், குன்றக்குடி, திருவண்ணாமலை, கும்பகோணம் ஆகியவற்றின் மடாதிபதிகளும் லண்டன் மெய்கண்டார் ஆதீன முதல்வரும் தலைமை வகித்தனர். மாநாட்டின் நிறைவு வைபவத்திற்கு தமிழக, தமிழ் மொழி, கலாசார அமைச்சர், கௌரவ டாக்டர். எம். தமிழ்க்குடிமகன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

மாநாட்டு அமர்வுகளின் போது, சைவத்தையும், தமிழையும் பரப்புதல், ஆலயங்களில் தமிழ் அர்ச்சனை, சைவ சமயக் கல்வி, சைவத் தொண்டர் அணியை உருவாக்கல், மதமாற்றப் பிரச்சனைகள், சமூக சேவை, ஆய்வு நடவடிக்கைகள் போன்ற பல விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

ஏழாவது உலக சைவ மாநாடு 1999 ஜுலையில், கனடா, டொரன்டோவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




இலங்கையிலிருந்து உலக சைவ மாநாட்டிற் கலந்து கொண்ட ஒரு பகுதி பெண் பிரதிநிதிகளைப் படத்திற் காணலாம். இடமிருந்து வலமாக முறையே, திருமதி.பத்மா குணரத்தினம், செல்வி.தங்கேஸ்வரி கதிராமன், திருமதி. இராஜலட்சுமி கைலாசநாதன், திருமதி. சாந்தி பாலசுப்பிரமணியம், திருமதி. மனோ ஞானசூரியம், திருமதி. யமுனா கணேசலிங்கம், திருமதி. இந்திரா யோகராஜா, திருமதி. வாணி தனபாலா, திருமதி. நீலா தயாபரன், திருமதி. இந்திரா மகாதேவா ஆகியோர் படத்திற் காணப்படுகின்றனர்.

# இரத்தினபுரி மாவட்டத்தில்
# இந்து சமய, கலாசாரப் பணிகள்

"இளஞ்சைவப் புலவர்" நடா. ஜெயராஜன்
அதிபர், இறை தமிழ் மகா வித்தியாலயம்,
பலாங்கொடை.

மனிதனை முழுமனிதனாக்குவது சமயமாகும். கானகத்தில் காட்டுமிராண்டியாய் வாழ்ந்த மனிதகுலம் சமயவாழ்வில் மறுமலர்ச்சி கண்டது. அவ்வகையில் தோன்றிய நம்சமயநெறி பிற்காலத்தில் இறையருள் பெற்ற இருடிகள், நாயன்மார்களினால் வளர்ந்து ஆன்மீகப்பணிகள் சிறந்தோங்கின. பண்டைய மன்னர்களும் சைவநெறி நின்று பெருந்தொண்டாற்றி ஆலயங்கள் அமைத்து ஆன்மீகப்பணிகள் புரிந்தனர்.

இலங்கையில் இந்து சமய கலாசாரத் திணைக்களம் இன்று நாடளாவிய ரீதியில் ஆற்றிவருகின்ற சமயப் பணிகள் அளப்பரியன. எம் கலாசாரம் வளரவேண்டுமென்ற நோக்கினில் காலத்திற்குக் காலம் தமிழகத்திலிருந்து சொற்பொழிவாளர்களை வரவழைத்து தலைநகரிலும் ஏனைய பகுதிகளிலும் அவற்றை நிகழ்த்தி மக்கள் மத்தியில் புத்துணர்வினை ஊட்டுவது உறங்கும் உணர்வைத் தட்டிவிடுவதாய் அமைகின்றது.

இரத்தினபுரி மாவட்டத்தினைப் பொறுத்தமட்டில் ஆற்றிய பணிகள் ஆன்மீக உணர்வலைகளை ஊட்டிய பணிகளாகும். ஆரம்பத்தில் அறநெறிப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கொன்றினை பலாங்கொடை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடாத்தி பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகள் யாவற்றிற்கும் ஆசிரியர்கள் கற்பிக்கவேண்டிய பாடத்திட்டம், தினவரவு இடாப்புகள், மாணவர்களுக்கான சமயநூல்கள் யாவும் திணைக்களத்தால் வழங்கப்பட்டன.

அன்றியும் நூலகங்கள் உள்ள பாடசாலைகளுக்கும், சனசமூக நிலைய நூலகங்களுக்கும் நூல்களை வழங்கி ஊக்குவித்தது. பதிவு செய்யப்படாத எமது ஆலயங்களைப் பதிவு செய்யவும் திணைக்களம் உற்சாகம் கொடுத்தது.

அத்தோடு இந்து இளைஞர் மன்றங்களை ஊக்குவிக்குமுகமாக சிறப்பாக இயங்குகின்ற மன்றங்களைக் கௌரவித்தது. கடந்த காலங்களில் தலைநகரில் நடாத்திய பக்திப்பெருவிழா, அறநெறிவிழா, அருள்நெறிவிழா போன்றவை மாகாண மட்டத்தில் திசைதிருப்பப்பட்டபோது முதல்முறையாக அருள்நெறிவிழா சப்ரகமுவ மாகாணத்திலே இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பலாங்கொடையில் நடாத்தப்பட்டது. இரத்தினபுரி மாவட்டத்தில் அடங்கும் இரத்தினபுரி, இறக்குவானை, காவத்தை, பலாங்கொடை ஆகிய பகுதிகளிலே இயங்குகின்ற அறநெறிப் பாடசாலைகள், இந்து இளைஞர் மன்றங்கள், இந்து ஆலயங்கள் அனைத்தினதும் பிரதிநிதிகள் பங்குகொண்ட பெருவிழாவாக அமைந்தது. திணைக்களத்திற்கு பலாங்கொடை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பரிபாலனசபையினர்

கொடுத்த ஆதரவு போற்றுதற்குரியது. அறநெறிப் பள்ளிகளிலே பயிலும் மாணவர்கள் நடாத்திய ஆன்மீக உரை, பாலர் பாடல், கதைசொல்லல், பஜனைகள், அறிவுப்புதிர்ப்போட்டி, விவாதம் ஆகியன யாவும் அனைவரது ஆன்மீக உணர்வுகளையும் தட்டியெழுப்புவதாய் அமைந்தது. அன்றியும் பாரம்பரியக் கலைகளை வளர்க்குமுகமாக மாலையில் நடாத்திய கலைநிகழ்ச்சிகளில் வில்லிசை, காவடியாட்டம், கும்மி, கரகம் போன்றவையும் இடம் பெற்றன. இசையை வளர்க்குமுகமாக திணைக்களத்தில் பதிவாகி இயங்குகின்ற இந்து இளைஞர் மன்றங்களுக்கு சுருதிப்பெட்டி, தாளம் போன்ற வாத்தியக் கருவிகள் கொடுத்து ஊக்குவித்தது.

அதுமட்டுமல்லாது ஆலயங்களில் அடியார்கள் மத்தியில் ஆன்மீக உணர்வினை ஊட்ட ஆன்மீக உரைகளை நடாத்தி வருகின்றது. எழுத்தாளர்களைக் கௌரவித்து மொழிவளர்ச்சிக்கு ஆற்றும் பணிகளும் போற்றுதற்குரியன.

எதிர் காலத்திலும் இத்திணைக்களம் ஆற்றவுள்ள பணிகள் அளப்பரியன. ஆன்மீகம் காப்பன. ஆன்ம ஈடேற்றம் காட்டுவன. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிகள் மேலும் விரிவடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

*"மேன்மைகொள் சைவநீதி*
*விளங்குக உலகமெலாம்".*

## 1997 ஆம் பிரசுரிக்கப்பட்ட சிறந்த தமிழ் நூல்களுக்கான அரச இலக்கிய பரிசுத் தேர்வு

இலங்கைக் கலைக்கழகத்தின் இலக்கியக் குழுவினால் 1997ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் 1997 டிசம்பர் மாதம் 31ம் திகதி வரை (இரு தினங்களும் உட்பட) வெளியிடப்பட்ட தமிழ் நூல்களின் ஆசிரியர்களிடமிருந்து அரச இலக்கியப் பரிசுத் தேர்விற்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நூலாசிரியர் இலங்கையராக இருத்தல் வேண்டும். தேர்விற்கென நூல்களை அனுப்பவிரும்பும் ஆசிரியர் சுயமுகவரியிடப்பட்ட தபாலுறை ஒன்றினை இணைத்து, செயலாளர், தமிழ் இலக்கியக்குழு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 98, வோட் பிளேஸ், கொழும்பு - 07 என்ற விலாசத்திற்கு எழுதி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது நேரிலும் விண்ணப்பங்களைப் பெறலாம்.

பரிசுத்தேர்வில் பங்குகொள்ள விரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் நூலின் ஐந்து பிரதிகளை அஞ்சல் மூலம் அனுப்பிவைக்குமாறு அல்லது நேரில் கையளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

98 ஏப்ரல் மாதம் 15ம் திகதிவரை விண்ணப்பப் படிவங்களை மேற்குறித்த முகவரியிற் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களும், நூல்களும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினம் 1998 மே மாதம் 05ம் திகதி என்பது குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை மாவட்டத்தில் திணைக்களப் பணிகள்

சிவஞானம் மகேந்திரராஜா
*கலாசார உத்தியோகத்தர்,*
*திருக்கோணமலை.*

திருக்கோணமலை மாவட்டம் ஈழமணித் திருநாட்டிலே கிழக்கு மாகாணத்தில், வடக்கே மாஓயாவையும், தெற்கே வெருகல் ஆற்றையும், மேற்கே அனுராதபுரம் பொலனறுவை மாவட்டங்களையும், கிழக்கே கொட்டியாரக்குடாவாவியையும் எல்லையாகக் கொண்டமைந்துள்ளது.

இலங்கை இந்து மதவரலாற்றில் திருக்கோணமலை மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. புராண இதிகாசங்கள் எடுத்தியம்பும் புகழ்மிக்க புண்ணிய தலமாக விளங்குகின்றது. இராமாயணம் கூறும் இராவணேசன் வழிப்பட்ட தலமும் இதுவாகும். இதனோடு தொடர்புடைய இராவணன் வெட்டு மற்றும் கன்னியா வெந்நீரூற்று என்பன இன்றும் அழியாச் சின்னமாகக் காட்சி தருகின்றன.

நாயன்மார்களுள் இளையவரான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தனது ஞானப்பார்வையால் விழித்துத் தேவாரப் பாமாலை சூடிய திருத்தலம் என்ற பெருமையையும் திருக்கோணமலை கொண்டுள்ளது. சைவத்தின் முழுமுதல் முக்கண் பெருமான் மாதுமை சமேதரராய் முக்கோணமலையில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் புகழை பல பாமாலைகள் எமக்கெடுத்தியம்புகின்றன. இப்புனிதப் பூமியிலே நூற்றுக்கும் மேற்பட்ட சிவாலயங்கள் அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. மேலும், இப்பகுதியில் சனீஸ்வரருக்கும் ஆலயம் அமைந்திருப்பது இந்து மக்களின் வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். இந்து மக்கள் பெருமை கொள்ள வேண்டிய எத்தனையோ சிறப்பம்சங்கள் இம் மாவட்டத்தில் உள்ளன.

இவ்வாறே இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இந்து மக்கள் கூடுதலாக வாழும் பிரதேசங்களில் கணிசமான அளவு சேவையைச் செய்து வருவது யாவரும் அறிந்ததே. திருக்கோணமலை மாவட்டத்தில் இதுவரையில் 125 இந்து ஆயலங்கள், 62 இந்து நிறுவனங்கள், 01 தமிழ்மன்றம், 47 அறநெறிப் பாடசாலைகள் என்பன திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டுக் கேற்ப சிறிய அளவிலான நிதி உதவியை ஆலயங்கள், இந்து நிறுவனங்கள் தமிழ் மன்றங்கள் ஆகியவற்றிக்கு இந்துசமய கலாசார மேம்பாட்டின் பொருட்டு திணைக்களம் வழங்கி வருகிறது. அந்த வகையில் 1997 ஆம் ஆண்டிலும் பின்வருவனவற்றிக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

ஆலயங்கள்

சம்பூர் பத்திரகாளியம்மன் ஆலயம், செல்வநாயகபுரம் ஆலடிவிநாயகர் ஆலயம், அன்புவழிபுரம் ஞானவைரவர் ஆலயம், பாலையூற்று பாலமுருகன் ஆலயம், லிங்கநகர் பிள்ளையார் ஆலயம்.

சிறுவர் இல்லம்

அன்பு இல்லம், ஸ்ரீசண்முகமகளிர் இல்லம், அன்னைசாரதாமகளிர் இல்லம்.

இந்து நிறுவனங்கள்

மாவட்ட இந்து இளைஞர் பேரவை திருக்கோணமலை. இந்து இளைஞர் மன்றம் மூதூர். இலங்கை இந்து இளைஞர் மன்றம்

மேற்படி நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது. மேலும் அறநெறிக் கல்வி அபிவிருத்தி நடவடிக்கையின் பொருட்டு, 7 அறநெறிப் பாடசாலைகளுக்கு சுருதிப்பெட்டி, தாளம், ஆகிய வாத்தியக்கருவிகள், பண்ணிசைப் பயிற்சிக்காக வழங்கப்பட்டன. 25, அறநெறிப் பாடசாலைகளுக்கு உசாத்துணை நூல்கள், வரவுஇடாப்பு, ஆசிரியர் குறிப்பேடு, பாடத்திட்டம் என்பனவும் வழங்கப்பட்டன. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு மூன்று பயிற்சிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

1. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சிக் கருத்தரங்கு.
2. 6, நாட்கள் கொண்ட பண்ணிசைப் பயிற்சிக் கருத்தரங்கு.
3. 2, நாட்கள் சைவசித்தாந்த வகுப்பு.

மேற்படி பயிற்சிகளை வழங்கியதோடு கலந்து கொண்ட ஆசிரியர்களுக்குத் திணைக்களத்தினால் சான்றிதழும் வழங்கப்பட்டது.

நூலகங்களுக்கு நூல்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் திருக்கோணமலை மாவட்டத்திள்ள (பாடசாலைகள் உள்ளூராட்சி நிறுவனங்கள், இந்து நிறுவனங்கள். உட்பட) 60 நூலகங்களுக்கு நூல் பொதிகள் வழங்கப்பட்டன.

சமயகலாசார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட கலாபூசண விருது மூதூரைச் சேர்ந்த திரு. வீரசிங்கம் என்ற வில்லுப்பாட்டு கலைஞருக்கு வழங்கப்பட்டது.

எனவே இந்து சமய கலாசார மேம்பாட்டுக்கு திணைக்களம் 1997 ஆம் ஆண்டு பலவகையிலும் திருக்கோணமலை மாவட்டத்தில் கவனம் செலுத்தி கடந்த ஆண்டுகளைவிடக் கூடுதலான பணியை நிறைவேற்றியுள்ளது. இவ்வாறே இவ்வாண்டும் மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மேடை நாடகப் போட்டிக்கான நாடகப் பிரதிகள்

இலங்கைக் கலைக்கழகத்தின் தமிழ்நாடகக் குழு 1998ம் ஆண்டு அரச தமிழ் நாடக மேடைப் போட்டிக்கென நாடகப்பிரதிகளைக் கோரியுள்ளது.

நாடகப்பிரதிகள் தொடர்பான விண்ணப்பப்பத்திரங்கள், விதிமுறைகள், என்பவற்றை சுயமுகவரியிடப்பட்ட தபாலுறை ஒன்றினை இணைத்து செயலாளர், தமிழ்நாடகக்குழு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 98 வோட் பிளேஸ், கொழும்பு – 07 என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது நேரிலும் மேற்குறித்த விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்கான இறுதித்தினம் ஏப்ரல் மாதம் 6ம் திகிதியாகும்.

அதே வேளை விண்ணப்பங்களுடன் நாடகப் பிரதியாக்கங்கள் ஏப்ரல் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொண்டுகள் தொடரட்டும்...

அருள்மொழியரசி, வித்துவான், திருமதி வசந்தா வைத்தியநாதன்

மனிதனின் சிந்தனைத் தெளிவே சமயங்கள். மனிதனின் மனம் விந்தை நிறைந்தது. எந்த ஒரு கருத்தையும் உடனடியாக ஏற்றுக் கொள்ளாது. ஏன்? எப்படி? எவ்வாறு? என்று ஆயிரங் கேள்விகளால் அகழ்ந்து அனுபவப்பயனை நுகரும் தன்மை வாய்ந்தது. நமது முன்னோர்களும், இப்படிப் பலதரப்பட்ட வாதப் பிரதிவாதங்களுக்கு நிறைவிலேதான் கடவுள் உண்மையைக் கண்டார்கள். கண்ட உண்மையை காரண காரியத் தொடர்புடன் ஆய்ந்து மக்களுக்குத் தந்தார்கள்.

உலகில் சமயம் தோன்றிய காலப்பகுதியை அறுதியிட்டு உரைக்க முடியாது. தனக்குமேல் – தன் ஆற்றலுக்கு அப்பால், தன்னை வழிநடத்தும் ஒருபொருள் இருக்கிறது என்று மனிதன் என்றைக்கு உணரத் தலைப்பட்டானோ அன்றே சமயமும் தோற்றம் பெற்று விட்டது. இடி, மின்னல், மழை, இவைகளின் தாக்கத்தினின்று தன்னை விடுவித்துக் கொள்ளவே மனிதன் பேராற்றலின் நிலைக்களனாக இலங்கும் பரம்பொருளை வழிபடத் தலைப்பட்டான். வழிபாடு முதன் முதலில் அச்சத்தின் காரணமாகவே முகிழ்த்தது என்று கொள்ளலாம். பின்பு நாளடைவில் அவ்வழிபாடு அன்பெனும் நெறியில் தன்னை அமைத்துக் கொண்டது.

*"அஞ்சியாகிலும், அன்பு மட்டாகிலும்*
*நெஞ்சம் வாழி நினைநின்றி யூரை நீ*
*இஞ்சி மாமதி லெய்திமை யோர் தொழக்*
*குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே."*

என்பார் அப்பர் பெருமான்.

பண்டைக் காலத்தில் வழிபாட்டிற்கென்று ஆலயங்கள் இருக்கவில்லை. மன்றிலும், மரநிழல்களிலும், ஆற்றோரங்களிலும் மக்கள் ஒன்று கூடி மனம் ஒருமித்து வழிபட்டு வந்தார்கள். நாட்கள் செல்லச் செல்ல தங்கள் எண்ணம் குவிவதற்காக அடையாளங்களைத் தேடலாயினர். இப்படிக் கருக்கொண்ட கொள்கையின் முதிர்ந்த வளர்ச்சி நிலையே இன்று காணப்படும் ஆலயங்கள் – மூர்த்தங்கள் – தீர்த்தங்கள் – தலவிருக்ஷங்கள் ஆகியன.

இந்து மதம் அழியாதிருக்க வேண்டுமென்றால் கடவுட் கொள்கை ஒவ்வொருவர் மனத்திலும் வேரூன்ற வேண்டும். கடவுட் கொள்கை என்று கூறும் பொழுது நமது ஆலயங்களின் அமைப்பு முறை கடவுளர் உருவதத்துவ உண்மைகள், வழிபடும் வகை, வழிபடும் முறை, வழிபாட்டு வளர்ச்சி முறை என்பவற்றை ஒவ்வொருவரும் உணர்ந்திருத்தல் மிகமிக அத்தியாவசியமானது.

ஆலய வழிபாட்டிற்கு அடுத்தபடியாக நமது மதத்தின் ஆணிவேராக இலங்கும் வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், பிரபந்தங்கள் தேவாரம், திவ்யப் பிரபந்தம், திருமுறைகள் இவற்றிலும் மக்களுக்கு, சிறப்பாக வளரும் இளம் சிறார்களுக்கு, இளைஞர்களுக்கு, ஆசிரியர்களுக்கு போதிய ஆழ்ந்த அறிவு இருக்க வேண்டும்.

மேலும் பண்டிகைகள், விழாக்கள் இவைகளைக் கொண்டாடும் முறைகள், கொண்டாட வேண்டியதன் அடிப்படைக் காரணம் இவைகளின் தெளிவும் மக்களைச் சென்றடைய வேண்டும்.

தமிழின் முப்பெரும் பிரிவுகளான இயல், இசை, நாடகம் இம்மூன்றுமே வாழ்வின் நோக்கத்தைச் செம்மைப்படுத்துவன. மக்களின் உள்ளங்களிலே ஆழ்ந்து உறைந்து போயிருக்கும் நுண்உணர்வுகளைத் தூண்டும் பெற்றிமை வாய்ந்தன. எண்ணங்களின் கனதியைக் குறைத்து இலேசாக்கி, வாழ்வைப் பொருள் உள்ளதாக ஆக்குவன.

மேலே குறிப்பிட்ட பணிகளை தங்களால் இயன்ற அளவு முழுமையோடும், அர்ப்பணிப்பு உணர்வோடும் மக்களிடையே எடுத்துச் செல்லும் ஊடகமாக நின்று செயல்படுவது, இந்து சமய கலாசார அலவல்கள் திணைக்களம். தான் கொண்ட பெயருக் கேற்பவே இந்து மதத்திற்கும், சைவசமயத்திற்கும், தமிழ் கலாசாரத்திற்கும் பெரும்பணி புரிகின்றது.

இலங்கையின், ஆலயங்கள், பலவும், வரலாற்றுச்சிறப்பும், தலச்சிறப்பும் கொண்டவைகளாய் இலங்குகின்றன. ஒருசில பெரிய ஆலயங்களைத் தவிர்த்து பல்வேறு ஆலயங்கள் பொருள் வசதியற்றும், தக்க பேணுவார் இல்லாமையாலும், சமய வழிமுறைகள் தெரியாததினாலும் புறக்கணிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட மிகவும் வசதி குறைந்த ஆலயங்களுக்குத் தங்களுடைய குறைந்த நிதி ஒதுக்கீட்டின் நிலைமையிலும், பொருள் உதவி தந்து அவ்வாலயங்களை ஊக்கப்படுத்துகின்றது இந்து சமயத்திணைக்களம். அவ்வாலயங்களின், பிணக்குகளைத் தீர்த்தும், தக்க ஆலோசனைகளைக் கூறியும் நெறிப் படுத்துகின்றது. கும்பாபிஷேகம், திருவிழாக் காலங்களில், பணிப்பாளர், அல்லது திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு செய்யும் பணிகளுக்கு உரமூட்டுகின்றனர். மாதம் ஒரு முறை நம்நாட்டு அறிஞர்களைக் கொண்டோ அல்லது இந்தியா முதலிய நாடுகளிலிருந்து வரும் அறிஞர்களைக் கொண்டோ இந்து சமய உண்மைகளைத் தெளிவுபடுத்தும் சொற்பொழிவுகளை நாடு முழுவதும் சென்று பரவலாக எடுத்துக் கூறச் செய்கின்றனர்.

சைவசமய உண்மைகளை மக்களின் மனத்தில் பதிப்பதற்கு ஆசிரியர் கருத்தரங்குகள் அறநெறிப்பாடசாலைகளுக்கான கருத்தரங்குகள், அருள்நெறி விழாக்கள் போன்றவற்றை நாடளாவிய ரீதியில் நடாத்தி மக்களுக்கும், திணைக்களத்திற்கும் தொடர்பு ஏற்படுத்தி அதன்மூலமாக சமயப்பணி ஆற்றுகின்றனர். ஒவ்வொரு அறநெறிப் பாடசாலைக்கும் தேவையான நூல்கள், ஏடுகள் (கொப்பிகள்) போன்றவற்றை இலவசமாக வழங்குகின்றனர்.

திருமுறைப் பண்ணிசை வளர்ச்சிக்குத் தக்க பாவாணர்களைக் கொண்டு பண்ணிசை வகுப்புக்கள், கருத்தரங்குகள். வதிவிடக் கருத்தரங்குகள் போன்றவற்றை உணவும் உறையுளும் போக்கு வரத்துத் தொகையும் சுருதிப் பெட்டி போன்ற இசைக் கருவிகளையும் அளித்து முழு மூச்சுடன் செயல்படுத்துகின்றனர். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் போன்றோரை அழைத்து இலக்கிய, சமய, விவாத அரங்குகளையும் ஆய்வரங்குகளையும் ஒழுங்கு செய்கின்றனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இந்துமத் சைவசமய சம்பந்தமான கலைக் களஞ்சியத்தினைத் தக்க அறிஞர்களைக் கொண்டு தொகுத்து மூன்று தொகுதிகள் வெளியிட்டுவிட்டனர். நான்காவதும் வெகுவிரைவிலே வெளிவரும் ஐந்து, ஆறின் வேலைகள் தொடர்கின்றன.

தீபாவளி, பொங்கல், சித்திரைப் புத்தாண்டு, நவராத்திரி, திருக் கார்த்திகை, மகாசிவராத்திரி போன்ற விழாக்களையும், விரதங்களையும் தக்க

முறையில் நடாத்துகின்றனர். சிறந்த ஆக்கங்களைத் தாங்கி ஆய்விதழாக பண்பாடும், தகவல், இதழாக 'கோபுரமும்' வெளிவருகின்றன.

இயல் தமிழுக்கு மட்டுமன்றி இசை, நாடக வளர்ச்சியிலும் மிகுந்த அக்கறை காட்டுகின்றார்கள். கர்நாடக இசை வல்லுநர்களின் கச்சேரிகள், தியாக ராஜ உற்சவம் இவைகளை மற்றைய கழகங்களுடன் இணைந்தும், தனித்தும் கொண்டாடுகின்றனர். நாடகக் கலையை ஊக்குவிக்கு முகமாகப் போட்டி நடாத்தி அதில் சிறந்தவற்றிற்கு பணப்பரிசு வழங்கி நீறுபூத்த நெருப்பாக உள்ள நடிப்பாற்றலை வெளிக் கொணரத் தம்பங்கை நல்குகின்றனர். நாடகங்களை மட்டுமல்ல, ஆதரிப்பார் இன்மையால் அருகிவரும் நாட்டுக் கூத்திற்கும் தக்க இடத்தை அளித்து அக்கலைஞர்களின் மனத்தில் புதுத் தென்பையும், ஊக்கத்தையும் பாய்ச்சுகின்றார்கள்.

எழுத்தாளர்களை கௌரவிக்கும் வகையில் ஆண்டு தோறும் பல எழுத்தாளர்களின் ஆக்கங்களைத் தேர்ந்தெடுத்துப் பரிசும் பாராட்டும் வழங்குகின்றார்கள்.

இப்படி ஒரு ஆண்டின் முன்னூற்று அறுபந்தைந்து நாட்களும் கடிகாரச் சுழல் போலப் பணிகளைத் திட்டமிட்டுச் செவ்வனே நடத்தும் இந்து சமய கலாசாரத் திணைக்களத்தினரின் தொண்டுகளை விரிக்கின் மிகும்.... தொகுக்கின் எஞ்சும். பணிப்பாளர் முதல் வாகனம் ஓட்டுனர்வரை அனைவரும் ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் சேவை புரிவதைக் காணும் பொழுது அவர் தம் பணிகளை மனந் திறந்து வாழ்த்தவே தோன்றுகிறது.

*தொண்டுள்ளம் வாழ்க!!!*

## சற்குரு தியாகராஜர் உற்சவம்

*இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலைக்கழக சங்கீத, பரதநாட்டியக் குழுவுடன் இணைந்து ஏற்பாடு செய்த சற்குரு தியாகராஜர் உற்சவம் ஜனவரி மாதம் 16ஆம் திகதி மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சிக்கு இந்திய தூதரக உதவித் தூதுவர் திரு. பி. எஸ். பிரகாஷ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். இந்தியத்தூதரக அதிகாரி திரு. இளங்கோ, கலாசார சமய அலுவல்கள் அமைச்சின், மேலதிக செயலாளர் திருமதி. ஆர். கைலாசநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.*

*இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார். சங்கீத, பரத நாட்டிய குழுவின் தலைவர் ஸ்ரீமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார். திருமதி. ஆர். கைலாசநாதன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார்.*

*இவ்வுற்சவத்தில், தாள வாத்திய, கர்நாடக இசைக் கலைஞர்கள் பெருமளவிற் கலந்து கொண்டு இசை ஆராதனை நிகழ்த்தினர்.*

# இந்து சமய கலாசார திணைக்களத்தின் செயற்பாடுகள்

திருமதி பூமணி குலசிங்கம்

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கையின் சுதந்திரப் பொன் விழாவை ஒட்டி கோபுரம் சிறப்பு மலர் வெளியிடுகின்றதென்பது பாராட்டத்தக்கதாகும். இம்மலரில் திணைக்களத்தின் சில செயற்பாடுகளை விளக்கும் சிறு கட்டுரை எழுதும் வாய்ப்பினைத் பெற்றமைக்கு மகிழ்ச்சியடைகின்றேன்.

மாண்புமிகு பி.பி தேவராஜ் அவர்களின் காலம் தொட்டு இத்திணைக்களத்தின் செயல்கள் விரிவடைந்து, இந்து சமயம் சமூக மேம்பாட்டிற்கு அயராது உழைத்து வருகிறது. தனிமனிதனின் நெறிமுறையான வாழ்வும், சமூகநலனையும் இலக்காகக் கொண்டு தமிழ் மொழி இலக்கியம், கல்வி கலாசார விருத்தியிலும் தரம் உயர்த்தலிலும் மகத்தான தொண்டாற்றி வருகிறது. இவற்றை நடைமுறைப் படுத்துவதில் திணைக்கள உத்தியோகத்தரின் ஒத்துழைப்பு பாராட்டத்தக்கது.

## அறநெறிப் பாடசாலை

இந்துச் சிறுவர்களின் வாழ்வினை வளம் படுத்த, இந்துக் கலாசாரம் வகுத்துள்ள அறநெறிகளைக் காத்து வளர்க்கும் முகமாக ஓர் அறநெறிப் பாடசாலைத் திட்டம் 1991ம் ஆண்டில் அமுலாக்கப்பட்டது. சமயத்தை அறிவு பூர்வமாகக் கற்பிக்காது சமய வாழ்வினை மேற்கொண்டு வளர்ந்தோர் ஆதரவுடன் ஆளுமை நிறைந்தோராகும் வண்ணம் மனப்பாங்கு விழுமியத் தோற்றத்திற்காகவே இப்பாடநெறி வரையப்பட்டது. இதில் இன்றைய கல்வி நோக்கங்கள் யாவும் அடங்கியுள்ளன. இப்பாட நெறியினை அமுலாக்குவதற்கு ஆசிரியப் பயிற்சி நெறிகளும், கருத்தரங்குகளும், புத்தூக்க வகுப்புகளும் நடாத்தப்படுகின்றன. அறநெறிப் பாடசாலைகளை முறையாகக் கண்காணிக்கின்றனர். காணும் குறைபாடுகளை நீக்கும் முயற்சிகளில் கலாசார உத்தியோகத்தினர் ஈடுபடுகின்றனர். கற்பித்தலுக்கு உதவியான பாடநூல்களும், உபகரணங்களும்வழங்கப்படுகின்றன. சிறுவர்களின் ஆக்கத்திறன்களை வளர்க்கும் முகமாக சித்திரம், கோலம் போடுதல், பூஜை, சமயவிழா, அலங்காரம் பூமாலை கட்டுதல் போன்றன இடம் பெற்றுள்ளன. உணர்வுகளைப் பக்குவப்படுத்தும் வகையில் சங்கீதம், நடனம், நாடகம் நாட்டார் வழக்கியல் போன்றனவும் சிறப்பாகப் பேணப்படுகின்றன. சிறுவர்களுக்கான நூல்களைத் தயாரித்தலும், ஆன்மீகக் கருத்தரங்குகள், போட்டிகள், அறநெறிவிழாக்கள், சமூக சேவைச் செயற்பாடுகள் பேணப்படுகின்றன. இவ்வாறான அனுபவங்கள் அன்பையும் பிறர் நலனையும் வளர்க்கூடியதாக அமைகின்றன.

## விபுலாநந்தர் இசை நடனக் கல்லூரி

விபுலாநந்தர் இசை நடனக் கல்லூரியினை, இருப்பிட வசதிகளுடன் மட்டுநகரில் திணைக்களம் நடாத்தி வருகிறது. கல்லூரியின் தரத்தினை உயர்த்தும் வண்ணம் ஆண்டுதோறும் விரிவுரையாளர்களுக்கு புத்தூக்க வகுப்புகளும்,

கருத்தரங்குகளும் ஒழுங்கமைக்கப்படுகின்றன. கல்லூரியின் கலைத்திறனை வெளிப் படுத்துவதற்கு தகுந்த சந்தர்ப்பங்களையும் திணைக்களம் அளிக்கின்றது.

## வேறு நிகழ்ச்சிகள்

இந்து சமய சம்பந்தமான விரிவுரைகளும், கருத்தரங்குகளும், செயல் அமர்வுகளும் முறையாகத் திட்டமிட்டு, அவ்வத்துறைகளில் பாண்டித்தியம் பெற்றோரை வரவழைத்து நடாத்தியும் வருகின்றனர். இது ஓர் மகத்தான சமூகப் பணியாகும். அத்துடன் சமயத்திற்கும் சமூகத்திற்கும் தொண்டு புரிபவர்களைக் கௌரவித்து பாராட்டு விழா எடுப்பது சகலரையும் ஊக்குவித்து உற்சாகமூட்டுகின்றதாக அமைகின்றது.

இந்துக் கலைக் களஞ்சியத் தயாரிப்பு, திருக்கோயில்களின் வரலாற்று நூல்கள் சைவ நாயன்மார், சமயப் பெரியார் சேவைகள் குருபூசைகள், இந்து சமயத்தைக் காக்க வல்லதாயுள்ளன.

தைப்பொங்கல், நவராத்திரி, சிவராத்திரி, புதுவருடப் பிறப்பு, தீபாவளி போன்ற விசேட விழாக்களை முறையாக நடாத்தி வருவது, கலாசாரத்தினை பேணி ஆன்மீகப் பண்புகள் மலர்விப்பதற்குத் துணையாகும்.

இத்திணைக்களத்தின் பன்முகப்பட்ட முயற்சிகளையும் திறம்பட நடாத்துவதற்கு தகுந்த ஊக்குவிப்பையும் வழிகாட்டலையும் கொடுத்துதவியுள்ள அனைவரும் எமது நன்றிக்கும் பாராட்டிற்கும் உரியவராவர். இத்திணைக்கள உத்தியோகத்தினர் தொடர்ந்தும் ஒருங்கிணைந்து செயற்பட்டு சைவத்தையும் இந்து கலாசாரத்தினையும் காத்து வளர்த்திட இறைவன் அருள் புரிவாராக. திணைக்களத்தின் செயற்பாடுகள் வாயிலாகப் பிறர் நலமும், அன்பும் ஓங்கி வளர்ந்து நாட்டில் சமாதானம், நீதி, அமைதி ஓங்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

## விடாமுயற்சி

இமாலயப் பகுதியில் ஒருமுறை சுவாமி விவேகானந்தர் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு முன்னே பாதை நீண்டு கிடந்தது. போக வேண்டிய தூரம் ஏராளம். அவருடன் சில துறவிகளும் உடன் வந்தனர். அவர்களுடன் ஒரு கிழவரும் வந்திருந்தார். அந்தத் துறவிகள் அனைவரும் ஏழைகள். யாரும் தூக்கிச் செல்ல பணம் தரவியலாதவர்கள்.

நூற்றுக்கணக்கான மைல்களுக்கு வழி முழுவதும் ஒரே மேடும் பள்ளமும்; ஏற்றமும் இறக்கமும். முடிவே இல்லாது செல்லும் அந்த நீண்ட வழியைக் கண்டு முதிர்ந்த துறவிக்கு ஒருசமயம் சோர்வு வந்துவிட்டது. அவர் விவேகானந்தரைப் பார்த்தார்.

"சுவாமி இவ்வளவு தூரத்தை நான் எப்படிக் கடப்பது? இனிமேல் என்னால் நடக்கவே முடியாது. என்னை இங்கேயே விட்டுவிடுங்கள். என் மார்பு வெடித்து விடும் போலிருக்கிறது. . ." என்றார்.

விவேகானந்தர் அவரை அமைதியாகப் பார்த்தார்.

"உங்கள் கால்களுக்குக் கீழே பாருங்கள்!" என்றார்.

அவரும் பார்த்தார்.

"உங்கள் கால்களின் கீழே இருக்கிற பாதை நீங்களே கடந்துவந்த பாதையாகும். உங்கள் முன்னே நீங்கள் காணுகிற பாதையும் இதைப் போன்றதே. அதுவும் விரைவில் உங்கள் கால்களின் கீழே வந்துவிடும்!" என்றார் விவேகானந்தர்.

# மண்ணில் நல்ல வண்ணம் வாழ !

கலாபூஷணம் பெரி. சோமாஸ்கந்தர்

"அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின் நோய் தன்நோய்போல் போற்றாக் கடை". உலகப் பொதுமறையாந்திருக்குறள் மணிவாக்கு இது; மனித வாழ்வின் அடிப்படை விழுமியங்களையும் அதன் அத்தியாவசியத்தையும் சூசகமாக எடுத்தியம்புகிறது. மனிதனுக்கு அறிவினால் மட்டும் பூரணமான வாழ்வு கிடைத்துவிடாது. அறிவிலும் மேலான ஒன்று இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது. அது பிறர்படும் துன்பத்தில் பங்கு கொள்ளல். இதனையே பண்புணர்வு என்பர் சான்றோர். இப்பண்பின் அடித்தளம் ஆன்மீகம் என்பது அனுபவ ரீதியாக அறிந்த அனுபூதி.

இம்மை, மறுமை இரண்டிற்குமான வாழ்வின் ஆதாரம் இல்லறம். இல்லற நெறியில் லௌகீகம், வைதீகம் இரண்டினையும் நிறைவேற்றும் வாய்ப்புக்கள் உள்ளன. லௌகீக வாழ்வுக்கான புறவளர்ச்சியே அறிவியல். அகவளர்ச்சி, மனவளர்ச்சி என்பன பண்பியல்.

வெறும் அறிவினை மட்டும் கொண்டு வாழ்ந்த பேரரசுகளும், தனி ஆன்மீகத்தை மட்டும் கொண்டு வாழ்ந்த பேரரசுகளும் சிறிது காலம் பெரும்புகழுடன் வாழ்ந்து மறைந்துள்ளன என்பதை வரலாறுகள் காட்டுகின்றன. ஆனால் அறிவினையும் பண்பினையும், ஆன்மீகத்தையும் கொண்டு வாழ்ந்த மானிட சமுதாயங்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்த மானிட சமுதாயங்களில் மிகவும் தொன்மை ஆனது சனாதன தர்மமாம் இந்து தர்மம். இந்து சமய நெறியில் அறிவியலும் பண்பியலும் இணைந்திருப்பது கண்கூடு.

*"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்*
*எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை"*

என்ற தேவார மணிவாக்குகள் இதனை தெளிவாக்குகின்றன. இவ்வுண்மைகளை நம் முன்னோர் தெளிவுற தீர்க்கமுற வாழ்ந்து சிறந்து விளங்கினர். இதனால் மேலாக மெய்ஞான தத்துவத்தில் உயர்வுற்றனர்.

கல்வி வெறும் அறிவு மட்டுமென்று வைத்துக் கொள்ளாது ஆன்மீகத்துக்கு மிக அவசியம் என்றுணர்ந்தனர். "கற்றதனால் ஆயபயன் வாலறிவன். நற்றார் தொழல்" என்பது யாவரும் அறிந்து பொதுவுண்மை.

இந்து மதத்தில் கல்வியும் வழிபாடும் இணைந்த முறையிலே தொன்றுதொட்ட காலத்திலிருந்து வந்துள்ளன. வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், இலக்கியம் என்றின்னோன்ன நூல்கள் அனைத்தும் உலக அறிவினை உணர்த்தியதுடன் ஆன்மீகத் தத்துவத்தையும் மிகவும் தெளிவாக்கின.

கோயில்களில் இறைவழிபாடு சிறந்தால் சமுதாயத்தில் அச்சமய நெறிப்பாடும் ஆன்மீக உணர்வும் சிறப்புறும். அறிவுடன் செய்யப்படும் வழிபாடு, பாதையைத் தெரிந்து கொண்டு செல்லும் தெளிவான பயணம். அறிவில்லாமல் செய்யப்படும் வழிபாடு, பாதையறியாது செல்லும் குறைப்பயணம்.

நம் மன்னர்கள் ஆலயங்களிலே கல்வியை வளர்க்கும் முயற்சியை மிகவும் சிரத்தையுடன் மேற்கொண்டனர். ஆலய மண்டபங்களில் கல்வியும் கலைகளும் வளர்க்கப்பட்டன. கலைகளும் கல்வியும் ஆன்மீக வழிபாட்டிற்கு அழைத்துச் சென்றன.

பின்னர் வந்த ஆதீனங்களும் இப்பணியைச் செவ்வனே செய்து இந்து மதத்திற்கு இணையிலா

உரமூட்டின. பிற்காலத்தில் கல்வி ஐரோப்பியர் ஆட்சிக்குட்பட்டபோது நமது சமயக்கல்வியும் ஆன்மீக வழிபாட்டு முறைகளும் தளரத் தொடங்கின.

இந்து சமயத்தை வாழ்வின் பூரணத்துவமான வாழ்க்கை நெறி என்ற உணர்வுடன் கற்று வளர்ந்து சிறக்க வேண்டுமென்ற எண்ணப்பாடு இறுக்க மற்றதாகியது. பாடசாலைகளில் சமய பாடநெறி பெரும்பாலும் போதனா நெறியாகியது. வாழ்வு நெறியாக காட்டப்படவில்லை. பிறமதப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு சமய அறிவென்பது பூஜ்ஜியமானது மட்டுமன்றி அது அவசியமற்றதென்ற நிலையும் தோன்றிற்று.

எத்தனையோ சங்கங்கள், மன்றங்கள், ஆலயங்கள் இருந்தும் அவைகளின் பணிகள் அவ்வப்போது மாநாடுகளையும், கருத்தரங்குகளையும், விழாக்களையும் நடத்துவதுடன் நின்று விடுகின்றன. பெரும் நகரங்களில் இவைகளின் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. நகரில் வாழ்கின்ற குறிப்பிட்ட ஒரு சிலர்க்கு இது பயன் தரலாம். வளர்ந்தவர்க்கு இதன் பயன் அதிகம். ஆனால் நாடளாவிய ரீதியில் இதன்பயன் இல்லாதபோது எம் சமயப் பிள்ளைகள் வேறுவழியின்றி விளக்கமில்லாத நிலையில் பிற மதத்திற்கு மாறிவிடுகிற அவலநிலையும் காணக்கூடியதாகவுளது. நாடளாவிய வகையில் எந்தவொரு அமைப்பும் இப்பணியைத் தொடராதபோது இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இக்குறைபாட்டையும் அவலநிலையையும் நன்குணர்ந்து மேற்கொண்டுவரும் நடவடிக்கை நம் இந்து சமயத்திற்கு ஒரு வரப்பிரசாதம் எனலாம்.

இந்துசமய கலாசார அலுவலங்கள் திணைக்களம் நாடளாவிய வகையில் நடத்தும் அறநெறிப் பாடசாலைகள் குக்கிராமங்கள் முதல் பெருநகரங்கள் வரை இன்று பரவலாகச் செயற்படுகின்றன. பாலர் வகுப்பு மாணவர் முதல் பல்கலைக்கழக புகுமுக மாணவர் வரை பயன்பெறும் முறையில் இப்பாடசாலைகள் இயங்குகின்றன. வெறும் அறிவுக்குரிய வகையில் சமயப் பாடத்தைக் கற்பிக்காமல் வாழ்க்கை நெறியாகக் கடைப்பிடிக்கக்கூடிய பயிற்சிப் பட்டறையாக அறநெறிப் பாடசாலைகள் இயங்குகின்றன. அதற்கான வழி காட்டியாகவும் நெறிப்படுத்தலாகவும் அறநெறிப் பாடசாலைகளுக்கான பயிற்சிக் கருத்தரங்குகள், மாவட்டங்கள் தோறும் அடிக்கடி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்க சிறப்பம்சம்.

வாழ்க்கையின் சமய கலாசார அம்சங்கள் பயிற்சி நெறியாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஒரு பிள்ளை சிறுபராயத்திலிருந்தே சமய வாழ்க்கைக்குரிய பரிபூரணமான அறிவையும் பழக்கத்தையும், ஆற்றலையும், அனுபவத்தையும் பெற்றுக் கொள்ளக்கூடிய கலாசார மறுமலர்ச்சியாக இயங்கி வருகின்றது. மேலும் பல்வேறு சமய விழாக்கள், கலாசார விழாக்கள் என்பனவற்றையும் அவ்வப்போது நடத்தி வருவது நமது சமயத்தின் வாழ்வு நெறியின் யதார்த்தமும் இயற்கையுடன் இணைந்த இயல்பான பண்பாடும், ஒழுக்கசீலமும் உண்மையான தெய்வீக உணர்வும் ஏற்படுவதற்கான அரங்காக அமைந்துள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இப்பணியில் இன்று இந்து சமயத்தில் பரவலான விழிப்புணர்வு தோன்றியிருப்பது எங்கும் காணக் கூடியதாகவுள்ளமை மகிழ்ச்சிக்கு உரியது.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் செய்த பணிகள் அன்றைய காலகட்டத்திற்கு எப்படிப் பொருந்தும்படியாக அமைந்ததோ அதுபோன்று இன்றைய நிலைக்கு அறநெறிக் கல்வியும், அறநெறிப் பாடசாலைகளின் பணியும் பொருத்தமாக உள்ளது.

இந்தப் பெரும்பணியை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் செய்வது காலத்தின் தேவைக்குப் பொருத்தமான பணியாகும். இன்றைய காலகட்டத்தில் இதற்கு இணையான ஒரு சமயப்பணி வேறில்லை என்றால் மிகையாகாது. இந்த நெறியை பேணிக்காப்பது, வளர்ப்பது, ஆக்க பூர்வமான ஆதரவு தருவது நமது ஆத்மீக வாழ்வுக்கான மிகமுக்கியமான கடமை. இதனை நாம் செய்து வருவோமானால் ஐந்தில் வளைந்தது ஐம்பதில் மிக சிறப்பாக வளையும் என்பதற்கேற்ப இந்துசமய வாழ்வு எல்லாரிடத்தும் சிறப்புற ஓங்கும்.

# இந்து சமயத் திணைக்களத்தின்

# ஆன்மீக, அறநெறிப் பணிகள்

கனகசபாபதி நாகேஸ்வரன்
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை
சப்ரகமுவ பல்கலைக்கழகம்

உலகளாவிய சிந்தனையுடையது இந்துமதம். ஆழமான தத்துவார்த்தமும், அனுபவமும் அநுபூதியும் நிறைந்த மதம் இந்துமதம். இந்துக் கல்வி மரபு; இந்துக் கலைமரபு; தொல் பொருளியலாய்வு; சிந்துவெளி பற்றிய வரலாற்றுணர்வு; சாதி சமய பூசல்கள் பற்றிய ஆய்வுகள் என்றும சைவ சமய வரலாற்று வளர்ச்சியில் காணுகிறோம்.

சிவபூமி எனப்பட்ட இலங்கையில் சமயஞ்சார்ந்த பெரும் பூசல்கள் இல்லை. மக்களிடையே மத சமரசம் உள்ளது. இலங்கையில் சமயக்கல்வி வளர்ச்சி நிலைத்துள்ளது. வெகுஜனத் தொடர்புச் சாதனங்களிலும், பத்திரிகைகளிலும் மத கலாசார விழுமியங்கள் உன்னத நிலையில் வளர்ந்து வருகிறது. அதே வேளையில் இந்துசமய வளர்ச்சியும் இந்து சமய இந்து கலாசாரத் திணைக்களத்தினூடாக இலங்கையின் பல பாகங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இன்று 'அறநெறி', அறநெறிப் பாடசாலைகள் ''அறநெறிக் கருத்தரங்கு'' என்னும் பதங்கள் வெகு எளிமை வாய்ந்தவையாக வந்து விட்டன. அறநெறி தொடர்பான சிந்தனையின் வளர்ச்சிகே காரணமாயமைந்து விளங்கும் அரச திணைக்களம் இந்து சமய இந்துகலாசாரத் திணைக்களமாகும். இத்திணைக்களத்துப் பணிகளுள் தலையாயது கொழும்பு தவிர்ந்த பிறமாவட்டங்களிலே மேற்கொள்ளப்படும் சமயக் கருத்தரங்குகளாகும். ''அறம்'' செய்வதற்கும் ''மனம்'' வேண்டும். ''பணவளம்'' 'மணவளம்' அருள்வளம் எனும் மூன்று துறைகளுக்கு கடும் போட்டி நிலவும் காலமிது. இம்மூவளங்களையும் ஓரளவு பயன்படுத்தி நிற்கும் பெருவாய்ப்பு இந்துசமய இந்து கலாசாரத் திணைக்களத்துக்கே வரப்பிரசாதமாகக் கிடைத்துள்ளது. என்பதும் இத்திணைக்களத்தின் பெருமிதங்களுள் ஒன்றாகலாம். அந்த வகையில் அரசு இத்திணைக்களத்திற்கென ஒதுக்கும் நிதியினைக் கொண்டு மனவளமும் அருள்வளமும் வாய்ந்த நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து சென்ற காலத்திலே பழுதிலாப் பணியினை இத்திணைக்களம் புரிந்தே வந்துள்ளது. அதாவது இத்திணைக்களத்தின் சமயப்பணி எல்லாப் பிராந்தியங்களிலேயும் விசாலித்து ஊன்றி நிற்கத்தக்கதொரு வளர்ச்சி நிலையை அடைந்துள்ளது. இந்து சமயம், சைவநெறி காலாதி காலமாகக் கொள்ளும் எதிர்ப்புக்கள் மிக மிக நீண்டதாகலாம். எனினும் இன்னலுக்கும் இடுக்கணுக்கும் மத்தியிலும் உயர்ந்து சிறந்து, உறுதிபடநிற்கும் மதம் இந்துமதம் என்று கூறத்தக்கதான ஒரு நிலைமையை ஏற்படுத்திய பெருமையும் சிறப்பும் இந்து சமய இந்து கலாசாரத் திணைக்களத்துக்கு உண்டு.

இன்னுமொன்று, உத்தியோகத் தோரணையில் மட்டும் பொதுமக்கள் அங்கீகரிக்கும் பணியினைச் செய்து விடமுடியாது.

தனிமனித ஈடுபாடும், சமய நம்பிக்கையும் தளம்பாத கல்வியும் மனித குல மேம்பாட்டுணர்வு நலனும், சீர்திருத்த வேகமும், அறிவுச் சுடர் கொளுத்தும் அவாவும், ஆன்மிக எழுச்சி காணும் உறுதிப்பாடும், சமூக ஒழுங்குமுறை நாட்டமும் இணையும் போதே ''சமயப்பணி'' பெருமையும் மதிப்பும் மேன்மையும் பெறுகிறது. சுயநலப் போக்கினை விலக்கி நிற்கும் நல்லாத்மாக்களின் ''சங்கமம்'' இவ்வளவு காலம் வரை ஏதோ ஒன்றித்து சமயப்பணியை – சமய போதனையை– சமயப்பிரசாரத்தை மேற்கொள்ள உறுதுணை புரிந்துள்ளது. இதன் தாக்கம் பாரியது; பயன்பல விளைப்பது; பொன்னெழுத்துக்களாலே பொறிக்கப்படத்தக்கது. வரன்முறையான பணிகளின் பட்டியலை இங்கு தருவதற்குரிய அவகாசமில்லை. எனினும் பிரதேச ரீதியில் மக்கள் மனதில் துல்லியமாகவும் என்றும் பசுமையாகவும் நினைவிலே நிலைக்கும் கருத்தரங்குகள், பண்ணிசையரங்குகள் பஜனை நிகழ்ச்சிகள், தெய்வீக இன்னிசைச் சொற்பொழிவுகள், பட்டி மண்டபங்கள், அறநெறி வளர்ச்சி ஆலோசனைகள், நூல் அன்பளிப்புகள், அறநெறிப் பாடசாலைகளின் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள்; சமய வாழ்விலே காணப்படும் ஐயங்களுக்கான தெளிவுகள்; நெறிமுறை விளக்கங்கள் என்பன இந்துசமய இந்து கலாசாரத் திணைக்களத்தின் வேலைத்திட்டங்களிலே இடம் பெற்றன. இவை வெகு உற்சாகத்துடன் திணைக்களத்தின் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர்கள் கலாசார உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட்டன.

இந்தப் பணிகள் சிறப்புற நிறைவேற திணைக்களப் பணிப்பாளர் முதல் அனைத்து உத்தியோகத்தர்களும் அளிக்கும் ஒத்துழைப்பு வியந்து போற்றத்தக்கது. தொழிலாகக் கருதாமல் தொண்டாகக் கருதி அவர்கள் பணி செய்கின்றனர். அவர் தம் பணிகள் மென்மேலும் சிறப்பதாக !

## அவளைச் சுமப்பது யார்...?

துறவிகள் இருவர் ஒரு சிற்றூரிலிருந்து மற்றெரு சிற்றூருக்கு நடந்து சென்று கொண்டிருந்தனர். வழியில் ஓர் ஆற்றங்கரையில் ஓர் இளநங்கை உட்கார்ந்து கொண்டு அழுது கொண்டிருந்தாள், அத்துறவிகளில் ஒருவர் அவளருகில் சென்று, "ஏன் அம்மா இப்படி அழுது கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு அவள், ஆற்றின் அக்கரையில் உள்ளது என்வீடு, நான் இன்று விடியற்காலையில் அங்கு இருந்து ஆற்றைக் கடந்து வரும்போது ஆற்றில் வெள்ளம் இல்லை. இப்போதோ ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. நான் எப்படி ஆற்றைக் கடந்து என் வீட்டுக்குச் செல்வேன்? கடந்து செல்ல படகு வசதியும் இல்லையே!" என்றாள்.

அதற்கு அந்தத் துறவி, "அவ்வளவு தானா? இதில் ஒரு கஷ்டமும் இல்லை" என்று கூறி, அவளைத் தூக்கிக்கொண்டு ஆற்றைக் கடந்து சென்று, அக்கரையில் அவளை விட்டு விட்டுத் திரும்பி வந்தார். காத்திருந்த துறவியும் அவருமாகச் சேர்ந்து, தொடர்ந்து வழி நடந்தனர்.

இரண்டுமணி நேரத்துக்குப்பின், அடுத்த துறவி சொன்னார் "சகோதரரே, நாம் துறவு பூண்டபோது எந்தப் பெண்ணையும், எப்போதும் தொடுவதில்லை என்ற விரதத்தை மேற்கொண்டுள்ளோம், நீங்கள் செய்தது ஒரு பயங்கரமான பாவச் செயல். ஒரு பெண்ணைத் தொட்டபோது, ஓர் சலனத்தினை, ஒரு பேருணர்ச்சியினை நீங்கள் அடையவில்லையா...?"

இதைக் கேட்ட துறவி, "நான் அவளைக் கொண்டு போய் விட்டுவிட்டு வந்து இரண்டுமணி நேரமாகிறது. நீங்களோ இன்னும் அவளைத் தூக்கிக் கொண்டே வந்து கொண்டிருக்கிறீர்கள்!" என்றார்.

இப்படித்தான் பலரும் மாசு படிந்த எண்ணங்களை மனதில் சுமந்து கொண்டிருக்கின்றனர்!

- ஜே. கிருஷ்ணமூர்த்தி

# இந்து சமய திணைக்களத்தின் இணையிலாப்பணிகள்

- கவிஞர் அகளங்கன்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிகளை முழுமையாக மதிப்பிடுவதென்பது மிகப் பெரியதொரு காரியமாகும்.

இருப்பினும் 1991ம் ஆண்டிலிருந்து இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தோடு பலவகையிலும் தொடர்புள்ளவன், பல விழாக்களில் பங்குகொண்டவன், என்ற வகையில், இக்கட்டுரையை என் நினைவுகளிலிருந்து இரைமீட்டு எழுதுகின்றேன்.

## அறநெறிப் பாடசாலை

கல்வியைப் பற்றிய வரைவிலக்கணங்கள் பல்வேறு வகையாக அமையலாம். காலத்தையும், இடத்தையும் பொறுத்து அவை மாறுபடலாம். சமய அடிப்படையில் கல்வியின் வரைவிலக்கணம், கல்வியின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே அமைகிறது.

கல்வி என்பது பொருள்தேடுவதற்கோ, புகழ்தேடுவதற்கோ மட்டும் உரியதொன்றல்ல. மனிதப் பண்பை வளர்த்து மனிதர்களைப் புனிதர்களாக்குவதற்குரியது. மனிதர்கள் புனிதர்களாவது உலகியலின் உயர் நோக்கம். அப்புனிதர்கள் தெய்வங்களாவது ஆன்மீக நோக்கம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் நிலையை கல்வி மனிதர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பது இந்துசமயக் கல்விக் கோட்பாடு.

அரம் போன்ற, புத்திக் கூர்மை படைத்தவர்களாக இருந்தாலும், மக்கட் பண்பில்லாதவர்கள் மரம் போன்றவர்களே. எனவே கல்வி புத்திசாலிகளை உருவாக்கும் நோக்கம் கொண்டதல்ல. மக்கட் பண்புள்ளவர்களை உருவாக்குவதே.

அதுமட்டுமன்றி கல்வியின் அதி உயர் பயன் கடவுளை வழிபடுதல். வாலறிவன் நற்றாள் தொழாத படிப்பாளியினால் பயன் இல்லை.

அதனால் மனிதப் பண்புகளை வளர்த்து உயர்ந்த ஒழுக்கம் மிக்க ஒரு சந்ததியை உருவாக்குவது எமது கடமையாகும். மனிதப் புனிதர்களை அறநெறிக் கல்வி மூலமே உருவாக்கலாம் என்ற நம்பிக்கையில் இந்து சமய கலாசாரத் திணைக்களம் அறநெறிப் பாடசாலைகளை மாவட்டங்கள் தோறும் நடாத்தி வருகின்றது.

இவ்வறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான பல நூல்களையும் அச்சிட்டு இலவசமாக விநியோகித்து வருவதுடன் வருடந்தோறும் பரீட்சைகளையும் நடாத்திச் சான்றிதழ்களையும், நூல்களையும் வழங்கி வருகின்றது. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளையும் மாவட்டங்கள் தோறும் நடாத்தி வருகின்றது. இது ஒரு வெற்றிகரமான செயற் திட்டமாக நிறைவேறிவருகிறது.

## பண்பாடு, கோபுரம்

தமிழ், சமய அறிவை மக்கள் மத்தியில் பரப்புவதற்காக இத்திணைக்களத்தால் "பண்பாடு" என்ற பருவ இதழ் வெளிவருகிறது. தமிழ் மொழி சம்பந்தமாகவும், இசை, நாடகம், சம்பந்தமாகவும் பல ஆய்வுக் கட்டுரைகள், இச்சஞ்சிகைகளில் வெளிவருகின்றன.

இந்து சமயக் கலைகள், பண்பாட்டு விழுமியங்கள் சம்பந்தமான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வந்த அவ்விதழ்களில் பல அரிய கட்டுரைகள் பல்துறை சார்ந்தனவாகவும் வெளிவருகின்றன.

கோபுரம் என்ற தகவல் இதழை மிகவும் சிறந்த முறையில் இத்திணைக்களம் வெளியிடுகிறது. திணைக்களச் செய்திகளோடு இந்துசமயம் சம்பந்தமான பல அரிய கட்டுரைகள் இவ்விதழில் பலராலும் எழுதப்படுகின்றன. இது தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது.

## நூற்பதிப்பு

கிடைத்தற்கரிதாக இருக்கும் நூல்களைத் தேடித் தெரிந்து மறுபதிப்புச் செய்யும் பணி நூற்பதிப்புப் பணியில் விசேடமான பணியாகும். இந்த வரிசையில் பல அரிய நூல்கள் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன. சுவாமி விபுலானந்தரின் மதங்க சூளாமணி, கதிரைமலைப் பள்ளு, ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு, முதலானவை குறிப்பிடத்தக்கன.

இவற்றோடு இந்துசமய சாரம், சிவாலய தரிசன விதி, சைவ சித்தாந்த அறிவாராய்ச்சியியல் ஒரு அறிமுகம், பன்னிருமாத நினைவுகள் முதலானவையும். அவ்வப்போது நடாத்தப்படும் ஆய்வரங்குகளில்சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகளின் தொகுப்புக்களும் குறிப்பிடத்தக்கன.

## இந்துக் கலைக் களஞ்சியம்

சிறந்த அறிஞர்களைக் கொண்டு எழுதப்பட்டு, வெளியிடப்பட்ட இந்துக் கலைக் களஞ்சியங்கள் பெருமையோடு பெரிதும் பேசப்படத் தக்கன. இது உலகிலேயே முதன் முயற்சி என்று பெருமைப்படலாம். மிகச் சிறந்த வகையில் இந்துக் கலைக் களஞ்சியங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இப்பணியை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தொடரும் என்று நம்பிக்கை உண்டு.

## நூல் கொள்வனவு

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களால் எழுதி வெளியிடப்படும் நூல்களை அவற்றின் தரத்திற்கேற்ப கொள்வனவு செய்து எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பணியை இத்திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. இதனால் பல எழுத்தாளர்கள் பயனடைகின்றார்கள். பல நூல்களும் வெளிவருகின்றன.

## புத்தகக் கழகம்

புத்தகக் கழகம் என்ற அமைப்பின் மூலம் பல அரிய நூல்களை இந்தியாவிலிருந்து தருவித்து அவற்றை மலிவு விலையில் விற்பனை செய்து, பல அறிஞர்களுக்கு, கிடைத்தற்கரிய நூல்கள் கிடைத்தற்கு வழி செய்துள்ளது.

## விழாக்களும் விருதுகளும்

பக்திப் பெருவிழா, அருள்நெறிவிழா பொங்கல்விழா, சிவராத்திரிவிழா, முதலான பல விழாக்களைத் தலைநகரிலும், மாவட்டங்களிலும் நடாத்தி தமிழ், சமய அறிவையும் உணர்வையும் மக்கள் மத்தியில் ஊட்டி வருவதோடு, இவ்விழாக்களில் எமது பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகளை நடாத்தி அவ்வரிய கலைகள் அழிந்து போகாமல் காக்கும் பெரும் பணியையும் இத்திணைக்களம் செய்து வருகிறது.

இலங்கைத் தமிழ்ப் பாரம் பரியக் கலையரங்கு என்ற நிகழ்வு இதற்குச் சான்றாகும். முன்பு தேசிய சாகித்திய விழாக்களையும் இத்திணைக்களமே நடாத்தியது. இவ்விழாவில், சிறந்த நூல்களுக்கான பரிசுகளும், விருதுகளும் வழங்கப்பட்டன.

தமிழ்மணி, தமிழ்ஒளி, இலக்கியச் செம்மல், இலக்கிய வித்தகர், தொடர்பியல் வித்தகர் முதலான பட்டங்களையும் வழங்கி எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் ஊக்குவித்துக் கௌரவித்தது. பின்பு கலாசார அமைச்சு சாகித்திய விழாவைப் பொறுப்பேற்றபின் திணைக்களம் அமைச்சுக்கு அனுசரணையாகத் தேர்வுகளை நடாத்தி முடிவுகளை அறிவித்து வருகிறது.

ஆன்மீகப் பெரியோருக்கு இறைபணிச் செம்மல், ஞானசிரோன்மணி, கலாபூஷணம் முதலான பல விருதுகளை இத்திணைக்களம் வழங்கியுள்ளது.

கடந்த ஆண்டுகளில், பரத நாட்டியம், வயலின், வாய்ப்பாட்டு, அருங்கலைகள், இலக்கியம், மரபுவழிக் கலைகள், மிருதங்கம், நாட்டுக்கூத்து, கர்நாடக சங்கீதம், ஓவியம், தவில், வில்லுப்பாட்டு, தம்புரா, நாதஸ்வரம், கரகாட்டம், சிற்பத்துறை எனப் பல்துறை சார்ந்த கலைஞர்களுக்கும் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்க திணைக்களம் அநுசரணை தந்துள்ளது.

## சொற்பொழிவுகள்

மாதம் தோறும் தலைநகரில் சிறந்த சொற்பொழிவுகளை, இலங்கை அறிஞர்கள் மூலமும், இந்திய அறிஞர்கள் மூலமும் இத்திணைக்களம் நடாத்திவருகின்றது. இப்பொழுது இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு மாவட்டந்தோறும் சொற் பொழிவுகளை நடாத்தி வருகின்றது.

## போட்டிகள்

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பண்ணிசைச் போட்டிகள், பேச்சுப் போட்டிகள், சமய அறிவுப் பரீட்சை முதலானவற்றோடு நாடகப் பிரதியாக்கப் போட்டி, நாடகப் போட்டி என்பவற்றையும் இத்திணைக்களம் நடாத்துகின்றது.

## கருத்தரங்குகள்

தமிழ்மொழி வளர்ச்சிக் கருத்தரங்குகள், தமிழ் நாடகக் கருத்தரங்குகள், நாட்டார் வழக்காற்றியல்க் கருத்தரங்குகள் எனப் பல கருத்தரங்குகளை நடாத்தி, ஆய்வுக் கட்டுரைகளை நூல்வடிவிலும் கொண்டு வந்திருக்கிறது.

## நிதி உதவிகள்

ஆலயப் பணிகளுக்கும், அறநெறிப் பணிகளுக்கும் மட்டுமன்றி தனிப்பட்ட எழுத்தாளர்களுக்கும் அவர்களது தேவையறிந்து இத்திணைக்களம் நிதியுதவி செய்துள்ளது. இந்நிதி உதவி இலங்கையின் பலபாகங்களிலுமுள்ள ஆலயங்களுக்கு பெரும் நன்மையைச் செய்வதாக அமைந்துள்ளது.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் வளர்க்குமுகமாகவும், இந்துசமய ஒழுக்கத்தை இந்துக்கள் நன்கறிந்து கடைப்பிடித்து நன்மையடையும்படியாகவும் இப்பணிகள் அமைந்துள்ளன.

முடிந்த அளவு செம்மையாக இப் பணிகளை இத்திணைக்களம் செய்துவருவது பாராட்டுக்குரியது.

வைக்கப்பட்டுள்ள அகலக்கால்கள் நன்றாக ஊன்றப்படவேண்டும். இன்னும் சில பணிகள் உள. அவற்றையும் தொடங்க வேண்டும். தலைநகருக்கு வெளியிலே, இப்பணிகள் விரிவுபடுத்தப் படவேண்டும்.


இந்துத் தமிழ்ப் பண்பாடு செழித்து வளர்ந்து மானுடப் பண்புகள் மாண்புற இத்திணைக்களப் பணிகள் தொடரட்டும்.

★ தாம் செய்த நல்லது, தீயது இரண்டின் பலனையும் மனிதர் அநுபவித்தே தீர வேண்டும். அது கர்ம நியதி.

★ ஒழுக்கம், நேர்மை இல்லாமல் பெறப்படும் எந்த வெற்றியும் நிலைக்காது.

# வழிகாட்டும் ஒளி விளக்கு

சுவாமி சின்மயானந்தா



என்னைப்போல சாமியார் ஒருவரிடம் ஏழை ஒருவன் வந்து சேர்ந்தான். பார்க்கவே ரொம்பப் பரிதாபமாக இருந்தது. சாமியார் அவனுக்குச் சாப்பாடு போட்டார். கையில் செலவுக்குப் பணம் கொடுக்க வந்தார்.

அவன் அதை வாங்கிக் கொள்ளவில்லை. "ஏன்? என்னப்பா சமாசாரம்?" என்று கேட்டார் சாமியார்.

"எனக்கு, உழுது வேலை செய்யக் கொஞ்சம் நிலம் கொடுங்கள். கொஞ்சம், ஏதோ அரை ஏக்கர் இருந்தாலும் போதும்" என்று கெஞ்சிக் கேட்டான்.

சாமியார் யோசனை செய்துவிட்டு "ஊர் எல்லையில் ஒரு அரை ஏக்கர் துண்டு நிலம் இருந்ததே, அதை இவனுக்குக் கொடுத்து விடு" என்று தன் சிஷ்யனிடம் சொல்லி அனுப்பினார்.

அதைப் போய்ப் பார்த்த ஏழை அசந்து போனான். அவ்வளவும் தரிசு நிலம். ஒன்றுமே முளைக்காத கட்டாந்தரை. இருந்தாலும் அவன் தயங்கவில்லை. அதில் கிணறு தோண்டினான். சாணம், எரு எல்லாவற்றையும் கொண்டு வந்து போட்டான். இரவு பகலாக அங்கே வேலை செய்தான். ஆறு மாதங்களில் அங்கே பச்சைப் பசேலென்று ஒரு தோட்டம் உருவாகிவிட்டது.

அந்தப் பக்கமாக ஒரு நாள் வந்து கொண்டிருந்த சாமியார் அந்தத் தோட்டத்தின் அழகைப் பார்த்து பிரமித்துப் போய் நின்றார். விவசாயி அவரை அடையாளம் கண்டு கொண்டு வெளியே ஓடிவந்தான். அவருடைய காலில் விழுந்து கும்பிட்டான்.

"யாரப்பா நீ?" என்று கேட்டார் சாமியார். உண்மையாகவே அவருக்கு ஞாபகம் இல்லை.

"மறந்து போயிட்டீங்களா சாமி! இந்த நிலம் நீங்க எனக்குக் கொடுத்தது தானுங்களே?" என்று கும்பிடு போட்டான் விவசாயி.

சாமியார் பிரமிப்புடன் "அட! அந்த நிலமா இது? எவ்வளவு அழகானதோட்டமாக ஆகியிருக்கிறது? நீயும் கடவுளுமாகச் சேர்ந்து இப்படி ஒரு அபூர்வமான சாதனையை முடித்து விட்டீர்கள் அப்பா!" என்று மனம் கனியச் சொன்னார்.

விவசாயி பதில் சொல்லவில்லை, கொஞ்சம் தயங்கினான்.

"என்னப்பா தயக்கம்? சொல்லேன்" என்று கேட்டார் சாமியார்.

"தாங்கள் பெரியவர்கள். நான் சொன்னால் நல்லா இருக்குமா?" என்று இழுத்தான் விவசாயி.

"பரவாயில்லை, சொல்லு."

"ஆறு மாசத்தில் நானும் கடவுளுமாகச் சேர்ந்து இந்தத் தோட்டத்தை உருப்படியாக்கிக் கொண்டு வந்தோம்னு சொன்னீங்களே சாமி! உண்மைதான். ஆறு மாசத்துக்கு முன்னாலே இங்கே கடவுள் மட்டும்தான் இருந்தார். கேட்பதற்குக் கூடவேறு யாரும் இல்லை."

சாமியார் சிரித்துக் கொண்டார். "அப்போது நீயும் இருந்தாய் அல்லவா?

"இருந்தேன்."

"நிலமும் இருந்தது அல்லவா?"

"இருந்தது!"

"நல்லது. அப்போது நீயும் இருந்தாய்; கடவுளும் இருந்தார். இந்த நிலம் கேட்பாரின்றித் தரிசாகக் கிடந்தது. நீ உழைத்தேன் என்று சொன்னாய், ஆனால் யோசித்துப் பார். உன்னால் ஒரு விதைக்கு உயிர் கொடுக்க முடியுமா? ஒரு செடியை முளையிலிருந்து இழுத்து வெளியே கொண்டு வர முடியுமா? நீ இருந்தால் போதாது. உன் உழைப்பும் கடவுளின் துணையுடன் சேர வேண்டும். அந்த அருளும் கிடைக்க வேண்டும். அப்போதுதான் தரிசு நிலம் பசுமையான தோட்டம் ஆக முடியும். புரிகிறதா?" என்று கேட்டார் சாமியார். விவசாயி வெட்கித் தலையைக் குனிந்து கொண்டான்.

இறைவன் நமக்குள்ளேயே இருக்கிறான். அவனுடைய அருளின் துணையுடன் மனத்தைத் திருத்தித் தூய்மையாக்கிக் கொள்ள வேண்டும். அப்போது அந்த மனம் எப்படி இருந்தாலும் அங்கே ஆன்மப் பயிர் விளையும் - தரிசு நிலம் தோட்டம் ஆவதைப் போல !

# இலங்கையில் இந்து சமயம்

## ஒரு நோக்கு

பிரம்மஸ்ரீ சோ. குஹானந்த சர்மா

சிவபூமி என இராவணனால் போற்றிப் புகழப்பட்ட இலங்கைத் தீவில் சைவம் என்றும் நிலைத்து வருகின்றது. இடையிடையில் அனர்த்தங்கள் வந்தாலும் மக்களின் அளவுகடந்த பக்தி காரணமாக சைவம் வளர்ந்து கொண்டே வருகின்றது. பக்தரின் விரத அனுஷ்டானம், வாழ்க்கை நெறி, பக்தி மயம் என்பனவே இதற்கான காரணம் எனலாம். இந்நோக்கில் சைவம் காக்கும் நிலைகளை ஈண்டு நோக்குவோம்.

### கோவில் நிர்மாணம்

குலதெய்வ மேம்பாடு இலங்கையில் பண்டுதொட்டு இருந்து வருகின்றது. குலதெய்வமே வழிவிடும் என்ற இறுக்கமான பக்தி நிலையே ஆலயங்களின் வளர்ச்சிக்குக் காரணமாக உள்ளதெனலாம். இதனால் ஆலயங்கள் புதிதாகவும், புனர்நிர்மாணிக்கப்பட்டும் வருகின்றன. மேலும் இராஜ கோபுரங்கள் புதிதாக வானோக்கி எழுந்துள்ளன. புதிய அழகிய சித்திரத் தேர், மஞ்சம், கண்கவர் வாகனங்கள் என்பன கூட ஆலயங்களில் செய்யப்பட்டுள்ளன.

### கிரியைகள்

ஆலயங்களில் நடைபெறும் கிரியைகளை நோக்குமிடத்துக் கும்பாபிஷேகக் கிரியைகள் விரிவாக நடைபெறுகின்றன. 33 குண்டங்கள், 17 குண்டங்களுடன், சிறப்புக் கிரியைகளுடனும் கும்பாபிஷேகங்கள் இடம்பெற்றுள்ளன. பக்தி பூர்வமான திருவிழாக்கள் நடைபெறுகின்றன. பூங்காவனத் திருவிழா மிகவும் பிரபல்யம் வாய்ந்தது.

வல்வெட்டித்துறை, புத்தூர், ஆவரங்கால், சிவாலயங்கள் செட்டித்தெரு, சம்மாங்கோடு ஜிந்துப்பிட்டி முருகன் ஆலயங்கள் பல்லாண்டு காலமாக உள்ளூர், இந்தியக் கலைஞர்களுடன் ஆலயங்களில் திருவிழா நடத்தும் பாங்குமிகப் பெரியது. கிரியையும் விழாவும் பக்தர்களுடன் தனிச் சொத்தாக இங்கே மிளிர்கின்றன.

லக்ஷார்ச்சனை, கணபதி ஹோமம், என்பனவும் திருவிளக்குப் பூஜையும் பல ஆலயங்களில் நடைபெறுகின்றன. இதனுடன் வருடாந்தப் பொங்கல், மடை என்பனவும் வழமைபோல கோவில்களில் இடம்பெறுகின்றன.

முன்னேஸ்வரத்தில் பேராசிரியர் சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள், ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமான சிவஸ்ரீ கா. இரத்தினகைலாசநாதக் குருக்கள் ஆகியோரால் வசந்த நவராத்திரி ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுதும் வசந்த நவராத்திரி சிறப்புற நடைபெறுவதை இங்கு குறிப்பிடலாம்.

### மிருகபலி

இலங்கையில் இருந்து வந்த இந்து ஆலய மிருகபலியை அரசாங்கம் சட்ட பூர்வமாகத் தடைசெய்துள்ளது. முன்னைநாள் பிரதேச அபிவிருத்தி, இந்து சமய அமைச்சர் திரு. செல்லையா இராசதுரையே இதற்கு முயற்சி செய்து மக்களைத் தர்ம வழிக்குத் திருப்ப உதவினார்.

அனர்த்தங்கள் காரணமாக இன்று சில ஆலயங்கள் பூட்டப்பட்டு, இடிபாடுகளுடன் இருந்தாலும் மக்களின் சிக்கெனப் பிடித்த சமய வாழ்வு இன்றும் அவ்வாலய மூர்த்திகளின்பால் உள்ளன. கதிர்காமம், செல்வச் சந்நிதி போகமுடியாத காலத்திலும் 'கதிர்காம முருகா, செல்வச் சந்நிதி முருகா' என முருக நாமத்துடன் விரத அனுஷ்டானங்களை மக்கள் பக்தியுடன் மேற்கொள்கின்றனர்.

### புராண படனம்

ஆலயங்களில் புராண படனம் வழுவாது இடம்பெறுவதால் புராண படன கலாசாரம் ஒன்று உருவாகியுள்ளது. விரதம், பூஜை, விழா என்பன சிறப்புற உள்ளன.

கண்ணகி கோவலன் கதை படிக்கப்பட்டுப் பொங்கல், மடை, சடங்கு என்பனவும் பக்தி பூர்வமாக வளர்ந்து வருகின்றன.

### கோவில் இலக்கியம்

கோவில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளின் பால் எழுந்த பக்தி இலக்கியங்கள் பல. ஊஞ்சல், எச்சரிக்கை, பராக்கு, மங்களம், அந்தாதி, வெண்பா, அகவல் என்பனவற்றை இங்கு கூறலாம்.

### பஜனை

மார்கழி பஜனை, திருவிழா, தேர், தீர்த்தப் பஜனைகள் அந்தந்தப் பஜனைக் குழுக்களால் மேற்கொள்ளப்படுகின்றன. வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை கோவில்களில் இடம்பெறுகின்றன.

### சொற்பொழிவு / கதாப்பிரசங்கம்

உள்ளூர், இந்தியக் கல்விமான்களினால் சமயச் சொற்பொழிவுகள் ஆலய விழாக்களில் நிகழ்த்தப்படுகின்றன. கதாப்பிரசங்கங்கள் கோவில்களில் இன்றும் பிரபல்யமானவை.

### சைவப் பாடசாலை

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்ற முதுமொழிக்கமைய இலங்கையில் சைவப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு சைவம் காக்கப்பட்டமையைப் பெருமையுடன் கூறவேண்டும். எழுத்தறிவித்தவன் இறைவன் அல்லவா? ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பரம்பரை இருந்தமையினால் சைவப் பிள்ளைகள் சைவர்களாகவே வாழ்ந்தமை கவனத்துக்குரியது. சைவ வித்தியாவிருத்திச்சபைப் பாடசாலைகளும் பிறவும் சைவப் பிள்ளைகளின் படிப்புக்கு முன்னோடிகளாக விளங்கின.

### சைவ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

யாழ்/ திருநெல்வேலியில் ஆரம்பிக்கப்பட்ட சைவ ஆசிரிய பயிற்சிக் கல்லூரி சைவ ஆசிரியர்களை உருவாக்கி வந்துள்ளது.

### பல்கலைக்கழகத்தில் - சமயத்துறை

சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் யாழ். / திருநெல்வேலியில்

ஆண்களுக்கான பரமேஸ்வராக் கல்லூரியும் சுன்னாகம் மருதனாமடத்தில் பெண்களுக்கான இராமநாதன் கல்லூரியும் சிவாலயங்களுடன் ஆரம்பிக்கப்பட்டன. அவை பல்கலைக்கழகமாக வேண்டும் என்ற நோக்குடன் அப்பெருந்தகை பாடசாலைக் கட்டிடங்களை அதற்கேற்ப அமைத்தார். கால கதியில் அவை இரண்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக்கப்பட்டன. அங்கே இந்து நாகரிகத் துறைப் பீடத்திலும் நுண்கலைப் பீடத்திலுமிருந்து பட்டதாரிகளை வருடாவருடம் உருவாக்கி வருகின்றமை அப்பெரியாரின் கனவை நனவாக்குகின்றது.

## இந்து சமயக் கல்வி

அரசாங்கப் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இந்துசமயக் கல்வி இலங்கையில் உள்ளமையை நோக்கினோம். பாலர் வகுப்புமுதல் பத்தாம் ஆண்டுவரைக்கான' சைவ நெறிப்பாடநூல்களை கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மூலம் வெளியிட்டு அதனை பாடசாலை மாணவ மாணவியருக்கு கல்வி உயர்கல்வி அமைச்சு இலவசமாகவே ஏனைய பாடநூல்களுடன் வருடாவருடம் விநியோகித்து வருகின்றமையைச் சிறப்பாக கூறவேண்டும்.

இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு பாடசாலை இந்துசமயத் திணைக்கள அறநெறிப் பாடசாலைகள், நல்லை திருஞானசம்பந்தர் ஆதினச் சமய பாடசாலை ஆகியனவும் பிறவும் சமயக் கல்வி வளர்ச்சிக்கு உதவுகின்றதெனலாம்.

## இந்துசமயத் திணைக்களம்

பிரதேச அபிவிருத்தி இந்துசமய, இந்துகலாசார, தமிழ் அலுவல்கள் அமைச்சின் கீழ் இந்துசமயத் திணைக்களம் இலங்கையில் முதன்முதலாக அமைக்கப்பட்டது. முதலாவது பிரதேச அபிவிருத்தி, இந்து சமய கலாசார அமைச்சராக கௌரவ செல்லையா இராஜதுரை அவர்கள் விளங்கினார்.

இந்துசமயத் திணைக்களம் ஆரம்பிக்கப் பட்ட நாளிலிருந்து இந்துசமய ஆராய்ச்சி கோவில் கிரியைகள், பண்ணிசை நூலாக்கம், கருத்தரங்கு, மாநாடு போன்ற பல்வேறு சைவசமய வளர்ச்சிக்கான விடயங்களில் அதியூக்கம் காட்ட ஆரம்பித்தது.

அகில உலக இந்துமாநாடு உலகம் போற்றும் வகையில் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டது. பூசை, வழிபாடு, கருத்தரங்கு, பண்ணிசை, வாத்திய இசை சங்கீதக் கச்சேரி, இந்துசமயப் புத்தக் கண்காட்சி, நூல்வெளியீடுகள் என்பன அதிசிறப்பாக நடைபெற்றன. காஞ்சிப் பெரியவரின் அருள்வாக்கின்படி அகில உலக இந்துமாநாட்டைச் சிறப்புறச் செய்த பெருமை முன்னைய அமைச்சர் திரு. செல்லையா இராசதுரையையே சாரும்.

பெரும் இராஜாக்கள் செய்த 'அஸ்வமேதயாகம்' இலங்கையில் காஞ்சிப் பெரியவரின் அருள்நெறிப்படி காஞ்சி மடத்துப் பிரதம சிவாசாரியர் சிவஸ்ரீ இராஜப்பாக் குருக்கள் அவர்களின் பங்கேற்றலுடன் அந்நாள் அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை அவர்களால் சங்கற்பித்துச் செய்யப்பட்டது. இதற்கான அதிலக்ஷண பசும்பால் போன்ற வெண்குதிரை பாகிஸ்தானிலிருந்து வருவிக்கப்பட்டது. சென்னை காளிகாம்பாள் ஆலய பிரதம சிவாசாரியர் சிவஸ்ரீ சாம்பசிவக் குருக்கள் தலைமையில் வழுவூர் பிரம்மஸ்ரீ இராஜகோபால சர்மா, ஏனைய இந்திய சிவாசாரியர்கள் இலங்கைச் சிவாசாரியார்கள் இந்திய வேதாந்தியான விற்பன்னர்கள், இந்திய இலங்கை

பண்ணிசை விற்பன்னர்கள் இம்மஹா யாகத்தில் பங்கு கொண்டு சிறப்பித்தனர். இக்காலத்தில் அகில உலக இந்து ஆராய்ச்சி மன்றம் இத்திணைக்களத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் சமய ஆராய்ச்சிக்கான பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது.

### இந்துக்கலைக்களஞ்சியம்

முன்னைய அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை இந்து கலைக்களஞ்சிய வேலைகளை ஆரம்பித்து அந்நூல் பகுதி பகுதிகளாக வெளியிடச் செயலூக்கம் காட்டினார். இலங்கை, இந்திய அறிஞர்கள் இதில் பங்கேற்றனர். இருந்தும், பின்னர் வந்த இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ் அவர்கள் காலத்திலேயே முதல் இருதொகுப்புக்களும் வெளியாகின. பின்னர் மூன்றாம் பகுதி வெளியானது. இப்பொழுது நான்காம் பகுதி அச்சிடப்பட்டுக்கொண்டிருப்பதாக அறியக்கிடக்கின்றது.

### கோபுரம்

'கோபுரம்' இந்துசமய சஞ்சிகை திணைக்கள இதழாக முன்னைய இந்து அமைச்சர் திரு. செல்லையா இராசதுரையின் காலத்தில் வெளியாகியதோடு இப்பொழுதும் அஃது அரிய தகவல்களுடன் வெளிவந்துகொண்டிருப்பது சாலச்சிறந்ததாக உள்ளது.

### இலங்கை இந்துத் திருத்தலங்கள்

அகில உலக இந்து மாநாட்டின் ஒரு அங்கமான இந்துமாநாடு நிறைவேறியதன் பின்பு அரிய தகவல்களுடன் மாவட்ட ரீதியான ஆலயப் புகைப்படங்களுடன் அப்போதைய இந்து அமைச்சர் திரு. செல்லையா இராசதுரையால் வெளியிடப்பட்டது. இஃது ஆராய்ச்சியாளர்களுக்கு இப்பொழுதும் ஒரு முன்னோடிக் கருவூலமாக உள்ளதெனலாம்.

இந்துசமய இராஜாங்க அமைச்சராக இருந்த திரு. பி.பி. தேவராஜ் அவர்கள் காலத்தில் மாதம் ஒரு சொற்பொழிவு என்ற வகையில் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் விரிவுரைகள் நடத்தப்பட்டன. அந்த வகையான தொடர் சொற்பொழிவுகள் இப்பொழுதும் நிகழ்ந்து வருகின்றன. சைவசமய மாநாடுகளும், கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன.

திரு. பி.பி. தேவராஜ் ஆலயங்கள் தோறும் அறநெறிப்பாடசாலைகளை இலங்கையெங்கனும் ஆரம்பித்து வைத்து, அவற்றுக்குரிய நூல்களை இலவசமாக விநியோகித்ததோடு அவற்றின் வளர்ச்சிக்கு அரும் முயற்சிசெய்தார். அவரது பெரும் முயற்சியால் இன்றும் இந்துசமயத் திணைக்களம் அந்த அறநெறிப் பாடசாலைகளை ஒழுங்காக மேற்பார்வைசெய்து அவற்றை ஊக்குவித்து வருகின்றமையை இங்கு பெருமையுடன் கூறலாம். இந்த அறநெறிப் பாடசாலைகளில் சைவம் சார்ந்த பண்ணிசை, நடனம், நாடகம் என்பனவும் இப்பொழுது வளர்ந்து வருகின்றன.

திணைக்களம் ஏற்பாடு செய்த பக்திப்பெருவிழாவிலும் இலங்கைச் சிவாச்சாரியார்கள், சமய காவலர்கள் கௌரவிக்கப்பட்டமையை இங்கு கூறுதல் பொருத்தமானது. அரிய நூல்களை மறுபதிப்புச் செய்தும், புதிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டும், இலவசமாக விநியோகித்தும், வருடம் பஞ்சாங்கத்தையும் இலவசமாக விநியோகித்தும் நற்பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இவ்விரு அமைச்சர்களின் பின்னர் இந்துசமயத் திணைக்களம் கலாசார அமைச்சின் கீழ் இந்துசமயத் திணைக்களமாக மேலதிகச் செயலாளரின் மேற்பார்வையில் இயங்குகின்றது. இந்துசமயத் திணைக்களம் இப்பொழுது

அறநெறிப்பாடசாலைகளை வளர்த்து வருகின்றது. மாதச் சொற்பொழிவுகள், சைவசித்தாந்த மாநாடுகள், சைவசமய மாநாடுகள் என்பனவும் நடைபெறுகின்றன. அறநெறிவிழாவில் இலங்கையில் சைவசமய வளர்ச்சியில் அரும்பங்கு கொள்வோர், கௌரவிக்கப்பட்டு விருதுகளையும் பெற்று வருகின்றனர். வருட பஞ்சாங்கங்கள் வருடாவருடம் வெளியாகி இலவசமாக விநியோகிப்படுகின்றன. புதிய நூல்வெளியீடுகள் பழைய நூல் மறுமதிப்பும் வெளியீடும் என்பன ஆக்கபூர்வமாக இடம் பெற்று வருகின்றன.

கதிர்காமத்திலுள்ள இந்துசமய திணைக்கள யாத்திரிகர் தங்கும் விடுதி முன்னைய அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை ஆரம்பித்துப் பின்னர் வந்த அமைச்சர் பி.பி. தேவராஜ் காலத்தில் கட்டடிம் பூர்த்தியாகி இப்பொழுது நல்லமுறையில் செயற்பட்டு வருகின்றது.

இலங்கையின் இந்துசமய வளர்ச்சியில் இராமகிருஷ்ண மிஷன் பங்கும் சிறப்பானது. பாடசாலைகளுக்கு முன்பாக ஆர். கே. எம். என இருந்தால் அது இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையேயாகும். அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்றபின் பாடசாலைப் பெயர்கள் மாற்றம் அடைந்தன. இருந்தும் யாழ் வண்ணை வைத்தீஸ்வரா, திருகோணமலை இந்துக் கல்லூரியை போன்றவற்றை உதாரணத்திற்கு கூறலாம்.

கொழும்பு மட்டக்களப்பு ஆகிய இடங்களில் மிஷன் செயலகங்கள் உள்ளன மட்டுநகரில் அனாதைச் சிறுவர் விடுதியுள்ளது. இவ்விரு இடங்களில் ஞாயிறு பாடசாலை சமயம், பண்ணிசை, நடனம் போன்வற்றிக்கு ஆக்கப் பணிகளைக் கொடுத்துச் சிறார்களை சமயப் பாதையில் இட்டுச் செல்கின்றது. அரிய பெரிய நூல்களை இந்தியாவிலிருந்து வரவழைத்து குறைந்த விலைக்கே கொடுப்பது சமய அறிவு மேம்பாடிற்கு உகந்தது. கொழும்பில் தங்குவிடுதி நல்லமுறையில் சமய நெறியாளர்களுக்கு உதவுகின்றது. முன்னர் கதிர்காமத்தில் இருந்த இராமகிருஷ்ணமடம் யாத்திரீகர்களுக்கு எந்நேரமும் சுடச்சுட அறுசுவை உண்டிகொடுத்து உதவியமையை இங்கு பக்திபூர்வமாகப் பாராட்ட வேண்டும். வயிறார உண்டு கதிர்காமக் கந்தனின் சிந்தனையுடன் கந்தா எனக்கூறி இராமகிருஷ்ண மடம் கொடுத்த பாயில் யாத்திரிகர் படுத்துறங்கியமையும் இங்கே நினைவு கூருதல், பொருத்தமுடையது.

## கொழும்பு விவேகானந்தா சபை

இலங்கையில் சமயவளர்ச்சியில் சமயப் பாடசாலை இசை, நடன வகுப்புக்களை இச்சபை நடத்தி வருகின்றது. சமயப் பெரியார்களுக்கு விழாவெடுக்கின்றது. திருவாசகம் முற்றோதல் நடைபெறுகின்றது. 'விவேகானந்தர்' என்ற சமய சஞ்சிகை சபையினால் வெளியிடப்படுகின்றது. பன்னெடுங்காலமாக இலங்கைபூராகவும் சமயப்பாடப் பரீட்சையை நடத்தி மாணவமாணவியரின் சமய அறிவைப் பரிசீலித்து அவர்களுக்கு சான்றிதழ்களை இச்சபை வழங்கிவருவது பெருமைக்குரிய விஷயம். முழு இலங்கையுமே சமய வாழ்வுக்கு இச்சபை இட்டுச் செல்லும் ஆக்கப்பணி இஃதுவெனலாம்.

## அகில இலங்கைச் சிவப்பிராமண சங்கம்

இச்சங்கத்தின் சமஸ்கிருதப் பாடசாலைகள் பிராமணச் சிறார்களின் குருத்துவ வாழ்வுக்கு வித்திட்டது எனலாம். அனர்த்தங்கள் ஏற்பட்டமையினால் இச்சங்கப் பாடசாலைகள் பின்னர் இயங்க முடியவில்லை. 'சிவாச்சாரியர் பரீட்சையை இலங்கையில் நடத்திச் சித்தியெய்திய

குருமாருக்குச் சான்றிதழ் வழங்கிக் குருமார் பயிற்சியை ஆக்கபூர்வமாக ஊக்குவித்த பெருமை இச்சபைக்கே உரியது.

### திருக்கேதீஸ்வரம் குருகுலம்

இக்குருகுலம் உரிய முறையில் பாடல்பெற்ற தலத்தில் ஆரம்பிக்கப்பட்டுச் சிறப்புடன் செயல்பட்டு வந்துள்ளது. இது ஓர் நல்முயற்சியேயாம். சில அசௌகர்யங்களால் இது பின்னர் செயல்படவில்லை.

### ஸ்ரீ துர்க்கா குருகுலம்

இக்குருகுலம், தெல்லிப்பளையில் தேவஸ்தான அனுசரணையுடன் சிறந்த முறையில் குருப்பயிற்சி மூலம் குருமாரைப் பயிற்றுவிக்கின்றது.

### தர்மகஸ்தா குருகுலம்

இஃது இணுவிலில் உள்ளது. குருகுலப் பயிற்சிமூலம் நல்ல குருமாரை உருவாக்குகின்றது.

### அகில இலங்கை இந்துமாமன்றம்

இலங்கையின் இந்துச் சங்கப் பிரதிநிதிகள் கொண்ட பெரும்சங்கம் இது. கொழும்பில் இதன் தலைமையகம் மாடிக் கட்டிடங்களுடன் உள்ளது. மேல்மாடியில் ஸ்ரீ நடராஜப் பெருமாள் அம்பாளுடன் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார். இந்துசமயம் தொடர்பான சிறப்பான ஆக்கப் பணிகளை அகில இலங்கை இந்துமாமன்றம் மேற்கொண்டு வருகின்றது. பண்ணிசை வகுப்புக்களை இலங்கையில் நடத்திப் பரீட்சித்துப் பண்ணிசை மாணவர்களுக்கு சான்றிதழ் கொடுத்துப் பண்ணிசையை வளர்த்த பெருமை அகில இலங்கை இந்துமாமன்றத்துக்குரியது.

### ஏனைய சங்கங்கள்

திவ்விய ஜீவனசங்கம், உலக சைவப் பேரவை, கொழும்பு இந்து வாலிபர் சங்கம், வடகொழும்பு இந்துமாமன்றம், இந்து வாலிபர் சங்கம், திருகோணமலை இந்து இளைஞர் மன்றம், அப்பர் அருள்நெறிமன்றம், சேக்கிழார் மன்றம், யாழ். சைவ விருத்திச் சபை, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம் என்பனவும் பிறவும் சமய வளர்ச்சியில் அயராது உழைத்து வருகின்றமை போற்றுதற்குரியது.

### ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை

சைவங்காத்த பெருஞானி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பாடசாலை, நூல்வெளியீடு, சமய அனுட்டானம், கதாப்பிரசங்கம் என்பன மூலம் மக்கள் இக்கட்டான காலகட்ட நிலையில் இருந்தபோது சமய வாழ்வில் நாவலர்பெருமான் இட்டுச்சென்றார். அவரின் பெயரால் வந்த இச்சபை நல்லூரில் அவருக்கான சிலை அமைத்து மாநாடுகள் நடத்தியதோடு நூல்கள் மலர்கள் வெளியிட்டு அப்பெருந்தகையைக் கௌரவித்ததோடு அரசாங்கம் மூலம் முத்திரை வெளியீட்டையும் செய்துவைத்தது.

### இலங்கை ஆதீனங்கள்

நல்லை நகரில் திருஞானசம்பந்தர் ஆதீனத்தைக் குருசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிய ஞானசம்பந்தத் தம்பிரான் சுவாமிகள் ஆரம்பித்துவைத்தார். அவர் பின்னர் குருமஹா சந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளாக குருஅபிஷேகம் பெற்றார். இந்த ஆதீனம் அருளமுதம் சஞ்சிகையை வெளியிட்டது. சமய, பண்ணிசை, மங்கள இசை, நடன வாத்தியப் பாடசாலைகளை நடத்தி வருகின்றது. குருமஹா

சந்நிதானம் அவர்களின் கதாப் பிரசங்கங்கள் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளது. கதாப்பிரசங்கம் மூலம் மக்களைச் சமய வாழ்வில் இட்டுச் சென்ற ஞானி அவர், இப்பொழுது இரண்டாம் குருமஹா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரியர் அவர்கள் சுவாமிகள் விட்டுச் சென்ற பணியைப் பல இடர்களுக்கு மத்தியிலும் செய்து வருகின்றார்.

மெய்கண்டார் ஆதினம் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டு நல்லமுறையில் செயல் பட்டுவந்துள்ளது. பருத்தித்துறை இராமகிருஷ்ண மடமும், சமயப்பணியில் இயங்கி வருகின்றது.

### சைவ அனாதை விடுதிகள்

கைதடி அனாதைவிடுதி, திருகோணமலை சிவானந்த தபோவனம், மட்டக்களப்பு அனாதைவிடுதி, கிளிநொச்சி அனாதைவிடுதி என்பனவும், பிறவும் சைவ அனாதையர்க்கு ஆதரவளித்து அவர்களைச் சமய வாழ்வுக்கு இட்டுச் செல்லும் பாங்கினை இங்கு சிறப்பாகக் கூறவேண்டும். இதுவோர் பெருஞ்சமயத் தொண்டு. சில கஷ்டங்களால் ஒரு சில இப்போது இயங்குவதில்லை என அறியக்கிடக்கின்றது.

### பத்திரிகை / சஞ்சிகை

ஹிந்து ஓர்கன்: இந்து சாதனம், விவேகாந்தன், ஆத்மஜோதி, சைவகாவலன், இலங்கை இந்து, மெய்கண்டார் நெறி சந்திரதீபம், அருள் அமுதம், அருள்ஜோதி, சைவநீதி ஆகியனவற்றையும் இவை போன்று வெளியானவற்றையும் சமய ஆக்கப் பணிக்கு உதவியமையைக் கூறலாம்.

தினகரன், வீரகேசரி, ஈழநாடு, ஈழகேசரி, தினக்குரல் ஆகிய நாளிதழ்கள் சைவ சமய சஞ்சிகையை வெளியிடுவதோடு சமய விழாக்களின் செய்திகளை புகைப்படங்களுடன் வெளியிட்டு உலகறியச் செய்கின்றன.

### ஒலிபரப்பு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் மாதந்தோறும் சைவநீதி உள்ளது. விஷேட சமய நிகழ்ச்சிகள், சமய கிரியைகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டோ, நேரிடையாகவோ ஒலிபரப்பாகின்றன. சமயக் கருத்துரைகள், பண்ணிசைகள் என்பனவும் ஒலிபரப்பாகின்றன. இதுகாறும் இலங்கையில் இந்துசமயம் எவ்வாறு இருந்துவந்துள்ளது எனக் கண்ணுற்றோம், பல்வேறு விதமான தடைகள், பிரச்சினைகள், இடர்ப்பாடுகள் இருந்தபோதும் இலங்கை வாழ் இந்து மக்கள் நம்பிக்கை தளராது தமது சமயக் கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆலயங்கள், இந்து நிறுவனங்கள் இதற்கு ஆற்றும் பங்கு மகத்தானது. இப்பணி தொடர இறையருள் நிறைவதாக !

### யானையும் பன்றியும்

யானையொன்று குறுகிய பாலத்தின் வழியாக நடந்து வந்து கொண்டிருந்தது. எதிரில் ஒரு பன்றி உடல் பூராவும் சகதியுடன் வாலை ஆட்டியபடி வந்து கொண்டிருந்தது. யானை அந்தப் பன்றிக்கு வழி விட்டு ஒதுங்கி, ஒடுங்கி நின்றது. உடனே அந்தப் பன்றி, "எனக்குப் பயந்து யானை வழிவிடுகிறது பார்!" என்றது. யானை ஒன்றும் சொல்லவில்லை. இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த இன்னொரு யானை கேட்டது. "நீ ஒரு பன்றிக்குப் போய்ப் பயப்படலாமா ?" முதல் யானை இப்படி பதிலளித்தது: "நான் என் காலால் ஒரு மிதிமிதித்தால் பன்றி துவம்சமாகி விடும். ஆனால் என் காலல்லவோ சேறாகி விடும் !"

# விரதங்களும் அவற்றின் பெருமையும்

பெ. அருள்நாயகி
*கிழக்குப் பல்கலைக்கழகம்*

விரதமானது மனம், பொறி, வழி போகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்கின்ற மூன்றினாலும் இறைவனை மெய்யன்புடன் வழிபடல் என இந்து மதம் வரையறுத்துள்ளது. நோன்பு என்பதன் நேரடியான விளக்கம் "கொன்று தின்னாமை" என நீதி நூல்கள் கூறியுள்ளன. மேலும் திருக்குறல் "கொல்லான் புலாலை மறுத்தானை" கைகூப்பி எல்லா உயிரும் தொழும் என வரையறுத்துள்ளது.

உணவை நீக்குதல் அல்லது குறைத்தல் மட்டும் தான் விரதம் என்பதல்ல. விரத காலங்களில் தாமத குணத்தை அதிகப்படுத்தும் வெங்காயம், உள்ளி, முருங்கைக்காய், வெற்றிலை முதலியவற்றை விரத நாட்களில் மட்டுமன்றி அதற்கு முதல் நாளிலும், அடுத்த நாளிலும், நீக்குதல் அவசியமாகும். இவை தாமத குணங்களை நீக்கி சத்துவ குணத்தை ஏற்படுத்த வல்லது. சைவர்களின் சமய வாழ்க்கையில் விரதங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. விரதம் என்பது ஓர் தீர்க்கமான கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்படுகின்றது.

ஒருவர் தனது வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்ற அறவொழுக்கங்களை முறைப்படி கொண்டு ஒழுகுவது உண்மையில் விரதமேயாகும். ஆன்மீக மேம்பாட்டுக்காக நாம் கையாள வேண்டிய நியம நெறியே விரதமாகும். மேலும் விளக்கமாகக் கூறுவதாயின் சிறுகுழந்தை தமது விருப்பப்படி தான் எடுத்த விடயத்தை நிறைவேற்றுவதற்காக அடம் பிடிக்கும். இப்பிடிவாதத்தின் மூலம் குழந்தை தாயின் உள்ளத்தை இரங்கச் செய்து தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்கின்றது. இதைப் போன்று ஆன்மாக்களும், இறைவனிடம் சில வேண்டுதல்களை முன் வைத்து இறைவனிடம் மன வைராக்கியத்துடன் வேண்டுகின்றன.

இந்து மதத்தில் வழிபாட்டு முறை எப்போது தோன்றியதோ அப்போதே விரத வழிபாடும் தோன்றியுள்ளது. புராணங்களில் அரிச்சந்திர புராணத்தில் அரிச்சந்திரன் பொய் பேசாமையும் வாய்மை தவறாமை என்கின்ற விரதத்தை சுட்டுகின்றது. மேலும் சிவபுராணம் சிவராத்திரி விரதச் சிறப்பு பற்றி வேடன் கதை மூலம் வெளிப்படுத்துகின்றது.

இராமாயண இதிகாசம் கோசலை விரதம் இருந்து இராமனைப் பெற்றெடுத்தாள் எனக் குறிப்பிடுகின்றது. இதே போன்று காளிதாசர், பாரதியார் பாடல்களில் விரதச் சிறப்பு பற்றி குறிப்பிடப்படுகின்றது.

நாம் உடலை வருத்தி மேற்கொள்ளும் நேர்த்திக் கடன் கூட ஒரு வகையில் விரதமாகின்றது. உபவாசம் என்பது அருகில் இருத்தல் எனப் பொருள்படுகின்றது. மனம், வாக்குக் காயம் (சிந்தனை, பேச்சு, செயல்) ஆகிய மூன்றினாலும் இறைவனை நெருங்குதல் எனவும் பொருள்படுகின்றது.

இந்து மதம் பல தெய்வ வழிபாட்டை ஏற்பதால் விரதங்களையும் பலவாகப் பிரித்துள்ளது. இந்த வகையால் இந்து மதம் கூறும் விரதங்களை தெய்வங்களின் அடிப்படையில் வகுப்போமாயின் சிவ விரதம், சக்தி விரதம், விநாயக விரதம், சுப்ரமணிய விரதம், விஷ்ணு விரதம், வைரவ விரதம், வீரபத்திர விரதம் என வகைப்படுத்தலாம். இவ் விரதங்களை நாள் விரதம், வார விரதம், மாத

விரதம், வருட விரதம் என பிரிக்கலாம். இந் நான்கு கால விரதங்களையும், பௌர்ணமி விரதம், சஷ்டி விரதம், நட்சேத்திர விரதம், சதுர்த்தி விரதம் என பிரிக்கப்பட்டுள்ளது.

சுப்பிரமணியருக்குரிய விரதங்களில் கந்தசஷ்டி விரதம், திருக் கார்த்திகை விரதம், ஐப்பசி மாத வெள்ளிக் கிழமை விரதம் என்பன முக்கிய விரதங்களாக விளங்குகின்றன. ஐப்பசி மாதப் பிரதமையில் தொடங்கி சஷ்டி முடியும் வரையுள்ள ஆறு நாள் முருகனை வேண்டி வழிபடும் விரதம் கந்தஷஷ்டி விரதமாகும். கார்த்திகேயன் எனப்போற்றப்படும் முருகனுக்கு உகந்த விரதங்களில் கார்த்திகை மாத கார்த்திகை நட்சேத்திர விரதமும் ஒன்றாகும். இத்துடன் ஒவ்வொரு மாத கார்த்திகை நட்சேத்திரத்திலும் கார்த்திகேய விரதம் அனுட்டிக்கின்றனர். இருபத்தொரு வருடம் தொடர்ந்து அனுட்டிக்க வேண்டும் என்ற நியதி உண்டு. ஐப்பசி மாதம் வரும் ஒவ்வொரு வெள்ளியும், முருகனுக்குரிய விரத நாளாகும்.

விஷ்ணுவுக்குரிய விரதங்களில் மார்கழி மாத பூர்வ பட்சத்தில் வைகுண்ட ஏகாதசி விரதம் சிறப்பானது. மேலும் மாதம் தோறும் வரும் பூர்வ பட்சத்திலும் ஏகாதசி விரதம் பின் பற்றப்படுகின்றது.

வாரம் ஒரு முறை வரும் விரதம் வார விரதம் எனப்படும். இவ்வார விரதத்தில் விசேடவார விரதங்களும் உண்டு. இவை சுக்கிரவார விரதம், சனிவார விரதம், சூரியவார விரதம், சோமவார விரதம், குருவார விரதம் என்பனவாகும். விசேடவார விரதம் என்பது வாரத்தில் வருகின்ற விசேட நாட்களைக் குறிக்கும். "ஆடிச் செவ்வாய் தேடிப்பிடி" என்பதற்கு ஒப்ப, ஆடிச் செவ்வாய், ஆவணி ஞாயிறு, புரட்டாதி சனி போன்றன அந்தந்த மாதத்தில் வரும் ஒவ்வொரு வாரத்துக்கும் அனுட்டிக்கப்படுகின்றன.

சிவ விரதத்தினை நோக்கும் போது முக்கிய விரதங்களாக மகா சிவராத்திரி, சோமவாரம், திருவாதிரை, பிரதோஷம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மகா சிவராத்திரி விரதம் சிவனது அருவத் திருமேனியான சிவலிங்கத்தினை வழிபடும் ஓர் விரதமாகும். இவ் விரதம் மாசிமாத தேய்பிறையில் வரும் சதுர்த்தியில் அனுட்டிக்கப்படுகின்றது. சிவ விரதங்களில் மிகவும் முக்கியத்துவம் உடைய ஓர் விரதமாக இது விளங்குகின்றது. இதனால் சிவனுக்கு உகந்தது சிவராத்திரி எனப் பேசப்படுகின்றது. இத்துடன் கார்த்திகை மாதம் முதல் திங்கள் தொடக்கம் அம்மாதம் முடியும் வரை உள்ள நான்கு அல்லது ஐந்து திங்கள் லிங்கத்தை வழிபடும் விரதம் சோமவார விரதமாகும். ஐந்தொழில் தத்துவத்தை குறிப்பிடும் நடராஜப் பெருமானை வழிபடும் விரதமாக திருவாதிரை விரதம் விளங்குகின்றது. இவ் விரதம் மார்கழி மாத திருவாதிரை நட்சத்திரத்தில் அனுட்டிக்தப்படுகின்றது.

சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை மாத வளர்பிறை தேய்பிறை திரயோதசியில் சூரியன் அஸ்தமிப்பதற்கு முன் அல்லது பின் உள்ள நாழிகையின் 3 ¾ போது சிவனை வழிபடல் பிரதோஷ விரதமாகும். இத்துடன் உமாமகேஸ்வர விரதம், கலியாணசுந்தர விரதம், சூரிய விரதம் என்பனவும் சிவனுக்குரிய விரதங்களாகும்.

புரட்டாதி மாத வளர்பிறை பிரதமை முதல் நவமி ஈறாக உள்ள ஒன்பது நாளும் அனுட்டிக்கும் விரதம் நவராத்திரி விரதமாகும். முதல் மூன்று நாளும் இலக்குமியை வேண்டியும் இறுதி மூன்று நாளும் துர்க்கையை நினைத்தும் அடுத்த மூன்று

★ நாம் ஒரு வாழ்க்கையை வாழ்கிறோம் ஆனால் மகா புருஷர்கள், ஞானிகள், மனித குலத்தின் வாழ்க்கையையே வாழ்ந்து காட்டியுள்ளனர்.

★ மந்திரம் எண்ணங்களை வலுப்படுத்தும் வீரியம் கொண்டது. மந்திரங்களை உரிய முறைப்படி, மனத்தூய்மையுடன் சொன்னால் பலன் கிடைக்கும்.

நாளும் சரஸ்வதியை வேண்டி வாழ்க்கைக்கு தேவையான வீரம், செல்வம் கல்வியை வேண்டி அலைமகள், மலைமகள், கலைமகள் என முச் சக்திகளை வழிபடும் விரதமாகும். மேலும், புரட்டாதி மாத வளர்பிறை அட்டமியில் தொடங்கி, அடுத்து வரும் தேய்பிறை சதுர்த்தி வரையுள்ள இருபத்தொரு நாள் அனுட்டிக்கும் விரதம் கேதாரகௌரி விரதமாகும். இவ்விரதம் உமையம்மை வேண்டி வழிபடும் விரதமாகும். இவற்றுடன் சித்திரை மாத வளர்பிறையில் வரும் வெள்ளிக்கிழமை விரதமும் ஐப்பசி மாத உத்தர நட்சத்திரத்தில் வரும் விரதமும் சக்தி விரதங்களாகும்.

விநாயகக் கடவுளுக்குரிய விரதங்களில் விநாயக சதுர்த்தியும் விநாயகசஷ்டி விரதமும் முக்கியத்துவமுடையவை. விநாயகசஷ்டி விரதமும் கார்த்திகை மாத தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை வரையுள்ள இருபத்தொரு நாள் விரதமாகும். இவ் விரதத்தில் விநாயகரை வேண்டி வழிபடுவர். மேலும் ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தியிலும் ஒவ்வொரு மாத சதுர்த்தியிலும் விநாயகருக்கு விரதம் அனுட்டிக்கப்படுகின்றது.

விரதம் அனுட்டிக்கும் போது தவிர்க்க வேண்டிய விடயங்களில் குழந்தைகள், நோயாளிகள், மிகவும் வயதானவர்கள் அவசியம் விரதம் இருக்க வேண்டியதில்லை என விரத சம்ஹிதை எனும் வடமொழி நூல் குறிப்பிடுகின்றது. மேலும் குடும்பத்தவர் ஒருவர் இறந்தால் மூன்று மாதம் குடும்பத்தவர் விரதம் இருக்கக் கூடாது. குழந்தை பிறந்து நாற்பத்தெட்டு தினங்களுக்கு பின்புதான் தாயானவள் விரதத்தினை அனுட்டிக்க வேண்டும் எனவும் இந்நூல் குறிப்பிடுகின்றது. இத்துடன் விரதம் இருப்பவர்கள் விரத நாட்களில் தாம்பத்திய உறவுகளையும் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். மேலும் பிறர் மீது கோபப்படல், பிறரைப் பற்றித் தவறாக பேசுதல், பிறர் மனம் புண்படும் படி பேசல் ஆகியன தவிர்த்து மனம், வாக்கு, காயம் என்பவற்றை கட்டுப்பாட்டுடன் வைத்திருத்தல் வேண்டும் என குறிப்பிடுகிறது.

விரதத்தின் அடிப்படைத் தத்துவ விளக்கத்தினை நாம் நோக்கும் போது மெய்ஞானத்துடன் விஞ்ஞானமும் தொடர்பு கொண்டு இருப்பதை விரதம் எடுத்து விளக்குகின்றது. விரதமானது மனச் சாந்தியையும் வலிமையையும் கொடுத்து தன்னம்பிக்கையை வளர்க்கின்றது. விரதத்தின் மூலம் உணவைச் சுருக்குவதனால் மருத்துவ ரீதியாக உடலுக்கு அதிக நன்மைகள் கிடைக்கின்றன.

''லங்கண பரம ஔடதம்'' என்கின்ற வடமொழிப் பதம் நேரடியாக பட்டினி கிடத்தல், உடலுக்கு சிறந்த மருந்து எனக் கூறுகின்றது. அதாவது நோய் வந்தால் நாம் உணவைக் குறைக்கின்றோம் அல்லது உணவில் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்துகின்றோம் அதாவது (பத்தியம் இருத்தல்) எனக் கூறுகின்றோம். மருத்துவ நடைமுறைகள் வாரத்தில் ஒரு முறை, அல்லது மாதத்தில் ஒரு முறை விரதம் என்ற பெயரில் கைக் கொள்ளல் உடலுக்கு ஆன்மீக நலத்தை கொடுக்கின்றது. அதேவேளை உடல் பௌதீக ரீதியாக நலமும் பொலிவும் பெறுகின்றது.

விரதத்தின் முக்கிய அம்சமாக சுவாசக் கட்டுப்பாடு விளங்குகின்றது. இச் சுவாசக் கட்டுப்பாடு முனிவர்களுக்கும் சித்தர்களுக்கும் உரியதன்று. விரதத்தில் இருப்பவர்கள் காலையும் மாலையும் பிராணாயாமத்தில் ஈடுபட்டுவருவதால் விரதத்தின் பலனை அது அதிகரிக்கச் செய்யும் என்பதுடன் சக்தி சமநிலையையும் பேணும்.

குடும்ப நலன், உடல் நலம், பரம்பரை, விசுவாசம் தன்னம்பிக்கை, துணிவு, பக்தி ஆகியவற்றை அதிகமாக்கி வாழ்வில் ஒழுக்கத்தையும், நேர்மையையும் விரதம் உண்டு பண்ணுகின்றது. விரதங்கள் ஒவ்வொன்றும் மனித உடல் நலத்தையும் ஆயுள் விருத்தியையும் ஆதாரமாகக் கொண்டுள்ளது.

விரதங்களைக் கடைப்பிடிப்பதால் ஒழுக்கமும், தெய்வ நம்பிக்கையும், இரக்க சிந்தனை, தருமம், தூய்மை, ஐம்புல அடக்கம் என்பனவும் வளர வழிகிடைக்கின்றது.

# வேத வேதாந்தங்கள் கூறும் தர்மங்கள்

## ஆயுர் வேதம்

சரீரம், மனம் இரண்டும் ஆரோக்கியமாக, சந்தோஷமாக இருக்க வேண்டியதற்கான உபாயங்களை, ஔஷதங்களை வேதத்தின் உபவேதமான ஆயுர்வேதம் தெரிவிக்கிறது. இதுவும் மஹரிஷிகளால் இயற்றப்பட்டது. ஆயுர்வேதம் மூலபுருஷர் தன்வந்திரி மஹரிஷி. இன்றை நாகரிகத்திலும் கூட, இந்த விஞ்ஞான உலகத்திலும்கூட, மற்ற எந்த மருந்தாலும் வைத்தியராலும் குணப்படுத்த முடியாது சில வியாதிகளை இந்த ஆயுர்வேதத்தால் குணப்படுத்த முடியும். ஆயுர்வேத சாஸ்திரத்தைப் பற்றிப் பேசக்கூடிய நூல்களும் அநேகம் இருக்கின்றன. சரகர், ஸுச்ருதர், மாதவர், வாக்படர் முதலிய பலரால் அநேக நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

## தனுர் வேதம்

இது அஸ்திரம், சஸ்திரம் என இரு வகைப்படும்.

1. அஸ்திரம் என்பது மந்திரப் பிரயோகம் மூலமாகப் பாணங்களை தர்ப்பை முதலியவைகளை ஏவிவிடச் செய்வது.

2. சஸ்திரம் என்பது சுத்தி கேடயம் முதலிய ஆயுதங்களைக் கொண்டது. தனுர் வேதத்தில் கவசங்கள் செய்யும் முறைகள் – யுத்தத்தில் எந்தெந்த முறையில் எந்தெந்தப் பாணியில் சைன்யங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும் என்கிற முறைகள் – உதாரணமாக கருடவியூகம், பத்மவியூகம் போன்றவை சொல்லப் பட்டுள்ளன.

## காந்தர்வ வேதம்

இதில் நர்த்தனம் – தாளம் – ஸ்வரம் முதலியவைகளைப் பற்றியும், நானா வித வாத்தியங்களைப் பற்றியும் விளக்கமாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

## அர்த்த சாஸ்திரம்

இது தர்மநீதி, ராஜநீதி முதலியவைகளைத் தெரிவிப்பது. அரசர்கள் எவ்விதம் ராஜ்யபாரம் செய்ய வேண்டும். சிக்ஷைகள் எவ்விதம் அளிக்க வேண்டும். பிரஜைகளிடமிருந்து கப்பம் எவ்விதம் வசூல் செய்ய வேண்டும். சத்ருக்களிடமிருந்து எப்படித் தப்பித்து கொள்ள வேண்டும். சத்ருவை எப்படி மாய்க்க வேண்டும் என்பன போன்ற விஷயங்களை இது தெரிவிக்கிறது.

### 1. சிக்ஷை

வேத அங்கங்கள் ஆறினுள் சிக்ஷை என்பது வேதசப்தங்களை எவ்விதம் உச்சரிக்க வேண்டும் என்னும் முறைகளைப்பற்றித் தெரிவிப்பது. சிக்ஷைகளில் வியாஸ சிக்ஷா–வியாளி சிக்ஷா முதலிய அநேக சிக்ஷா நூல்கள் இருக்கின்றன.

சிக்ஷை என்னும் வேத அங்கம். வேதங்களிலுள்ள எழுத்துகளைப் பரிசீலனை செய்து, பிரித்து, அவைகளை உச்சரிக்க வேண்டிய முறைகளைத் தெரிவிப்பதற்காக எழுத்துக்கள் உற்பத்தியாகும் முறைகளை விளக்குகிறது. அதாவது, எழுத்துக்கள் உற்பத்தியாவதற்கு நமது முகத்தின் எந்தெந்த பாகங்கள் எவ்வாறு இயங்கி அவைகளை ஒலிக்கச் செய்கின்றன என்பதைப் பற்றியும் ஒவ்வொரு எழுத்தையும் ஒலிக்கும் கால அளவு, அதற்குரிய உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் என்னும் மூன்று ஸ்வரங்களைப் பற்றியும் மற்றும் அவைகளைச் சொல்ல வேண்டிய முறைகளைப் பற்றியும் விளக்குகிறது. மற்றும் உச்சாடன காலத்தில் மாறுபாடு இல்லாமல் காப்பதுபோல, வேதத்தில் பதம் பதமாய்க் காப்பாற்றும் முறைகளையும், எழுத்தெழுத்தாய்க் காப்பாற்றும் முறைகளையும், விளக்குவதற்காக சனாத்யயனம், வர்ணகிராமத்யயன்ம் இவைகளை ஏற்படுத்தி, வேதங்களின் எழுத்துகளிலோ ஸ்வரங்களிலோ சிறிதுகூட கேடு ஏற்படாமல் பாதுகாக்கிறது.

## 2. வியாகரணம்

லௌகீகமாகப் பேசக்கூடிய சம்ஸ்கிருத சப்தத்தின் முறையைப் பற்றியும், சாஸ்திரங்களில் சம்ஸ்கிருத சப்தத்தை எப்படிப் பேச வேண்டுமோ அந்த முறையைப் பற்றியும், வேதங்களில் சம்ஸ்கிருத சப்தங்கள் எவ்விதம் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த முறைகளைப் பற்றியும் விளக்கமாக இது விவரிக்கிறது. பொதுவாக வியாகரணமானது சம்ஸ்கிருதத்தின் காம்பீர்யத்தைக் காப்பாற்றுகிறது. இந்த வியாகரண சாஸ்திர நூல்களும் அநேகம் இருக்கின்றன. இதற்குள் சூத்திரங்கள், விருத்திகள், பாஷ்யங்கள் அநேகம் இருக்கின்றன. இதற்குள் சூத்திரங்கள், விருத்திகள், பாஷ்யங்கள் அநேகம் இருக்கின்றன. இதற்குள் சூத்திரங்கள், விருத்திகள், பாஷ்யங்கள் அநேகம் இருக்கின்றன. இவை பாணினி போன்ற பல மஹரிஷிகளால் இயற்றப்பட்டவை. ஆஞ்சநேய ஸ்வாமியை ஒன்பது வியாகரணம் தெரிந்தவர் என்றும் சிலர் சொல்லுவார்கள். பல எழுத்துக்கள் கொண்ட பதங்களிலுள்ள பிரகிருதி,ப்ரத்யயம், அதாவது பகுதி விகுதிகளை விளக்கித் தகுந்த பொருள் வகை அறிந்து கொள்ள வியாகரணம் உதவுகிறது. மேலும் வேதமந்திரங்கள் யாகங்களில் உபயோகப்படும் காலங்களில், அந்தந்த இடங்களுக்குத் தகுந்தாற்போல் ஊகம் (ஒரு பதத்தையோ வேற்றுமையையோ மாற்றிக் கொள்வது) செய்து கொள்வதற்கும் இது உபயோகப்படுகிறது.

## 3. சந்தஸ்

இது வேதத்திலுள்ள வாக்கியங்களின் அமைப்பைப்பற்றிக் கூறுகிறது. இத்தனை எழுத்துக்கள் கொண்டால் அவை இன்ன விருத்தம் என்று சொல்கிறது. அனுஷ்டுப் முதல் அநேக விருத்தங்கள் இருக்கின்றன. அதாவது சின்ன வாக்கியங்கள் முதல் பெரிய வாக்கியங்கள் வரை அநேக விதமான வாக்கியங்கள் வருகின்றன. வேதம் பத ரூபத்தில் இருப்பது போல் அநேக பதங்கள் கொண்ட வாக்கிய ரூபமாகவும் இருக்கிறது. அந்த வாக்கியங்களை அளவிடுவதற்குச் சந்தஸ் அவசியமானது. அக்ஷரங்களைக் கொண்டு வேத வாக்கியங்களை அளவிட்டுச் சொல்வது சந்தஸ். இது அநேகமாக செய்யுள் நடையில் அமைந்துள்ள வேத பாகங்களை அநேக பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திற்கும் எவ்வளவு எழுத்துக்கள் என்பதை விவரிக்கிறது. ஓர் எழுத்து முதல் (104 நூற்றுநான்கு எழுத்துக்கள் கொண்ட தந்தஸ்கள், தேவி காயத்ரி முதல் ஸமுத்ர சந்தஸ்கள் ஈறாகச் சொல்லப்படுகின்றன.

## 4. நிருக்தம்

வேத சப்தங்களை உச்சரிக்கும் போது சரீரத்தினுடைய எந்தெந்த இடத்திலிருந்து வேதசப்தங்கள் வெளிவருகின்றனவோ அந்தந்த இடத்தைப் பற்றித் தெளிவாக விளக்குகிறது. இந்த நூல் அக்ஷரங்களுடைய உற்பத்தி ஸ்தானம், ஜதி, ஸ்வரம், தேவதாபலம் முதலியவைகளைப் பற்றி விளக்கமாகத் தெரிவிக்கிறது. நிருக்தம் என்பதற்கு விளக்கிச் சொல்லுதல் என்பது பொருள். இதனால் வேதங்களின் பதவாக்கியங்களின் அர்த்தங்களை விளக்குவது இந்த அங்கத்தின் பயன். வேதங்களில் அநேக அர்த்தங்களைக் கொண்ட ஒரே பதமும். ஒரே அர்த்தமுள்ள அநேக பதங்களும் இருப்பதால், அந்தந்த அர்த்தங்களை விளக்கமாகத் தெரிந்து கொள்ள உதவுவது இந்த அங்கம் வேதபொருளை சாக்ஷாத்காரமாகவே காணும் பாக்கியம் பெற்ற யாஸ்கர் முதலிய ரிஷிகள் தங்கள் தபஸ் மூலம் அவைகளை நன்றாக அறிந்து நமக்கு உபதேசிக்கிறார்கள்.

## 5. ஜோதிஷம்

வேதத்தில் விதிக்கப்பட்ட காரியங்களை, கர்மாக்களை எந்தெந்த சமயத்தில் செய்ய வேண்டுமென்று காலத்தினைக் கணித்து கொடுப்பது ஜோதிஷம். இது பல சாஸ்திரம், கணித சாஸ்திரம் என இரு வகைப்படும்.

பல சாஸ்திரத்தில் மனிதர்களுடைய சுக–துக்கங்களுக்குக் காரணமான நவக்கிரகங்கள், இராசி, நட்சத்திரம் போன்றவைகள் ஒன்றோடொன்று சேர்வதாலும், பிரிவதாலும், விபரீதமாகச் சேர்வதாலும் ஏற்படக்கூடிய பலாபலன்களைப் பற்றியும்; இன்னின்ன காலத்தில் இன்னின்ன காரியத்தைச் செய்தால் அவை நல்லதாய் முடியும்; இன்னின்ன காலத்தில் இன்னின்ன காரியத்தைச் செய்தால் அவை கெடுதலாய் முடியும் என்பன போன்ற பலவிதமான பலன்களையும், அந்தப் பலன்களுக்குக் காரணமான தேவதைகளுடைய சலனத்தைப் பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. கணிதபாகமாவது சூரிய–சந்திர, கிரகங்கள் எவ்விதம் சஞ்சரிக்கின்றன என்பது பற்றி எடுத்துரைப்பது. Astrology பல சாஸ்திரம், Astronomy – வான சாஸ்திரம். வேதங்களில் கர்மாக்கள் காலை, மாலை, அமாவாசை, பூர்ணிமை முதலிய பலவித காலங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் காலங்களின் ஸ்வரூபங்களைத் தெரிந்து கொண்டு அவைகளில் கர்மாக்களைச் செய்ய வேண்டும். கால ஸ்வருபங்களைச் சோதிப்பது ஜ்யோதிஷம். வானத்திலுள்ள சூரியன்–சந்திரன், நக்ஷத்திரங்கள் முதலிய ஜ்யோதிஷ்களைக் கொண்டு காலநிர்ணயத்தைப் போதிப்பதால் இந்த சாஸ்திரத்துக்கு ஜ்யோதிஷம் என்று பெயர் ஏற்பட்டது.

## 6. கல்பம்

வேதத்தில் சொல்லப்பட்ட கர்மாக்களை எந்தெந்த இடத்தில் எந்தெந்த முறையில் எந்தெந்த விதமாக அமைத்து செயல்பட வேண்டும் என்பது பற்றி இது கூறுகிறது. யக்ஞசாலை அமைப்பது வேதிசைகள், மேடைகள் அமைப்பது; ஹோமம் செய்வதற்குச் சாதகமாக சுருக்கு–சுருவம் போன்றவைகளைச் செய்யும் முறைகள் இவை பற்றி விளக்கமாக இது விவரிக்கிறது. வேதங்களில் ஒரே கர்மா பல சாகைகளில் விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த சாலைகளில் பல்வேறு அங்கங்கள் சொல்லப்பட்டுள்ளன. பல சாலைகளிலுள்ள எல்லா அங்கங்களையும் சேர்த்து அனுஷ்டித்தால் தான் கர்மா பூரணமானதாகும். இவ்விதம் அனுஷ்டிப்பதற்கு அங்கங்கள்,

அங்கங்களின் பிரதானம் இவற்றின் வரிசையைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதையே கல்பம் உபதேசிக்கிறது. ஆபஸ்தம்பர், போதாயனர் முதலிய ரிஷிகள் கல்ப கிரந்தங்களை இயற்றியிருக்கிறார்கள்.

## புராணங்கள்

இவை பதினெட்டு. இவைகளுக்கு உபபுராணங்களும் நிறைய இருக்கின்றன. இவை தவிர ஸ்தலபுராணங்களும் உள. இந்தப் புராணங்களும் ஸ்தல புராணங்களும்தான். இந்துக்களின்–இந்து மதத்தின்–இந்தியாவின்–உலகத்தின் வரலாற்றைத் தெரிவிக்கக்கூடிய புஸ்தகங்கள் வேதவியாஸ பகவானால் இந்தப் புராணங்களெல்லாம் எழுதப்பட்டிருந்தாலும், அவர் தம் செந்த புத்தி சக்திக்கு ஏற்றவாறு எழுதாமல், திரிகால ஞானத்தை பரிபூரண அறிவை உடையவரானதால், முக்கால நிகழ்ச்சி முறையையும், தம் ஜனங்களும் சுலபமாக அறிந்து கொள்ளும் வகையில் கதாரூபமாக–செய்யுள் ரூபமாகவும், வசன நடை ரூபமாகவும் எழுதினார்.

புராணங்களில் உலகம் எவ்விதம் உண்டாயிற்று என்பதைப் பற்றியும், எப்போது உண்டாயிற்று என்பது பற்றியும், எப்பொழுது பிரளயம் உண்டாகும் என்பது பற்றியும், சில பிரளய காலத்தில் சில உலகங்கள் மாத்திரம் ஆழ்ந்து அழிதல் பற்றியும், மற்றவை நிலைத்திருப்பது பற்றியும்; எப்பொழுது முதல் உலகம் பூராவும் படைக்கப்பட்டு வருகிறது என்ற காலக் கணக்கினைப் பற்றியும்; எப்பொழுது முதல்சில உலகங்கள் படைக்கப்படுகின்றன. சில உலகங்கள் பாக்கி இருக்கின்றன என்பன பற்றியும்; இந்த உலகம் எவ்வளவு விஸ்தாரமாக இருந்தது என்பது போன்ற விஷயங்களைப் பற்றியும்; இந்த உலகில் எத்தனை சமுத்திரங்கள் இருந்தன. எத்தனை நதிகள் இருந்தன. எத்தனை மலைகள் இருந்தன என்பன பற்றியும்; எத்தனை விதமான ஜீவராசிகள் இருக்கின்றன என்பது பற்றியும்; எத்தனை உலகங்கள் இருக்கின்றன. எந்தெந்த உலகங்களில் யார் யார் வசிக்கின்றனர். அவர்களின் ஆகாரங்கள் என்னென்ன, அவர்கள் ஆயுள் பழக்க வழக்கங்கள் யாவை என்பன போன்ற பல விஷயங்கள் பற்றியும்; மனித வாழ்வில் பெற வேண்டிய தான–தர்ம–அர்த்த–காம–மோக்ஷ புருஷார்த்தங்களைப் பற்றியும், இவைகளைப் பெறுவதற்கான பக்தி–ஞான–கர்மயோக–உபாசனை முதலியவைகளைப் பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

புராணங்களில் முக்கியமாக ஐந்து விஷயங்கள் வரும். அவையாவன :

1. சிருஷ்டி, 2. பிரளயம், 3. சேசத்தை ஆண்ட மன்னர்களின் வம்சம், 4. கிளைவம்சங்களின் சரித்திரம் 5. மன்வந்தரங்கள். புராணங்களில் இவ்வைந்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் ஸ்தலபுராணங்கள் மஹரிஷிகளால் இயற்றப்பட்டவையாயிருந்தாலும், எந்தெந்த பாபத்தை, துன்பத்தைப் போக்கடித்து கொள்வதற்காக பூஜை உபாசனை–ஸ்நானம்–தானம் முதலியவைகளைச் செய்து, அதன் மூலம் தேவதைகளுடையவும், ஈஸ்வரனுடையவும் அருளைப் பெற்றார்களோ அந்தந்த க்ஷேத்திரங்கள் தாம் இன்று புண்ணிய க்ஷேத்திரங்களாகவும் புண்ணிய நதிகளாகவும் விளங்குகின்றன இதிகாசம் என்ற ஒருவகையும் உண்டு. அதில் பிரதானமாக ஒரு நாயகன் நாயகியை வைத்து; தர்ம–அர்த்த–காம–மோக்ஷம் என்ற புருஷார்த்தங்களைப் பற்றியும் கர்மா–பக்தி–ஞானம்–நீதி–வைராக்யம் போன்றவைகளைப் பற்றியும் கூறப்படும். இராமாயணமும் அவைகளுள் ஒன்றே.

தர்மசாஸ்திரங்கள் பல மஹரிஷிகளால் பலவாறாக இயற்றப்பட்டன என்றாலும்; வேதங்கள்—ஸ்மிருதிகளை ஆதாரங்களாக வைத்து கொண்டே தான் தேசத்திற்குத் தேசம், காலத்திற்குக் காலம், மனிதர்களுக்கு மனிதர் வித்தியாசத்துக்கு ஏற்றவாறு பல மஹரிஷிகள் இயற்றியிருக்கிறார்கள். இவைகளை நிபந்தன கிரந்தம் என்றும் சொல்லுவார்கள். பல மஹரிஷிகளால் எழுதப்பட்ட ஸ்மிருதிகளிலிருந்தும், புராணங்களிலிருந்தும் அநேக விஷயங்களை முரண்பாடு இல்லாத நிலையில் சேகரித்து அளிப்பதே தர்மசாஸ்திரம்.

ஆஸ்திக ஷட்தர்சனம் என்றும், நாஸ்திக ஷட்தர்சனம் என்றும், பன்னிரண்டு நூல்கள் கொண்ட தர்சன கிரந்தங்கள் என்ற ஒரு பிரிவு இருக்கிறது. அதில் பௌத்த தர்மத்தினுடைய நான்கு பிரிவும்; ஜைன தர்மமும், சாருவாகம் என்று சொல்லக்கூடிய நாஸ்திக தர்ம நூல்களும் இருக்கின்றன. அவைகளை நாஸ்திக ஷட்தர்சனம் என்று கூறுவார்கள். ஈஸ்வரனையும், வேதத்தையும் அஸ்தி என்று ஒப்புக் கொள்பவர்கள் ஆஸ்திகர்கள். அப்படி ஒப்புக்கொள்பவர்களைப் பற்றிக் கூறும் நூல்களை ஆஸ்திக ஷட்தர்சனம் என்று கூறுவர்கள். யோக சாஸ்திரம், ஸாங்கிய சாஸ்திரம் இவ்விரு நூல்களையும் ஸாங்கிய சாஸ்திரம் என்ற பெயராலும்; நியாய சாஸ்திரம், வைசேஷிக சாஸ்திரம் இவை இரண்டையும் பொதுவாகத் தர்க்க சாஸ்திரம் என்ற பெயராலும்; மீமாம்ஸா சாஸ்திரம் வேதாந்த சாஸ்திரம் ஆகிய இவ்விரு நூல்களையும், மீமாம்ஸா சாஸ்திரம் என்ற பெயராலும் வழங்குவார்கள். ஸாங்கிய சாஸ்திரத்தை ஸேச்வர ஸாங்கியம், நிரீச்வரஸாங்கியம் என்று இரு பிரிவாகக் கூறுவார்கள். மீமாம்ஸா சாஸ்திரத்தை, பூர்வ மீமாம்ஸா சாஸ்திரம், உத்தர மீமாம்ஸா சாஸ்திரம் என்று இரு பிரிவாகக் கூறுவார்கள். மேலே சொன்ன ஆறு நூல்களையும் இயற்றியவர்கள் வேதத்தையும், ஈஸ்வரனையும் ஒப்புக் கொண்டவர்கள். மற்ற ஜைனர்களும், பௌத்தர்களும், சாருவாகர்களும் (அழகாகப் பேசுபவர்கள்) ஈஸ்வரனையும் வேதத்தையும் ஒப்புக் கொள்ளாததால், அவர்கள் எழுதிய நூல்களுக்கு நாஸ்திக ஷட்தர்சனம் என்று பெயர்.

இந்த பன்னிரண்டு நூல்களுமே தத்துவ விசாரநூல்கள் (Philosophy) என்று பெயர் கொண்டன. வேதங்களின் உட்கருத்துக்களைத் தெரிவிக்கிறது மீமாம்ஸா சாஸ்திர நூல் வேதத்தின் கடைசி பாகமான உபநிஷத்தின் கருத்துக்களைத் தெரிவிப்பது வேதாந்த சாஸ்திரம். இவ்விரு சாஸ்திரங்களின் அர்த்தங்களையும், அனுபவங்களையும் அறிந்து கொள்வதற்குச் சாதகமாகவே மற்றெல்லா நூல்களையும் படிக்கட்டுகளாக ஏற்றுக் கொள்கிறோம்.

இவைகளைத் தவிர கிராமங்கள், நகரங்கள் அமைக்க வேண்டிய முறைகளைப் பற்றியும், கோயில்கள் கட்ட வேண்டிய முறைகளைப் பற்றியும், ஆகம சில்ப சாஸ்திர நூல்கள் தெரிவிக்கின்றன. இவை விக்ரக பிரதிஷ்டை, பூஜை உத்ஸவம் முதலியவைகளைப் பற்றியும் கூறுகின்றன. இந்த விதமான நூல்களும் நிறைய இருக்கின்றன. இத்த விதமான நூல்களும் சவாகமம்—வைஷ்ணவாகமம்—சாக்தாகமம் என மூன்று வகைப்படும். வைஷ்ணவாகமத்தில் பஞ்சராத்திர ஆகமம், வைகானஸ ஆகமம் என இரு வகை உண்டு. இது போன்று ஆகம சாஸ்திரங்களிலும் சில்ப சாஸ்திரங்களிலும் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. இவைகளைத் தவிர, பக்தி நூல்களும், நீதி நூல்களும், அவரவர்கள் அனுபவித்த நூல்களும், பலவித விஷயங்கள் கொண்ட அனுபவ நூல்களும் நிறைய இருக்கின்றன. இந்த நூல்களெல்லாம் சம்ஸ்கிருத பாஷையிலே இருந்து கொண்டிருக்கின்றன.

# கோதையளித்த இன்தமிழ்

ஆழ்கடலான்

*கோலச் சுரிசங்கை மாயன்செவ் வாயின்*
*குணம்விளவும்*
*சீலத் தனள், தென் திருமல்லி நாடி,*
*செழுங்குழல்மேல்*
*மாலைத் தொடைதென் னரங்கருக் கீயும்*
*மதிப்புடைய*
*சோலைக் கிளி, அவள் தூயநற் பாதம்*
*துணைநமக்கே.*
–திருக்கண்ணமங்கையாண்டான்

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர் ஆண்டாள் என்றழைக்கப்படும் கோதைநாச்சியார். இவரது அருளிச் செயல்கள் இரண்டு. ஒன்று திருப்பாவை முப்பது; மற்றது (நாச்சியார்) திருமொழி நூற்றுநாற்பத்து மூன்று. முதல் ஆயிரத்தில் இரண்டாவதாய் அமைந்துள்ளன இத்திருப்பாசுரங்கள். திருப்பாவையைத் தினமும் ஓதி அதிலே ஆட்பட்டவர் இராமாநுஜர். இவரைத் திருப்பாவை ஜீயர் என்று போற்றும் வைணவ உலகம். இம்முப்பதும் தெரியாதவர்களை இந்தப்பூமி சுமப்பது அர்த்தமற்றது என்பர். கவிவலார்.

*பாதங்கள் தீர்க்கும் பரம னடிகாட்டும்*
*வேத மனைத்துக்கும் வித்தாகும் – கோதைதமிழ்*
*ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை*
*வையம் சுமப்ப தூஉம் வம்பு*

இறைவன்மேற் தமிழ்செய்த சைவகுலதிலகமாய் விளங்குபவர் காரைக்காலம்மையார். இவரது அள்ளூறும் தேனன்ன பிரபந்தங்கள் பதினோராந் திருமுறையில் முதற்கண் அமைந்திருப்பினும், தேவாரதிருவாசகம் போல் அப்பாசுரங்கள் சீண்டப்படாதிருப்பது ஏனோ? முன்னோடியான புனிதவதியாரின் புனிதவார்த்தைகள் எடைக்கு எடை பெறுமானமுள்ளவை. இவர்போலவே ஆண்டாளும் ஒருதுருவ வெள்ளி எனலாம்.

இறைவனின் விண்ணொலி வாக்குக்கமையப் பெரியாழ்வார் தமது பூந்தோட்டத்திற் பெற்ற தெய்வக் குழந்தைக்கு, கோதை எனத்திருநாமம் சூடினார். அவள் பிற்காலத்தில் பூமாலை சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாயும், பாமாலை சூடிக் கொடுத்த தமிழ்க் கொடியாயும் மிளிர்ந்தார். அவர் தமிழை ஆண்டார். எனவே ஆண்டானும் அவளை ஆண்டு ஆட்கொண்டான். இப்பிராட்டியின் தந்தை, பிள்ளைகட்கு எப்படிப் பெயர்சூட்ட வேண்டும் என்றே ஒரு பதிகம் தந்துள்ளார்.

*மானிட சாதியில் தோன்றிற்றோர் மானிட சாதியை*
*மானிட சாதியின் பேரிட் டால்மறு மைக்கில்லை*
*வானுடை மாதவா கோவிந் தாவென் றழைத்தக்கால்*
*நானுடை நாரணன் நம்மன் னைநர கம்புகாள்*
*(பெரியாழ்வார் திருமொழி 4 : 6.4)*

*ஊத்தைக் குழியி லமுதம் பாய்வது போல் உங்கள்*
*மூத்திரப் பிள்ளையை என்முகில் வண்ணன் பேரிட்டு*
*கோத்துக் குழைத்துக் குணால மாடித் திரிமினோ*
*நாத்தந நாரணன் நம்மன் னைநர கம்புகாள்.*
*(பெரியதிருமொழி 4: 6.9)*

மிதிலை மன்னன் ஜனகன் யாகசாலை அமைக்க நிலத்தை உழுதான். உழவு சாலில்

அவதாரம் செய்த பூதேவியின் அம்சமாய் ஒரு பெண்குழந்தை தோற்றமளித்தது. அக்குழந்தையே இராமகாதையின் காப்பியத் தலைவனான இராமனைக் கரம்பற்றிய சீதாபிராட்டி. இவ்வண்ணமே கோதையின் அவதாரமும் அமைந்துளது. மா என்றாள் திருமகள், தவன் என்றாற் கணவன். எனவே திருமகள் கேள்வனான திருமால் மாதவன் எனவும் திருநாமம் பெற்றான். திருமகளாகிய மகாலட்சுமி மூன்று திருக்கோலங்களில் விளங்குகின்றாள். திருமாலின் உள்ளத்தில் என்றும் அகலா இடங் கொண்டு ஸ்ரீதேவியாகப் பொலிவது அவளின் முதற்றிருக் கோலம் அலைமகளாகத் திகழ்கிறாள் அன்னை இலட்சுமி. இவளை அஷ்டஇலட்சுமிகளாகவும் வணங்கும் இந்து தர்மம். அஷ்டலட்சுமிகட்கான ஆலயம் சென்னையில் அமைந்துள்ளது. ஸ்ரீதேவி போன்று பூதேவி (பூமாதேவி – நிலமகள்) யின் நிலை இரண்டாவது. ஸ்ரீமந்நாராயணனுடைய பெருமையையும் இனிய எளிமையையும் பாடிப்பாடி அவனது காதல் வெள்ளத்திலே அமிழ்ந்து களிப்பவள் நீலாதேவி; இம்மூவரில் பூமியின் அவதாரமே ஆண்டாள்.

பெரியாழ்வாருக்குக் குழந்தைச் செல்வமே இல்லை. அவர் வடபெருங் கோயிலுடைய வடபத்திரசாமிக்கு பூமாலைத் தொண்டு செய்வதற்காக பூந்தோட்டம் அமைத்திருந்தார். அத்திருத்துழாய் வனத்துக்குச் சென்றபோது கிடைத்த இலாவண்ய தெய்வீகமான பெண்குழந்தைதான் ஆண்டாள். இவளுக்கு அவர் வைத்த திருப்பெயர்தான் கோதை என்பது.

கோதா என்றால் வடமொழியில் இனிய நன் மொழிகளை அளிப்பவள் என்று பொருள். (கோ – வாக்கு, தா – அளிப்பவள்). பூமித்தாயினால் உலகுக்கு அளிக்கப்பட்டவள் என்ற கருத்தும் அப்பதத்திற்கு உண்டு (கோ– பூமி, தா – கொடுக்கப் பெற்றவள்) பூமாலையும், பாமாலையும் பரந்தாமனுக்குச் சூட்டியவள் என்ற பெரும் பெயருக்கிலக்கியமாய்த் திகழ்பவளும் இவளே. (கோ– மாலை, தா – சூட்டியவள்) இவை மூன்றுமே அன்னாருக்கு சாலப் பொருத்தமானவை.

சொல்மாலை பாடுவதில் வல்லவளாக, பூமி தேவியின் அவதாரமாகப் பாண்டிநாட்டில் (ஸ்ரீ வில்லிபுத்தூரில்) திருவாடிப் பூரத்தில் தோன்றி அரங்க நாதனுக்குத் தேவியாக வாழ்க்கை பெற்ற கோதை என்ற ஆண்பாளை வணங்குகிறேன் என்கிறது திவ்ய சூரிதோத்திரம்.

இவ்வாறு போற்றப்படும் ஆண்டாளின் வளர்ப்புத் தந்தையான விட்ணு சித்தர் தமது பாசுரத்தில் ஆண்டாள் ஸ்ரீ ரெங்க நாதனுடன் கலந்ததை எண்ணி எண்ணிப் பாடினார். ஒரு பதிகமே பாடியுள்ளார்.

*ஒரு மகள் தன்னை யுடையேன்*
*உலகம் நிறைந்த புகழால்–*
*திருமகள் போல வளர்த்தேன்*
*செங்கண் மால் தான்கொண்டு போனான்*
*பெருமக ளாய்க்குடி வாழ்ந்து*
*பெரும்பிள்ளை பெற்ற அசோதை*
*மருமகளைக் கண் டுகந்து*
*மணாட்டுப்பு றம்செய்யுந் தொலோ*
*(பெரியாழ்வார் திருமொழி 3: 84)*

இறைவனை நினைந்து திருப்பல்லாண்டு பாடியமையானும், கோதையின் தந்தையாய் நிலையுடன் இறைவனின் மாமனாகிய நிலை எய்தியமையாலும் மற்றவர்களைவிட அளவற்ற சிறப்புப் பெற்றமையாலும். அவரைப் பெரியாழ்வார் என்று அழைத்தனர்.

ஒரு தினம் திருமாலுக்குச் சாத்தக் கட்டி வைத்திருந்த திருத்துளபமாலையை ஆண்டாள்

அணிந்திருந்ததைக் கண்டு மணந்துடித்தார் ஆழ்வார். எனவே அன்று மாலை சாத்தாமையால் மனம் கவன்ற ஆழ்வார் முன் சொப்பனத்தில் பரமன் தோன்றி விட்ணு சித்தரே! இன்று ஏன் நீங்கள் துளபமாலையை எனக்குச் சூட்டவில்லை என் அடியார்கள் தொட்ட பொருள்களை நான் மிக்க மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆண்டாள் வெறும் மானிடப் பெண் எனக் கருத வேண்டாம் என்றான். முதற்றினம் ஆண்டாள் சூடிய துளபத்தாமம் (மாலை) சிறிதும் வாடாமல் இருப்பது கண்டு அதிசயமடைந்து அம்மாலையை எடுத்துச் சென்று எம்பெருமானுக்குச் சாத்தினார். அன்று எப்பெருமானென்றுமே காணப்படாத பேரெழிலுடன் காட்சியளித்ததைக் கண்டு பேரானந்தமும் கொண்டார்.

இவ்வாறு பெரும்புகழ் பூத்த ஆண்டாளை ஸ்ரீரங்கநாதனிடம் அழைத்துச்சென்றார் ஆழ்வார். பல மங்களகரமான வரவேற்புடன் ஆண்டவன் அவரை ஏற்றுக் கொண்டார்.

ஆண்டாள் பாசுரங்கள் மிக உயர்ந்தவை அவற்றைப் பாராயணம் பண்ணினால் உயர்ந்த நிலை எய்தலாம். சொல்லழகும், கவியழகும், கருத்தழகும், மொழியழகும், மோனையெதுகை அழகும் நிறைந்த கவிதைகள் அவை. பரந்தாமனையே பாடும் திறன் மிக்கவை. எளிமையும்,தெளிவும், அழகும், ஆழமும் நிறைந்தவை, ஸ்ரீரங்கநாதனின் அழகைக் கொட்டுகிறாள், ஒரு கவிதையில் இப்படி.

*எழிலுடைய வம்மனீர் ! என்னரங்கத் தின்னமுதர்*
*குழலழகர், வாயழகர், கண்ணழகர், கொப்பூழில்*
*எழுகமலம் பூவழக, ரெம்மானார், என்னுடைய*
*கழல்வளையைத் தாமும் கழல்வளையே யாக்கினரே*

*– நாச்சியார் திருமொழி 11.2*

## தெய்வீக வாழ்வு !


இளம் வயதில் நல்ல வேலையில் சேர்ந்து நிறையச் சம்பாதிக்க வேண்டும் என்கிற ஆசை நமக்கு இருக்கிறது. குழந்தைகளையும் சௌகரியமாக வளர்த்து நன்றாகப் படிக்க வைக்கிறோம். ஆனால் மனம் இத்துடன் திருப்தி அடைந்து விடுவதில்லை. 'தனக்கென்று சொந்தமாக ஒரு வீடு இல்லையே?' என்று ஏங்குகிறான் மனிதன். கடன் வாங்கி, 'க்யூ' வில் நின்று சிமெண்ட் வாங்கி, சிரமப்பட்டு வீட்டைக் கட்டி முடிக்கிறான். செலவோடு செலவாக வீட்டுக்கு வேண்டிய சாதனங்கள், சோபா செட், கட்டில் எல்லாவற்றையும் வாங்கிப் போடுகிறான். "அப்பாடா!" என்று பெருமூச்சு விடுகிறான்.

ஆனால் அவனுடைய உழைப்பையும் முயற்சியையும் குழந்தைகள் பாராட்டுவதில்லை. அவர் சொன்ன பேச்சைக் கேட்க மறுக்கிறார்கள். குழந்தைகள் பெரியவர்களாகி விடுகிறார்கள். 'கவலை விட்டது. இனிமேல் நிம்மதியாக இருக்கலாம்' என்று அவன் நினைக்கிறான். அதற்குள் வீடு பழசாகி விட்டது. நிறையப் பழுது பார்க்க வேண்டி இருக்கிறது. கட்டில், சோபா எல்லாம் பழையதாகவும் மூளியாகவும் கண்ணுக்குப் படுகின்றன. அடியோடு தலையாக ஒவ்வொன்றையும் புதுப்பிக்க வேண்டி இருக்கிறது. மேலும் உழைக்கிறான். இன்னும் சம்பாதிக்கிறான், எல்லாவற்றையும் சரி பண்ணி விடுகிறான்.

இனிமேல் பரவாயில்லை. எல்லாவற்றையும் அனுபவிக்கலாம். ஆனால் அவனுக்கு வயதாகி விட்டதே? அந்த சுகங்களையும், இன்பங்களையும் ஏற்க உடம்பில் பலமும் சக்தியும் இல்லையே? பிள்ளைகள் சம்பாதிக்கிறார்கள்? "அப்பா! உனக்கு வயதாகி விட்டது. பேசாமல் ஒரு பக்கம் உட்கார்ந்து கொண்டிரு" என்று அல்லவா சொல்கிறார்கள்? மன அமைதியைத் தேடி வாழ்நாள் முழுவதும் ஓடிக் கொண்டிருந்தது வியர்த்தமானதை அவன் இப்போது புரிந்து கொள்கிறான். ஆனால் அவன் தன் ஏமாற்றத்தை வெளிக்காட்டுவதில்லை. தன்னை வணங்கும் குழந்தைகளை, "நன்றாக இரு; சிரேயஸாக இரு" என்று சொல்லி ஆசீர்வாதம் செய்வதில் திருப்தி அடைந்து விடுகிறான். தன் தோல்விகளையெல்லாம் மறந்து போய்விடுகிறான்.

இன்பம் கிடைக்கும் என்று நாம் நம்புகிற அமைப்பில், எப்போதும் மாறிக் கொண்டே இருக்கும் பொருட்களை ஒன்று சேர்ப்பதற்காக வியர்த்துக்களைத்து விறு விறுக்கிறோம். ஒரு விருப்பத்திலிருந்து இன்னொரு விருப்பத்துக்கு விரட்டப்படுகிறோம். ஆனால் நம்முடைய தேவை நிறைவேறுவதில்லை. அதை எப்போது உணருகிறோமோ, அப்போது தெய்விக வாழ்க்கையில் மனம் ஊன்றுகிறது. அங்கே எல்லாப் பிரச்னைகளும் துன்பங்களும் முடிவடைகின்றன.

(சுவாமி சின்மயானந்தா)



# திருக்கோவில் வழிபாடு

ஒரு மனிதனுடைய உடலமைப்பை ஆதாரமாகக் கொண்டே திருக்கோவில்கள் கட்டப்பட்டு, வழிபாட்டுக்கு உரிய அமைப்பாக மதிக்கப்படுகின்றன.

குண்டலினி சக்தி உறங்கிக்கிடக்கும் மூலாதாரமே கொடிமரமாகச் சித்தரிக்கப்பட்டு, ஸ்தாபிதம் செய்யப்பட்டுள்ளது. கொடிமரத்தில் காணப்படும் 32 வளையங்கள், மனித உடலின் முதுகுத் தண்டிலுள்ள 32 எலும்புகளைக் குறிப்பதாகும். '32' என்பது எண்கணிதத்தில் குருவின் ஆதிபத்தியத்தில் மிகுந்த சிலாக்கியத்திற்குரியதாகும். மேலும் மனிதனுடைய முப்பத்திரண்டாவது வயதில்தான் அறிவுப் பல் முளைக்கிறது.

கொடிமரத்தில் காணப்படும் கொடிக்கயிறுகள் இடைகலை, பிங்கலை என்ற நாடிகளைக் குறிக்கின்றன. அவற்றின் வழியே மூச்சை சரியான முறையில் அமைத்து யோகம் பயிலும்போது, ஆத்மா 'ஆனந்தம்' எனப்படும் இறையடியை அடைந்து, பிறவியிலாப் பெருநிலையை அடைகிறதென்பதைக் குறிக்கவே திருவிழாவின் போது, 'கொடியேற்றம்' நடைபெறுகிறது.

எண்ணங்களின் பிறப்பிடமாக விளங்கும் கொப்புள் ஸ்தானத்தில் சிவனுடைய வாயிற் காப்போனாகிய நந்தியைப் பிரதிஷ்டை செய்வதன் மூலம் எண்ணங்களை அடக்கி, மனதினைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது.

காமம், பொறாமை, ஆணவம் போன்ற தீமைகளை இருதயத்திலிருந்து நீக்க வேண்டுமென்பதை – பலியிடப்படவேண்டுமென்பதை 'பலிபீடம்' குறிக்கிறது.

கர்ப்பக்கிரகம் அல்லது மூலஸ்தானத்தை பிரம்ம கபால உருவில் அமைப்பது வழக்கம். புருவ மத்தியில் ஆக்ஞா சக்கரத்தில் ஆன்ம நேய ஒருமைப்பாடு ஏற்படும்பொழுது ஆன்ம ஒளி ஏற்படும் என்பதைக் குறிக்கவே லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

தத்துவம் :

கோபுரவாயில் :

மூலாதாரம் - அதிதேவதை : விநாயகர், முருகன்.

சுவாதிட்டானம் - பிரம்மா, சரஸ்வதி – பிருதிவி தத்துவம்

மணிபூரகம் - திருமால், லட்சுமி – அப்பு தத்துவம்.

அனாகதம் - சிவம், சக்தி – தேயிதத்துவம்

விசுத்தி - மகேசன், மகேசை – வாயு தத்துவம்

ஆக்ஞை - சதாசிவன், மனோன்மணி – ஆகாயத் தத்துவம்.

கர்ப்பக்கிரகத்தின் மேலுள்ள ராஜகோபுரம் பரவெளித் தத்துவமாகிய நந்தனத்தைக் குறிப்பதாகும்.

ஆறு மண்டபங்கள் :


| | | |
|---|---|---|
| மூலாதாரம் | - | கர்ப்பக்கிரகம். |
| சுவாதிட்டானம் | - | அர்த்த மண்டபம் |
| மணிபூரகம் | - | மகா மண்டபம் |
| அனாகதம் | - | ஸ்நபன மண்டபம் |
| விசுத்தி | - | அலங்கார மண்டபம் |
| ஆக்ஞை | - | சபா மண்டபம் |

ஆயிரங்கால் மண்டபம், மூளையிலிருக்கும் 1000 இதழ்கள் கொண்ட தாமரை போன்ற உள் மணியையும், பக்கத்தில் உள்ள தீர்த்தம், மூளையின் பக்கத்தில் உள்ள நீர் நிலையையும் குறிப்பதாகும். இதைக் குறிக்கவே கோவில்களில் உள்ள தெப்பக்குளத்தில் தாமரை மலர்கள் வளர்க்கப்படுகின்றன.

நடராஜருடைய பஞ்ச சபாமண்டபங்களையும், பஞ்ச கோசங்களாக பாவிப்பதுண்டு. அன்னமயகோசம் இராஜசபையாகவும், பிராணமய கோசம் தேவ சபையாகவும், மனோமயகோசம் நிருத்த சபையாகவும், விஞ்ஞானமய கோசம் கனகசபையாகவும், ஆனந்தமய கோசம் சிற்சபையாகவும் விளங்குகின்றன.

இத்துணை சிறப்புக்களை உள்ளடக்கி பெரியோர்கள் வடிவமைத்துக் கொடுத்துள்ள கோவில்களின் பெருமையைப் பாதுகாத்து நாமும், நற்பேறு பெற இறைவனை இறைஞ்சுவோமாக.

# ஷோடச உபசாரம்



ஒவ்வொரு உபசார திரவியத்திற்கும் ஓர் அதிதேவர் உரியவர்.

மகாதீபத்தில் –

பதினொரு அடுக்கு பதினொரு ருத்திரர்களையும், ஒன்பது அடுக்கு நவசக்தியையும், ஏழு அடுக்கு சப்தமாத்ரு தேவதைகளையும், ஐந்து அடுக்கு பஞ்ச பிரம்மத்தையும், மூன்று அடுக்கு மும் மூர்த்திகளையும், ஒரு அடுக்கு சிவனையும் குறிக்கும்.

தூபம் அக்னிதேவரையும், மகாதீபம் (அடுக்கு தீபம்) சிவனையும், நாக தீபம் கேதுவையும், விருஷபதீபம் தர்மதேவனையும், மிருகதீபம் விஷ்ணுவையும், பூர்ணகும்பம் ருத்ரனையும், பஞ்சதீபம் பஞ்சபிரம்ம மந்திரங்களையும், நக்ஷத்திரதீபம் இருபத்தியேழு நக்ஷத்திரங்களையும், மேருதீபம் பன்னிரு ஆதித்யர்களையும், திருநீறு சிவனையும், கண்ணாடி சூரியனையும், குடை சந்திரனையும், சாமரம் மகாலக்ஷ்மியையும், வியஜனம் அயனையும், விசிறி வாயுதேவனையும், கற்பூரம் அக்னிதேவனையும் குறிக்கும்.

ஒவ்வோர் 'உபசாரத்தின்' பொழுதும் அந்தந்த உபசாரத்திற்குரிய அதிதேவர்களை வணங்க வேண்டும்.

தீபத்தின் ஜ்வாலை நான்கு அங்குலம் இருப்பது மிகச்சிறந்தது. மூன்று அங்குலம் மத்யமம். இரண்டு அங்குலம் அதமம்.

விருந்தோம்பல் நமது பாரம்பரியம் மிக்க பண்பாடு. அதனால் எத்தகைய நல்லெண்ணம் உருவாகும் என்பதை சொல்லி முடியாது.

நம்மைப் படைத்து, காத்து, அருள் பாலிக்கும் இறைவனுக்கு நன்றி செலுத்துதல் நமது கடமையாகாதா? சாதாரண மாந்தருக்கே உபசாரம் செய்கின்றோம். அவர்கள் திருப்திக்காக என்னவெல்லாமோ முயற்சிகள் செய்கின்றோம்.

இதையே இறைவனுக்குச் செய்யும் போது, இறைவழிபாடு என்கின்றோம்.

இறைவனுக்குச் செய்யும் உபசாரம் பதினாறு வகைகளாகும். இதில் இரு வகைகள்.

முதல் வகை

ஆவாஹனம், ஸ்தாபிதம், பாத்யம், ஆசமனம், அர்க்யம், அபிஷேகம், வஸ்திரகந்தம், புஷ்பம், தூபதீபம், நிவேதனம், பலிதானம், ஹோமம், பலி, பாட்டுவாத்தியம், நர்த்தனம், உத்வாசனம் முதலியவை ஆகும்.

மற்றொரு வகை

தூபம், மகாதீபம், நாகதீபம், விருஷப தீபம், மிருக தீபம், பூர்ணகும்பம், பஞ்சதீபம், நக்ஷத்திர தீபம், மேருதீபம், திருநீறு, கண்ணாடி, குடை, சாமரம், வியஜனம், விசிறி, கற்பூர ஆரத்தி முதலியவை ஆகும்.

## உபசாரம் செய்யும் முறை

உபசார திரவியங்களின் மேல் புஷ்பத்தை வைத்து, நிரீக்ஷணம், ப்ரோக்ஷணம் செய்து, பஞ்சபிரும்மத்தை நியசித்து, திக்பந்தனம், அவகுண்டம் செய்து, திரிசூல முத்திரைகாட்டி, மந்த்ரோச்சாரண பூர்வமாகத் தீபத்தை எடுத்துக் கொண்டு, நேத்ரதோஷ நிவர்த்தியின் பொருட்டு நேத்திரத்தின் நேரில் தீபத்தையும், நாசிக்கு நேரில் தூபத்தையும் கொடுக்க வேண்டும்.

தீபாராதனை மூன்று முறை சுற்ற, அவை முறையே பூமி, சுவர்க்கம், ஆகாயம் இவைகளைக் காக்கும்.

# அட்ட மூர்த்தம்

*'உலகம் யாவையும்*
*தாம் உள ஆக்கலும்,*
*நிலை பெறுத்தலும்,*
*நீக்கலும் நீங்கலா*
*அலகிலா விளையாட்டு*
*உடையார் அவர் தலைவர்..*

என்று கடவுள் வணக்கத்தோடு 'கவிச்சக்கரவர்த்தி கம்பர் தம் காவியத்தை ஆரம்பித்திருக்கிறார். இந்த உலகத்தை எல்லாம் படைப்பது, காப்பது, அழிப்பது என்பதையே தன்னுடைய நித்ய விளையாட்டாகக் கொண்டிருப்பவர் கடவுள் என்பது அவரது விளக்கம். உலகத்தைப் படைக்கும்போது அவரைப் பிரமன் என்கிறோம். காக்கும்போது அவரை விஷ்ணு என்கிறோம்; அழிக்கும் போது அவரை ருத்திரன் என்கிறோம். எல்லாத் தொழிலையும் செய்யும் இறைவனை இவர்கள் எல்லோருக்கும் மேலானவனை 'சிவன்' என்கிறோம். மூவுருவிற்கும் முதல் உருவாய் நிற்கும் இந்த மூர்த்தியையே அறுபத்து நான்கு திருவுருவில், அஷ்ட மூர்த்தமாக, முப்பத்து முக்கோடி தேவர்களும் தொழுது வணங்கியிருக்கிறார்கள்; வணங்கி வாழ்த்தியிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட இறைவனது திருவுருவத்தின் அடியையும் முடியையும் காணத்தான் அன்று பிரம்மனும் விஷ்ணுவும் முயன்றிருக்கிறார்கள். வராக உருவில் அண்டத்தைத் துளைத்துக் கொண்டே கீழ்நோக்கி சென்றிருக்கிறார் விஷ்ணு. அன்ன உருவில் மேல்நோக்கி வானில் பறந்தே சென்றிருக்கிறார் பிரம்மன். அப்படியெல்லாம் சென்றும் இருவருக்கும் அடிமுடி காண இயலாது போய்விட்டது. இப்படி இருவருக்கும் எட்டாதவனாக இருக்கும் இறைவனே பக்தர்களுக்கு எல்லாம் எளிதாக எட்டுபவனாக எட்டுத்திரு உருவில் அமைந்து விடுகிறான் !

சிவனுடைய மூர்த்தங்கள் அறுபத்துநான்கு ஆம், எட்டை எட்டால் பெருக்கினால் அறுபத்துநான்கு தானே... இந்த அறுபத்து நான்கு உருவங்களுக்கும் அடிப்படையான எட்டுத் திருஉருவங்களின் விளக்கங்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

## வீணாதர தக்ஷிணாமூர்த்தி

இறைவனோ இசை வடிவினன். ஏழிசையாய் இசைப் பயனாய் இருப்பவன் அவன். தும்புரு, நாரதர், சுகர் முதலியவர்களுக்கும் இசையைக் கற்பித்தவன். தன் கையில் வீணையேந்தி அதில் எழுப்பிய இசை மூலமாக உலகையும் – உலகில் உள்ள உயிர்களையும் சிருஷ்டி பண்ணியிருக்கிறான். அதனால் தான், வேயுறுதோளிபங்கனாகவும் – விடமுண்ட கண்டனாகவும் அமைந்தவனே, மிக நல்ல வீணை தடவி மகிழ்கிறவனாகவும், உயிர்களை மகிழ்விக்கிறவனாகவும் காட்சி கொடுத்திருக்கிறான் ஞானசம்பந்தருக்கு. ஆம், ஓசை ஒலி எல்லாம் ஆனவனாக இருப்பவன் வீணாதரனாகவும் நிற்கிறான்.

## சந்திரசேகரர்

பிரம்மாவின் புத்திரர்களில் ஒருவன் தக்ஷன், இந்தத் தக்ஷனுக்கு அசுவினி முதலிய இருபத்தேழு பெண்கள். இந்த இருபத்தேழு பேரையும், அழகிற் சிறந்த சந்திரனுக்கு மணம் முடித்து கொடுகிறான். இருபத்தேழு மனைவிகளிடத்தும் பாரபட்சமில்லாமல் நடந்து கொள்ள முடியவில்லை. சந்திரனுக்கு, கார்த்திகை, ரோகிணி இருவரிடம் மட்டும் அதிக அன்பு. இதைக் கண்டு மற்ற இருபத்தைந்து பெண்களும் தந்தையிடம் முறையிடுகிறார்கள். இதனால் கோபமடைந்தவன், சந்திரனை நாளுக்கொரு கலையாய்க் குறைந்து தேயச்

சாபமிட்டு விடுகிறான். அவ்வாறே கலை இழந்து தேய்ந்து தேய்ந்து மெலிகிறான் சந்திரன். சாபவிமோசனம் பெற, மெலிந்த நிலையிலே சிவபெருமானது திருவடிகளிலே விழுந்து வணங்குகிறான். அடி பணிந்தவரை ஆதரிக்கும் அருள்வள்ளல், மெலிந்த சந்திரனைத் தன் சடைமுடியிலே தரித்துக் கொள்கிறார். தேய்ந்து மெலிந்த கலை, நாளொரு வண்ணமாக வளர்ந்து ஒளிபரப்பவும் அருள் புரிகிறார். ஆம், சந்திரன் உயர்ந்ததொரு ஸ்தானமும் பெற்று விடுகிறான். ஆண்டவன் அடியில் வீழ்ந்து வணங்கியதால் சந்திரனுக்கு அருள்பாலித்த காரணத்தால், சந்திரசேகரர் ஆகிறார் சிவன்.

### திரிபுராந்தகர்

பொன், வெள்ளி, இரும்பு என்னும் மூன்று உலோகங்களில் பறக்கும் மூன்று உலகங்களைச் சிருஷ்டித்துக் கொண்டு, மூன்று அசுரர்கள் எல்லா உலகங்களையும் பயங்கரத்துக்கு உள்ளாக்குகிறார்கள். இவர்களது கொடுமை தாங்காமல் தேவர்களும் முனிவர்களும் சிவபிரானிடம் சென்று முறையிடுகிறார்கள். எல்லோருக்கும் அபயம் அளிக்கிறார். அவர் திரிபுர ஸம்ஹாரத்திற்குப் புறப்படுகிறார். பூமியைத் தட்டாகவும், சூரிய–சந்திரர்களை சக்கரங்களாகவும் வைத்து ரதத்தை அமைக்கிறார். நந்தி தேரை இழுக்க, பிரம்மாவை சாரத்தியம் செய்யச் சொல்கிறார் சிவன். மேருவை வில்லாக வளைக்கிறார்: வாசுகியை நாணாகப் பூட்டுகிறார். விஷ்ணுவையே பாணமாக நீட்டுகிறார். ஆனால் கடைசியில் இத்தனை சிரமமும் வேண்டியிருக்கவில்லை. பக்கத்தில் இருக்கும் அன்னையைப் பார்க்கிறார். ; சிரிக்கிறார் அவ்வளவுதான்! திரிபுரங்கள் எல்லாம் வெந்து பொடி சாம்பலாகி விடுகின்றன. காமம், வெகுளி, மயக்கம் என்ற திரிபுர ஆட்சியை அடக்கி ஒடுக்கும் அருளுடையவரே திரிபுராந்தகர்.

### கஜ ஸம்ஹாரர்

யானை வடிவிலே அசுரன் ஒருவன், கயாசுரன் என்னும் பெயரோடு அகோரதவம் செய்து, பிரம்மனிடம் அரிய வரங்களைப் பெறுகிறான். வரபலம் பெற்ற மமதையால் மக்கள், தேவர் முதலிய எல்லோரையும் துன்புறுத்துகிறான். தேவர்கள் இறைவனிடம் முறையிடுகின்றனர். முறையிடும் தேவர்களை முந்திக் கொண்டு சிவபிரான் பேரிலே பாய்கின்றான் கயாசுரன். வலுச்சண்டைக்குப் போகாதவர் என்றாலும் வந்து சண்டையை விடுவாரா? கோர உருவில் காயசுரன் உடலைப் பிளந்து உள்ளேயே புகுந்து விடுகிறார். உமையம்மையோ அஞ்சி நடுங்குகிறாள். ஆனால் கயாசுரன் உடலினுள் புகுந்த சிவபெருமான் அவன் உடலைக் கிழித்துக் கொண்டு உக்ர மூர்த்தியாக வெளிப்படுகிறார். அந்த யானையின் தோலையே உத்தரியமாய்ப் போர்த்திக் கொள்கிறார். கயாசுரனை ஸம்ஹரித்து மக்களைக் காத்த கஜஸம்ஹாரர் ஆகிவிடுகிறார்.

### கால ஸம்ஹாரர்

மிருகண்டு முனிவருக்கு வெகுகாலமாகப் புத்திரப் பேறு இல்லை. அதற்காக, சிவபெருமானை நோக்கித் தவம் செய்கிறார். சிவபிரான் அவர் முன் தோன்றி, "கெட்ட குணம், குருடு, செவிடு, ஊமை, முடம், அறிவின்மையோடு நூறு வயது வாழும் புதல்வன் வேண்டுமா? அல்லது அழகு, கல்வி, அன்பு, நோயின்மையோடு பதினாறு வயதே ஜீவித்திருக்கும் புத்திரன் வேண்டுமா?'' என்று கேட்கிறார். வயது குறைந்தாலும், சத்புத்திரனே வேண்டும் என்கிறார் மிருகண்டு. இறை அருளால் மார்க்கண்டேயன் பிறக்கிறான். அழகனாக, அறிஞனாக வளர்கிறான். குறித்த பதினாறு ஆண்டும் கழிகிறது. ஆயுள் முடியப் போகிறது என்று அறிந்த இளைஞன், காசி சென்று மணிகர்ணிகைக்கு அருகே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜிக்கிறான். குறித்த காலத்தில் காலன் வருகிறான்; பாசக்கயிற்றை வீசுகிறான். மார்க்கண்டனோ சிவலிங்கத்தைக் கட்டிப்பிடித்துக் கொள்கிறான். ஆபத்சகாயனான சிவபெருமான் சிவலிங்கத்திலிருந்து எழுந்து, காலனை காலால் உதைத்து அவனை ஸம்ஹரிக்கிறார். மார்க்கண்டயேன் சிரஞ்சீவியாகிறான். பின்னர் பூதேவியின் வேண்டுகோளுக்கு இசைந்து காலனை எழுப்பி, அவன் தன் தொழிலைச் செய்யப் பணிக்கிறார். காலனைக் கடிந்தவரே கால ஸம்ஹாரர்.

### பிக்ஷாடனர்

தாருகாவனத்து ரிஷிகள் வேதம் ஓதி, யாகம் செய்து சிறந்த அறிவையும் பெறுதற்குரிய சித்திகளையும் கைவரப் பெறுகின்றனர். அறிவோடும் ஆற்றலோடும் வளர்கிறது ஆணவமும். தம்மை ஒப்பாரும் தமக்கு மிக்காரும் இல்லை என்ற கர்வமும் அதிகம் ஆகிறது. இவர்களது கர்வத்தை அடக்கப் புறப்படுகின்றனர் சிவபெருமானும் விஷ்ணுவும். ஆடை அணியாத அழகனாக பிக்ஷைப்பாத்திரம் ஏந்திப் புறப்படுகிறார் சிவபெருமான். இவரது அழகில் மயங்கி நிறை அழிகின்றனர் ரிஷி பத்தினிகள். காண்பவரை மயக்கும் மோகினியாக வருகிறார் மகாவிஷ்ணு. அந்த மோகினியைப் பின் தொடருகிறார்கள் முனிவர்கள். ஆணவம் அழிந்ததும் அறிவில் தெளிவு பெறுகின்றனர். பிக்ஷைபாத்திரம் ஏந்தி, நமது அன்பையும் ஆணவத்தையும் பிக்ஷை கேட்கிறார் பிக்ஷாடனர்.

### கல்யாணசுந்தரர்

தக்ஷன் மகளாகப் பிறக்கிறாள் தாக்ஷாயணி. சிவபெருமானையே மணக்கிறாள். ஆனால் தக்ஷன் நடத்திய யாகத்தில் கணவனைத் தகப்பன் மரியாதை செய்யவில்லை என்பதற்காக யாகபூமிக்கே சென்று தந்தையுடன் வாதாடி, யாக குண்டத்திலேயே விழுந்து தன்னைப் பரித்தியாகம் செய்து கொள்கிறாள். இறைவன் கருணையால் பின்னர் பர்வதராஜன் மகள் பார்வதியாகப் பிறந்து வளர்கிறாள். இறைவனையே தன் நாயகனாக அடையத் தவம் செய்கிறாள். ஆனால் இறைவனோ யோகத்தில் இருக்கிறார். அவருடைய யோகத்தைக் கலைக்க மன்மதனையே ஏவுகிறார்கள் தேவர்கள். மன்மதன் வெற்றி பெறுகிறான். யோகநிலை கலைந்து சிவபெருமானும் மலையரசன் மகளை மணந்து கொள்கிறார். மணமகளைக் கைப்பிடித்து உடனடியாக கயிலைமலைக்கே அழைத்துச் செல்கிறார். அப்படி மணமகனாக, மணமகள் பார்வதியோடு செல்லும் கோலம் தான் – கல்யாணசுந்தரர் திருக்கோலம்.

### சோமாஸ்கந்தர்

கயிலை மலையிலே பார்வதியுடன் பரமசிவன் இருக்கிறார். அப்போது, அசுரன் சூரபன்மன் ஆட்சியில் நலிந்த தேவர், குறை இரந்து நிற்கின்றனர். அவர்களை அருள்பாலிக்கத் திருவுளம் கொண்டு,, தன் நெற்றிக்கண்ணைத் திறக்கிறார். அதிலிருந்து ஆறு பொறிகள் புறப்படுகின்றன. அவற்றை வாயுவும் அக்கினியும் சேர்ந்து ஏந்தி எடுத்துச் சென்று சரவணப்பொய்கையில் விட்டு விடுகின்றன. ஆறு பொறிகளும் ஆறு அழகிய குழந்தைகள் ஆகின்றன. ஆறு கார்த்திகை மாதர்கள் அக் குழந்தைகளை எடுத்துப் பாலூட்டுகின்றனர். அத்தனது ஆணையின்படி, அன்னை பார்வதி சரவணப்பொய்கைக்கு வந்து ஆறு குழந்தைகளையும் சேர்த்து எடுத்து அணைக்கிறாள். அன்று உருவாகிறான் ஆறுமுகன். அப்படி உருவான கந்தன் 'ஏலவர் குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்' இடையிலேயே தனக்கும் ஓர் இடம் தேடிக் கொள்கிறான். சூரபன்மனை வென்று சூரசம்ஹாரம் ஆகும் முன்பே தந்தையும் தாயும் பாலனோடு வீற்றிருக்கும் திருக்கோலமே சோமாஸ்கந்த மூர்த்தம்.


★ கடவுளின் அருள் என்ற பெட்ரோல் எல்லோருக்குமே ஒரே விதமாகத்தான் கிடைக்கிறது. ஆனால் நமது மனம் என்ற காரின் தன்மையைப் பொறுத்தே வாழ்க்கை அமைகிறது.

★ மகா ஞானிகள், காலம், வயது என்ற எல்லைகளைக் கடந்தவர்கள். அவர்களுக்கு முடிவு என்பதோ, மறைவு என்பதோ கிடையாது.

★ துணிவும், மனவலிமையும் பெறவும், எண்ணங்களிலும் செயல்களிலும் தூய்மை பெறவும் தியானம் மிகமிக அவசியமானது.

★ ★ ★

# ஜபயோகம்



மனத்தைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிரமம். அதிலும் பிரார்த்தனையில் அதை ஈடுபடுத்துவது மிகவும் கடினம். அப்படிச் செய்வதற்கும் உதவுகிறது ஜபம். குறிப்பிட்ட மந்திரத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லுவதன் மூலம், நம்மால் அலைபாயும் மனத்தை நெகிழ்ந்து படிய வைக்க முடிகிறது.

தியானத்தில் இதை மானசீகமாகச் செய்கிறோம். மனப்பக்குவம் உள்ளவர்கள் தியானத்தில் மனத்தை எளிதாக ஒருமுகப்படுத்த முடியும். ஆனால் பக்தி மார்க்கத்தில் ஈடுபடும் முயற்சியில், ஆரம்பநிலையில் இருப்பவர்கள், ஜபம் செய்வதன் மூலமே மனத்தின் எண்ணங்களை ஒருமுகமாகக் குவிக்க முடியும்.

ஜபம் தியானத்துக்கு வழிசெய்யும் படி என்றும் சொல்லலாம். பக்குவம் செய்து டின்னில் அடைக்கப்பட்ட உணவுகளைக் கொஞ்சநேரம் அடுப்பில் சூடுகாட்டினால் போதும் ; உணவு தயாராகிவிடும். ஜபம் அதைப் போன்றுதான். பக்குவம் பெற ஜபம் உதவுகிறது. அதன்பின் தியானம் செய்வது மிகவும் எளிதாகி விடுகிறது. மிகவிரைவில் மனத்தை நிலைநிறுத்தும் சாதனை நமக்குக் கைகூடி வந்து விடுகிறது.

நினைத்துப் பாருங்கள். ஒரு பொருளை மனத்தில் நினைக்காமல் உங்களால் அதன் பெயரைச் சொல்ல முடியுமா? 'பேனா' என்று சொல்லுவதற்கு முன் அதன் உருவம் உங்கள் மனத்தில் தோன்றி விடுகிறது அல்லவா? இப்படி ஒரு பெயரைச் சொல்லுவதற்கும், அதன் உருவத்தை நினைத்துக் கொள்வதற்கும் இடையில் உள்ள தொடர்பு தான் ஜபத்தின் அடிப்படையாக அமைகிறது.

இன்னொரு விஷயம். அன்பு எப்படி உண்டாகிறது? நாம் அடிக்கடி பார்த்து, உடன் இருந்து பழகுவதால்தான் ஏற்படுகிறது. அன்பு மனத்தில் விளைவதற்கு நெருங்கிய தொடர்பும், அதை ஒட்டிய சிந்தனையும் மிக அவசியம். அப்படிப் பகவானிடம் நாம் அன்பு செலுத்துவதற்கு அவரைப்பற்றித் தீவிரமாகச் சிந்திப்பதும், அவருடைய திருநாமத்தை அடிக்கடி சொல்லுவதும் அவசியமாகிறது. இதற்காக மனத்தைப் பழக்குவதே ஜபம். எதை நாம் அதிகமாகச் சிந்திக்கவில்லையோ அதன் மீது நமக்குப் பற்று இருப்பதில்லை. இதற்கு மாறாக எதை நாம் எப்போதும் சிந்திக்கிறோமோ அதன் மீது அளவுகடந்த பற்று ஏற்பட்டு விடுகிறது, ஜபம் இந்த வழியில்தான் நம்மைப் பகவானிடம் பற்றுக் கொள்ள வைக்கிறது.

**பக்குவம் செய்து டின்னில் அடைக்கப்பட்ட உணவுகளைக் கொஞ்சநேரம் அடுப்பில் சூடு காட்டினால் போதும் ; உணவு தயாராகிவிடும். ஜபம் அதைப் போன்றுதான்.**

தியானம் என்பது அனுபவம் பெற்றவர்கள் மட்டுமே செய்யக்கூடிய சாதனை. நினைத்த மாத்திரத்தில் மனத்தில் ஓடும் எண்ணங்களை அணைபோட்டுத் தடுத்து நிறுத்தும் சக்தி உடையவர்கள்தாம் தியானத்தைச் சரியாகச் செய்ய முடியும். இதற்கு வழிகாட்டும் பயிற்சியே ஜபம். அதனால் அதற்கு முக்கியத்துவம் குறைவு என்று எண்ணிவிடக்கூடாது. பகவத்கீதையில் கிருஷ்ணபகவான் 'யோகங்களிடையே ஜபயோகமாக விளங்குகிறேன்!' என்று அல்லவா சொல்லுகிறார்?

எப்படி ஜபம் செய்யத் தொடங்குவது?

இந்தக் கேள்வியை நீங்கள் கேட்கலாம். அதை செய்யத் தொடங்குவதுதான் சரியான ஆரம்பம்.

மந்திரம் என்பது என்ன? அதில் இரகசியம் ஒன்றும் இல்லை. உங்கள் இஷ்டதெய்வத்தைப் பெயரிட்டு அழைக்கும் முறைதான் அது. இதை நாமே சொல்லலாமா? சொல்லலாம். ஆனால் அதை ஒரு குருநாதரிடம் உபதேசமாகப் பெறும்போது, அது வீரிய விதையாக உங்கள் மனம் என்னும் மண்ணில் விழுந்து விடுகிறது.

உங்கள் வீட்டில் தனிமையான ஓர் அறையைத் தேர்ந்தெடுங்கள். சுவரில் உங்கள் மனத்துக்கினிய சுவாமி அல்லது தேவியின் படத்தைத் தேர்ந்தெடுங்கள். உங்கள் கண்பார்வை இருக்கும் மட்டத்தில் அவருடைய பாதம் கண்ணிற்படும்படி படத்தை மாட்டுங்கள். கீழே உட்கார ஒரு பாயையோ, பலகையோ போட்டுக் கொண்டு அமருங்கள். நூற்று எட்டு மணிகள் கொண்ட ஜபமாலையைக் கையில் எடுத்துக் கொள்ளுங்கள். காலை சௌகரியமாக சப்பணம் போட்டு உட்கார்ந்தபடி ஜபத்தை ஆரம்பியுங்கள்.

முதலில் சுவாமியின் பாதம், பிறகு கால்கள், அப்புறம் இடை, அதன் பின்பு மார்பு, கடைசியாக முகம், இப்படிப் பார்வையை உயர்த்திக் கொண்டே சொல்லுங்கள். கொஞ்ச நாள் பழகியதும் உங்களால் முகத்தையே உற்றுப்பார்க்க முடியும். இது தான் ஜபம் செய்வதற்குப் பக்குவமான நிலை. பகவான் உங்கள் இதயத்தில் வலது புறம் இருப்பதாக உருவகம் செய்து கொள்ளுங்கள். இப்போது ஜபத்தை தொடங்கலாம்.

ஜபமாலையை எடுத்து கொள்ளுங்கள். மாலையை உருட்டுவதில் ஆள்காட்டி விரலை உபயோகிக்கக் கூடாது. அது பிறரைப் பார்த்துக் குற்றஞ்சாட்ட உபயோகிக்கும் விரல். 'நீ வேறு– நான் வேறு' என்று பிரித்துக் காட்டப் பயன்படும் விரல். அது ஜபத்துக்கு பயன்படாது. மோதிரவிரலையும் – கட்டை விரலையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அந்த இணைப்பில் ஜபமாலையை வைத்துக் கொள்ளுங்கள்.

உங்களுடைய இஷ்டமந்திரம் ஒன்றைத் தேர்ந்தெடுங்கள்.

### இவை வேதாந்த மந்திரங்கள்

தத் த்வமஸி – அதுவே நீயாகும்
அஹம் பிரம்மாஸ்மி – நானே பிரம்மன்
அயம் ஆத்மா பிரம்மன் – நான் என்பதே பிரம்மன்
சிவோகம் சிவோகம் – நானே சிவம் – மங்களம்
ததேவ சத்யம் தத் பிரம்மா – அது மட்டுமே சத்தியம் – அதுவே பிரம்மன்
ஆனந்தோகம் : ஆனந்தோகம் – நானே ஆனந்தம் மகிழ்ச்சியின் உருவம்
ஹம்ஸசோகம் : சோகம்ஹம்ஸா – அவன் நானே : நானே அவன். அவனில் நான் : என்னில் அவன்

### இவை பௌராணிக மந்திரங்கள்

ஓம் நமோ நாராயணாய :
ஓம் ஸ்ரீராம ஜயராமா ஜயஜயராமா :
ஓம் நமசிவாய :
ஓம் ஸ்ரீஷண்முகாயை நமஹ :
ஓம் ஸ்ரீராமச்சந்திராய நமஹ :
ஓம் ஸ்ரீலக்ஷ்மியாயாய நமஹ :
ஓம் ஸ்ரீ சரஸ்வதியாயாய நமஹ :
– மற்றும் இவை போன்றவை

இந்த மந்திரத்தில் ஒன்றை 108 தடவைகள் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள். மாலையின் பிரதான முடிச்சாக மேருமணி இருக்கும். அதில் ஆரம்பித்து உருட்டத் தொடங்க வேண்டும். நூற்று எட்டுத் தடவைகள் சொல்லி முடித்ததும் மேருவிற்கு வந்து விடுவீர்கள். இது ஒரு 'ஜபமாலை' முடிந்ததற்கு அடையாளம் – மேருமணியை உருட்டாதீர்கள். நூற்று ஏழாவது மணியை மறுபடி உருட்டி விட்டு மீண்டும் மேருமணியைத் தாண்டி ஜபம் செய்யத் தொடங்குங்கள். இது இரண்டாவது ஜபமாலை, படிப்படியாக வேளைக்கு இருபது ஜபமாலாக்கள் வீதம் இரண்டு வேளையும் செய்யப் பழகுங்கள்.

மந்திரம் என்பது என்ன? அதில் இரகசியம் ஒன்றும் இல்லை. உங்கள் இஷ்டதெய்வத்தைப் பெயரிட்டு அழைக்கும் முறைதான் அது. இதை நாமே சொல்லலாமா? சொல்லலாம். ஆனால் அதை ஒரு குருநாதரிடம் உபதேசமாகப் பெறும்போது, அது வீரிய விதையாக உங்கள் மனம் என்னும் மண்ணில் விழுந்து விடுகிறது. குருநாதர் தன்னுடைய ஆன்மிக சக்தியினால் அந்த மந்திரத்துக்கு உயிர் கொடுத்து விடுகிறார். அதேசமயம் சீடர்களின் மனத்துள் அடங்கி இருக்கும் ஆன்மிக சக்தியையும் தட்டி எழுப்பி விட்டு விடுகிறார். அதனால் குருநாதர் மூலம் உபதேசம் பெற்றுத் தொடங்குவதே சிறந்தது.

மந்திரம் தியானத்துக்கு உதவுவதைப் போல உபாசனையும் தியானத்துக்கு உதவுகிறது. காளி, துர்க்கை போன்ற தெய்வசக்திகளை இப்படி உபாசனை செய்ய மேற்கொள்ளலாம். இது 'பிரதிகா'

அல்லது 'பிரதிமை'யின் மூலம் செய்யப்படுகின்றது. 'பிரதிகா' அல்லது 'பிரதிமா' முக்கியம் அல்ல. அதில் அடங்கியுள்ள தெய்வசிந்தனைதான் முக்கியம்.

ஜபம் செய்ய ஆசனம் போட்டுக் கொள்கிறோம். அதில் சப்பணம் போட்டு அமர்ந்து கொள்கிறோம். ஜபமாலையை எடுத்து எண்ணிக்கையை முடிக்கிறோம். ஜபம் செய்வதற்கு மந்திரத்தையும் பயன்படுத்துகிறோம். ஆனால் அவ்வாறு ஜபமாலையை உருட்டுவதும் மந்திரத்தை முணுமுணுப்பதும் மட்டும் ஜபமாகி விடாது.

ஜபம் செய்யும்போது உள்ளம் உருக வேண்டும். அன்பு, பச்சாதாபம், கருணை, நம்பிக்கை, பிரேமை இப்படி எல்லாவிதமான நயமான உணர்ச்சிகளையும் மனத்தில் ஏந்தி உருகவேண்டும். மனத்தை அலைய விடக்கூடாது. தூய்மையான மந்திரத்தைச் சொல்லும் போது உள்ளமும் தூய்மையாக இருக்க வேண்டும். பகவானின் பாதாரவிந்தத்தில் அதைச் சமர்ப்பணமாக வைப்பதுபோல, நாம் மந்திரத்தைச் சொல்ல வேண்டும்.

எந்த அளவுக்கு ஜபம் செய்யலாம்? எதையும் அளவாகச் செய்வதே முறையானது. ஜபத்தையும் அளவாகவே கையாள வேண்டும். முதலில் ஒரு மாலா (108 தடவைகள்) அளவு செய்ய ஆரம்பித்தால் போதுமானது. பிறகு விடுமுறை நாட்களில் மட்டும், நேரம் இருப்பதால், கொஞ்சம் கூடுதலாகச் செய்ய ஆரம்பியுங்கள். பிறகு படிப்படியாக, நேரமும் அவகாசமும் கிடைப்பதற்கேற்ப, அதிகஅளவு மந்திரங்களைச் சொல்லப் பழகிக் கொள்ளுங்கள்.

ஜபம் செய்யும் சாதனையில் மேலும் இரண்டு தடைகள் குறுக்கிடக்கூடும். ஜபம் செய்யும் போது தூக்கம் வரக்கூடும். அப்படி உறங்கி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஜபம் செய்து முடித்துத் திரும்பியபின் பிறரிடம் எரிச்சலும் கோபமும் வரக்கூடும். இந்த நிலையும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

ஜபம் செய்பவர்கள், தேகப்பயிற்சி செய்பவர்களைப்போலக் காலம் தவறாமல், நேரஅளவு பிசகாமல் இதைக் கடைப்பிடிக்க வேண்டும். மனத்தில் ஆசாபாசங்களையோ, இச்சைகளையோ வளர்க்கக் கூடிய சூழ்நிலையைத் தவிர்க்கவேண்டும். பற்றுக்களைப் படிப்படியாகக் குறைத்துக் கொள்ள வேண்டும். எப்போதும் எதிலும் என்ன பலன் கிடைக்கிறது என்று லாப நோக்கத்துடன் பார்ப்பது மனித சுபாவம். அந்தக் கண்ணோட்டத்துடன் ஜபம் செய்யக்கூடாது.

**ஜபம் செய்பவர்கள், தேகப்பயிற்சி செய்பவர்களைப்போலக் காலம் தவறாமல், நேரஅளவு பிசகாமல் இதைக் கடைப்பிடிக்க வேண்டும்.**

ஜபம் செய்யும் போது மனத்தில் சரணாகதி உணர்வு இருக்க வேண்டும். தன்னுடைய பதவி, அதிகாரம், திறமை, செல்வாக்கு எல்லாவற்றையும் மறந்து விட்டு, இறைவனடியில் சரணாகதியாகச் சேர்ந்துவிட வேண்டும். 'எல்லாம் நீயே – என்னுடையது எல்லாவற்றையும் உன் காலடியில் சமர்ப்பித்து விடுகிறேன். எனக்கு என்று எதையும் வைத்துக் கொள்ளவில்லை. எனக்கென்று எதையும் கேட்கவில்லை!' என்கிற மனப்பான்மையுடன் ஈடுபட வேண்டும்.

எல்லா மந்திரங்களும் இதையேதான் குறிப்பிடுகின்றன. 'ஓம் நமோ நாராயணாய' என்று சொல்லும்போதே, 'நாராயணனுக்கு எனது நமஸ்காரங்கள்' என்றுதான் நினைக்கிறோம். அது கீழே விழுந்து வணங்கும் காரியம் மட்டும் அல்ல . . . 'என்னுடையது எல்லாவற்றையும் நாராயணனின் காலடியில் வைத்துச் சரண் அடைகிறேன்' என்று குறிப்பிடுவதாகவே பொருள்.

'நான்' என்று நினைத்து மனத்தில் வளர்த்துக் கொள்ளும் அகந்தையைத் துறப்பதே ஞானமார்க்கத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும். ஜபயோகம் அப்படித் துறக்க வழிகாட்டுகிறது. உண்மையான தெய்வீக சக்திக்கு, மாயையான தனது சொந்த விருப்புவெறுப்புகளை ஒதுக்கி, மனப்பூர்வமாகப் பணியும் செய்கையையே அது எடுத்துக் காட்டுகிறது.

'ஓம்' என்பது பிரணவ சொரூபம். அதைச் சொல்லும்போது, அந்தப் பேருண்மையை நாம் அடைகிறோம். 'நமஹ' என்று சொல்லும்போது முழுமையாகச் சரண் அடைந்து நமஸ்கரிக்கிறோம். இஷ்டதெய்வத்தின் பெயரைக் குறிப்பிடும்போது, இதற்கு ஓர் உருவகமான நிலையையும் உண்டாக்கிக் கொள்ளுகிறோம். இந்த மூன்றுமே, இந்த ஒரே மந்திரத்தில் அடங்கிப்போய் விடுகிறது.

ஆகையால் ஜபயோகம் பக்தி மார்க்கத்துக்கும் ஞானமார்க்கத்துக்குத் வழிகாட்டுவது மட்டும் அல்ல; அன்றாட வாழ்க்கையில் உழலும் சாதாரண மனிதனையே, தூய்மைப்படுத்தி, செம்மைப் படுத்தி, உயர்ந்தவனாக்கி நன்கு இயங்கவைக்கும் சாதனைக்கும் வழிகாட்டியாக அமைகிறது.

# சிவநெறி கண்ட சித்தர்கள்

சித்தர் என்பவர் யார்...?

''சமயங்களுக்குட்பட்ட எந்தவிதமான சடங்குகளுக்கும், சம்பிரதாயங்களுக்கும் கட்டுபடாமலும்; அனைத்து உயிர்களிலும் ஒருவித இணைப்பையும், இறைமையையும் கண்டவர்களாகவும், தவயோகிகளாகவும், சாதிசமய பேதங்களைக் கடந்தவர்களாகவும், மக்களுக்குப் பயன்படும் வகையில் மருத்துவம், சோதிடம், வானவியல் முதலிய துறைகளில் ஈடுபட்டுப் பல அரிய கருத்துக்களை உலகிற்குத் தந்தவர்கள்'' என்று சித்தர் நெறியை எடுத்துரைக்கின்றார்கள் சான்றோர்.

பதினெண் சித்தர்கள் என்னும் வழக்கு, மரபு நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஆனால் வான்வெளியில் பல்லாயிரக்கணக்கான விண்மீன்கள் இருப்பினும், இருபத்தேழு நட்சத்திரங்களை மட்டும் பெயரிட்டழைப்பது போன்றே, நூற்றுக்கணக்கான சித்தர்களில் பதினெண்மரையே தமிழ் கூறு நல்லுலகம் கண்போற் போற்றுகின்றது.

''சித்து'' என்னும் சொல்லிற்கு அருள் விளையாட்டு என்று பொருள். சித்தம் என்பதின்று தோன்றியது. அசுத்தமாயையில் இருந்து தோன்றுவது சித்தம். இச் சித்தத்திலிருந்து ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள், தன் மாத்திரை முதலிய தத்துவங்கள் தோன்றவும், ஒடுங்கவும் செய்கின்றன. இவைகளை வென்ற நிலையே சித்து நிலை எனப்படும். இந்நிலையில் பெறும் பயனையே ''சித்து'' என்று கூறலாம்.

''சித்தர் சிவத்தைக் கண்டவர்'' என்றும்;

''பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்(டு)
இதமுற்ற பாச இருளைத் துறந்து
மதமற் றெனதியான் மாற்றி விட்டாங்கே
திதமுற் றவர்கள் சிவசித்தர் தாமே''

– என்று திருமூலர், சித்தர் நெறியைக் கூறுகின்றார்.

பாசத்தினையும், ஆணவத்தினையும், ஆணவத்தால் விளையும் மதமற்று, யான், எனது என்னும் செருக்கு இவற்றினை அருள் நினைவாலே மாற்றி விட்டவர்கள். சிவத்தினை உணர்ந்த சித்தர்கள் ஆவார்கள் என்பதே இதன் பொருளாம்.

*''எழும்பாமற் வாசனையைக் கொன்றோன் ஞானி
ஏகாமற் வாசனையை அடித்தோன் சித்தன்''*

– என்கிறார் சட்டை முனி என்னும் சித்தர். கர்ம வினையானது, ஆன்மாவைப் பற்றாத வண்ணம் தடுப்பவன் ஞானி என்றும், அந்த வினையானது தம்மிடம் தோன்றா வண்ணம் செய்பவன் சித்தன் என்பதே இதன் உட் பொருளாகும்.

இச் சித்தர்கள் எவ்வாறு தோன்றினர் என்பதற்கு தக்க ஆதாரங்கள் கிடைக்கவில்லை. திருமந்திரத்தில் வரும் பாடலொன்றின் மூலம், நந்தியின் அருள் பெற்ற நால்வர்களான சனகர், சனந்தர், சனாதனர், சனத்குமாரர் ஆகியோர் எல்லா உலகங்களுக்கும் பொருந்திய ஆசிரியர்களால் அறம் முதலாகிய நால்வகைப் பட்டு பற்பல வகையாக விரிந்த உறுதிப் பொருள் அனைத்தையும் உணர்ந்து, தாம் பெற்ற பேற்றினையே இப் பூலோகம் பெறுவதாக என்னும் பேரருள் உடையவராய். அதனாலே சிவகணங்களுக்குள்ளேநாதர்களாக விளங்கினார் என்கிறார் திருமூலர். இவர்களையே ''சித்தர்'' மரபின் மூலமாகக் கொள்ளலாம்.

*''நால்வரும் நாலு திசைக்கொன்றும் நாதர்கள்
நால்வரும் நானா விதப்பொருள் கைக்கொண்டு
நால்வரும் 'நான்பெற்ற தெல்லாம் பெறு'' கென
நால்வரும் தேவராய் நாதர் ஆனார்களே !''*

இந் நால்வர்களைத் தொடர்ந்து சிவயோக மாமுனியும், மன்றுதொழுத (சிதம்பரத்தினை இடமாகக் கொண்டு ஆடும் அம்பலவாணனை வணங்கிய) பதஞ்சலி, வியாக்கிரமர் ஆகியோருடன் திருமூலனான சுந்தரநாதனும்

சித்தர் வழிதொடர்வராயினர். திருமூலரைத் தொடர்ந்தவர்களாய், அவரின் மாணவர்களாய் மாலங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், காலாக்னி, கஞ்சமலையான் ஆகியோர்களும் தோன்றினர். இதுவும் திருமந்திரப் பாடலின் மூலமே அறியப்படுகின்றது.

*"நந்தி அருள்பெற்ற நாதரை நாடின்*
*நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி மன்று*
*தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்*
*என்றிருவர் என்னோ டெண்மருமாமே!"*

– (திருமந்திரம் 6–ம் பாடல்)என்ற தாலும்;

*"மந்திரம் பெற்ற வழி முறை மாலங்கன்*
*இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன்,*
*கந்துருக, காலாங்கி, கஞ்ச மலையனோ*
*டிந்த எழுவரும் என்வழி யாமே !"*

– எனவரும் ஏழாம் பாடலாலும் தெரிய வருகின்றது.

பதினென் சித்தர்களும் இந்தப் புண்ணியம் மிகுந்த பாரத பூமியில் இன்றும் நித்தியஜீவர்களாக இருந்து இந்த மண்ணினைக் காத்து வருகின்றனர். அவர்கள் குடிகொண்டுள்ள இடங்கள் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வணங்கி வரும் திருத்தலங்களாக– ஞானபூமிகளாக அமைந்துள்ளன. அவைகள் :

1. திருமூலர் – சிதம்பரம்
2. ராமதேவர் – அழகர்மலை
3. கும்பமுனி – திருவனந்தபுரம்
4. இடைக்காடர் – திருவண்ணாமலை
5. தன்வந்திரி – வைத்தீஸ்வரன் கோயில்
6. வான்மீகர் – எட்டுக்குடி
7. பாம்பாட்டி சித்தர் – திருமுது குன்றம் எனும் விருத்தாசலம்
8. குதம்பைச் சித்தர் – மயிலாடுதுறை
9. கமலமுனி – திருவாரூர்
10. போகர் – பழனி
11. மச்சமுனி – திருப்பரக்குன்றம்
12. கொங்கணவர் – திருப்பதி
13. பதஞ்சலி – இராமேஸ்வரம்
14. நந்தி – காசி
15. காங்கேயர் – கரூர்
16. கோரக்கர் – பொய்யூர்
17. சட்டைமுனி – திருவரங்கம்
18. சுந்தரானந்தர் – மதுரை

ராமலிங்க வள்ளலார், ரமணர் போன்ற சமீபகாலத்திய சித்தர் பெருமக்கள் வரிசையில் நம்மிடையே வாழ்ந்து ஜீவசமாதியான பாம்பன் சுவாமிகளும் ஒருவர். திருவான்மியூரில் உள்ள அவருடைய சமாதியில், 'ஐநூறு வருடம் இன்னும் அவர் வாழ்ந்து கொண்டிருப்பதாக' தன் வாக்கினாலேயே கூறியுள்ளார்.

சமுதாயத்திலுள்ள மக்களுக்கு மொழியறிவினை உருவாக்கவும், வேதங்களைப் படைக்கவும், அறிவியற்துறை – மருத்துவத்துறை – மற்றும் வானநூல் அறிவு தரவும் இறைவனால் உண்டாக்கப்பட்டவர்களே சித்தர்களாவார். இது திருமந்திரத்தில் வரும் கீழ்கண்ட பாடலும்.

*"பிள்ளைநின் றென்னே பிறவி பெறுவது*
*முன்னை நன்றாகமுயல்தவம் செய்திலர்*
*என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறே."*

(திருமந்திரம் – 10)

*'வடமொழியை பாணினிக் குவகுத்தருளி*
*அதற்கிணையாம் தென் மொழியை உலகெலாம்*
*தொழுதேற்றும் குறுமுனிக்கு வகுத்தருளினார்*
*கொல்லேற்றுப் பாகர்.."*


– என்றுவரும் காஞ்சிப் புராண பாடலினாலும் உணர முடிகின்றது.

## தர்மமே தோழன்!

மனிதன் தன் உடலை விட்டதும் அவனுடைய பணம் அவனுடைய இரும்புப் பெட்டியில் தங்கி விடுகிறது. அவனுடைய பசுக்கள் கொட்டகைகளிலே தங்கி விடுகின்றன. அவனுடைய அருமை மனைவியோ வீதிவரை வருகிறாள். உற்றார் உறவினரோ சுடுகாடு வரை வருகிறார்கள். அவன் போஷித்து வளர்த்த உடலோ அக்கினியோடு ஐக்கியமாகி விடுகிறது. ஆனால் அவனுடனேயே வரப்போகும் தோழன் அவன் செய்த தர்மம் ஒன்றுதான்.

'மில்க்வைற்'
வெளியீட்டிலிருந்து.

# குருவருள் இன்றேல்!



பக்தியைவிட சிறந்த பூஜையில்லை. மோட்சத்தைவிட, சிறந்த பலன் இல்லை. ஞானத்தைவிட அதிகமான சுகம் இல்லை. குருவை விட சிறந்த தத்துவமில்லை.

குரு என்பவர் அஞ்ஞானம் என்கிற இருள் நீக்குகிற மெய்ஞ்ஞான சூரியன். குருவே மனிதத் தோலால் போர்த்தப்பட்ட ஈஸ்வரன்தான். நல்ல சீடர்களை ரட்சிக்கும் பொருட்டு, ஈஸ்வரன் (குருவின் சரீரத்தில்) மறைந்து வசிக்கிறார்.

குருவுக்கும், தெய்வத்திற்கும் பேதமில்லை. 'ஆத்மாவே குரு', இதைச் சொல்லுவதும் குருநாதர்தான்.

எந்த ஒரு தெய்வ உபாசனைக்கும் குருவானவர் அமைதல் வேண்டும். 'குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை', ஆசானருளன்றி அமையாது ஒருநாளும்', 'தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது' இந்த வாக்கியங்கள் எல்லாம் குருவை பற்றிப் போற்றுகிறது.

'குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை', ஆசானருளன்றி அமையாது ஒருநாளும்', 'தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது'

இறைவனுடைய அருள் என்ற அமிர்தத்தைப் பருக, குரு என்ற பாத்திரம் தேவை. ஈஸ்வர பிரசாதம் ஏற்பட வேண்டுமானால் முதலில் குருவின் அனுக்கிரகம் வேண்டும். அந்த அனுக்கிரகத்தை அடைய நாம் அவரைத்தேடி சரணாகதி செய்ய வேண்டும்.

ஈஸ்வரன் ஏற்கனவே நான் மறைகள் மூலமாக இவை தர்ம்ம், அதர்மம் இதுவென்று வெளியிட்டிருப்பதால், அந்த சாஸ்திரத்தை நாமே எடுத்து படித்தால் போதாதா? இதற்காக குரு எதற்கு?' என்று கேள்வி கேட்கலாம். எல்லா சாஸ்திரத்தையும் படித்து அதில் சொல்லியிருக்கும் விஷயங்களை நாமே தெரிந்து கொள்வதென்பது சாத்தியமில்லாதது. சாஸ்திரம் முழுவதையும் கற்றுக்கொண்டு, அப்புறம் தர்மானுஷ்டானம் செய்வதென்றால் அதுவும் சாத்தியமில்லாத ஒன்று. ஏனென்றால் சாஸ்திர அப்பியாசம் செய்யவே நம் ஆயுள் காலம் எவ்வளவு இருந்தாலும் போதாது. தவிரவும் நம்மிடம் தவறுகள் நிறைய இருப்பதுடன், அவைகளை நாமே தெரிந்து கொள்வதென்பதும், நாமே தவறுகளைக் களைவதென்பதும் சாத்தியமில்லை. ஆகையால் நம்முடைய பக்குவத்தை அறிந்து 'இவன் இந்தப் படியிலிருக்கிறான்', இந்தக் காரியம் செய்தால் மேல் படிக்குப் போகலாம்' என்று எடுத்துச் சொல்ல குரு அவசியம்.

தானங்களில் எல்லாம் சிறந்தது அன்னதானம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால் தானம் வாங்குகிறவனுக்குத் திருப்தி ஏற்படுத்தும் தானம் அது ஒன்று தான். எவ்வளவு பணம் கொடுத்தாலும், வஸ்திரதானம் செய்தாலும், பூதானம் கொடுத்தாலும், வாங்குகிறவன்

போதுமென்று சொல்வது இல்லை. ஆனால் அன்னதானத்தில் எவ்வளவு சாப்பிட முடியுமோ அவ்வளவு சாப்பிட்டு விட்டால் போதும் என்று சொல்லிவிடுவான். அதற்கு மேல் ஒரு கவளம் கொடுத்தாலும் வேண்டாமென்றே சொல்லுவான். இவ்விதம் போதுமென்று சொல்கிற வரையில் திருப்தி ஏற்படுத்தக்கூடிய தானம் அன்னதானம் ஒன்றுதான். ஆனால் இந்த தானத்திலும் ஒருவேளை சாப்பிட்டபின் அப்பொழுது போதும் என்று சொன்னாலும் கூட, அந்த திருப்தி அப்பொழுது மாத்திரமே தவிர, அடுத்த வேளையில் பசி வரும்போது மறுபடியும் அன்னத்தில் பிரியம் ஏற்பட்டுத்தான் தீரும்.

எக்காலத்திலும் எந்த விஷயத்திற்கும் திருப்தியை ஏற்படுத்தக்கூடிய தானம் ஞான தானமாகும். அவ்விதமான பரம பவித்ரமான ஞான தானத்தைச் செய்கிற சற்குருவிற்கு இணையாக எதைச் சொல்வது என்று பகவான் ஆதிசங்கரர் கூறுகிறார்.

குருவாகிய ஆசார்யனுக்கு சமானமான ஒன்று இருந்தால் அல்லவா இணையாகச் சொல்ல முடியும். ஸ்பர்சமணி என்ற ஒரு மணி உண்டு. இது இரும்புத் துண்டுகளை எல்லாம் தொட்டால் தங்கமாக மாற்றும் சுபாவம் உடையது. இதற்கு இணையாக ஒன்றைச் செல்வோமென்றால் அதுவும் இரும்பைத் தங்கமாக்குமே ஒழிய, இரும்பை ஸ்பர்ச மணியாகச் செய்ய முடியாது. இரும்பைத் தங்கமாக்கினாலும், அந்த இரும்புக்கு மற்ற இரும்புகளைத் தானே தங்கமாக்கும் தன்மையைக் கொடுத்து விடாது. ஆனால் குருவானவர் எப்படி என்றால் தன்னைச் சரணடைந்த தன் சிஷ்யனை தனக்கு எவ்விதத்திலும் சமானமாக்கி விடுகிறார். அந்த சிஷ்யனுக்கு ஏற்படும் சிஷ்யர்களையும் அதே பதவிக்குக்கொண்டுவரக்கூடிய வல்லமையுள்ளவனாக அவனே ஆகிவிடுகிறான்.

தாய் தந்தையர் உணவுதான் தரமுடியும். ஆனால் குருநாதர் தருவது உணர்வு. குருநாதர் அறிவு நலத்தைத் தருபவர்.

சிறந்த குருவின் மூலம் பெற்ற மந்திரங்களை முறையாக ரக்ஷித்து இகத்தில் சுகத்தையும், பரத்தில் மோட்சத்தையும் அடைபவன் புத்திசாலி.

எரிகின்ற விளக்கினைத் தூண்டுவது போன்றது உபாசனை. பாவம் என்கிற காட்டை அழிப்பது உபாசனை. இந்த உபாசனையை சொல்லித் தருபவர் குரு. இந்த உபாசனா மார்க்கத்தைத் தெளிவுபடுத்தி இதற்கு உறுதுணையாய் இருந்து, அருள் அமுதத்தை பெறச் செய்பவர் குருதேவர்.

ஸ்ரீகுருவிற்கு சீடன் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அளித்து அவருடைய அருள் மொழியை சிரமேற் கொண்டு நடந்தால் மோட்சலட்சுமி தோன்றுவாள். அறிவு வடிவான ஆசார்யனைப் பெற்றபின் வேறொரு குருவைத் தேடலாகாது. குரு பக்தியே சதாசாரம். அவர் திருவடிகளை நினைப்பதே முக்தி.

உமி மூடியுள்ளவரை நெல் எனப்படும். உமியை எடுத்த பின் அது அரிசியாகிறது. அது போல் பாசத்தால் கட்டப்பட்டுள்ள வரையில் ஜீவன் எனப்படுவான். பாசம் அகன்ற பின் மகேஸ்வரனாகிறான்.

கோடிக்கணக்கான மகா தானங்களிலும், கோடிக்கணக்கான மகா விரதங்களிலும், கோடிக்கணக்கான மகா யாகங்களிலும் மிகச் சிறந்தது ஸ்ரீ குருவின் பாதுகா நினைப்பே ஆகும். ஒருவன் ஜாதியினாலோ, வித்தையினாலோ, செல்வத்தினாலோ சிறந்தவனாயினும், அவன் வெகுதூரத்தில் இருக்கும் குருவைக் கண்டவுடன் வெட்டிய மரம் போல் வீழ்ந்து நமஸ்கரிக்க வேண்டும்.

ஸ்பர்ச தீட்சை: குரு சிஷ்யனது உடலைத் தொட்டு உபதேசிப்பது.

த்ருக் தீட்சை: தெளிந்த புத்தியுள்ள குரு தேவியை பிரார்த்தித்து சிஷ்யனைப் பார்த்து உபதேசம் செய்வது.

சாம்பவி தீட்சை: குருவை தரிசித்த மாத்திரத்தில் அவருடன் பேசுவதால் உண்டாகும் ஞானம் சாம்பவீ தீட்சையாகும்.

மானசீக தீட்சை: பணிவிடையால் சந்தோஷமடைந்து குரு மௌனமாய் சிஷ்யனுக்கு அனுக்கிரகம் செய்வது.

தீட்சை விதி: மந்திர உபதேசம் பெறக்கூடிய சிஷ்யன், குரு சந்நிதியில் பக்தி சிரத்தையுடன் அமர்ந்து இருக்கும்படியாய் செய்து குருவானவர் பூரண கும்பத்தில் இறைவனை ஆவாகனம் செய்து, பூஜித்து, அர்ச்சித்து, ஞானஸ்நானம் என்று வழங்கப்படும் பூர்ணாபிஷேகத்தை சிஷ்யனது சிரசில் வர்ஷிப்பார். பின் புது வஸ்திரம் தரித்து, நெற்றியில், அர்ச்சித்த விபூதி அல்லது குங்குமத்தை அணிந்து, பின் சிஷ்யனது கண்களை துணியால் மூடி இறைவன் முன்நிறுத்தி, கற்பூர தீபாராதனை காட்டும் போது, சிஷ்யனது கண்கள் திறக்கப்பட்டு, குரு பாதுகைகளை (பாத குறடுகள்) சிஷ்யனது தலையில் வைத்து குரு மந்திரங்களைச் சொல்ல, அதை சிஷ்யன் திருப்பிச் சொல்ல வேண்டும்.

சிஷ்யனது சிரசில் ஸ்ரீ குரு பாதுகைகள் வைக்கப்பட்டபின், சிஷ்யன் குருவின் முன் அமர்ந்து, விநயத்துடன் குருவின் திருவாயிலிருந்து வந்த மந்திரத்தை – ஏற்றுக்கொண்ட மந்திரத்தை தினமும் விதிப்படி பூஜிப்பது, ஹோமம் செய்வது. தர்ப்பணம் செய்வது, அந்தர்ப்பணம் செய்வது உபாசனையாகும். உபாசனையில் சித்தி என்பது வாழ்க்கையில் மறைகின்ற இன்னல்களே. நல்ல எண்ணமும், நல்ல புத்தியுமே இந்த மந்திர சித்தியின் அடையாளமாகும். பிரகாசமான தேஜஸை உடைய முகமும் தீர்க்கமான மேதாவிலாசமும், உபாசனையால் கிடைக்கின்றன.

அக்ஷராப்பியாசத்திலிருந்து உபாசனை, மேலான ஞானம் வரை குருவின் சாக்ஷாத்காரம் என்ற பேரருள் அவசியமாகிறது. இதைத்தான் திருமூலர்,

'தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.'

என்று விளக்குகிறார்.

## பக்தனின் குணங்கள் !

*எவன் சித்தம் முற்றிலும் அமைதியாக இருக்கிறதோ;*

*எவன் எல்லோரிடமும், மிருதுவாகவும், இனிமையாகவும் நடக்கிறானோ;*

*எவன் இந்திரியங்களை வென்று விட்டானோ;*

*மனம், மொழி, மெய்களினால் எவரிடத்தும் பகை இல்லாது எவன் இருக்கின்றானோ;*

*எவன் மனம் கருணையினால் உருகி ஓடுகிறதோ;*

*எவன் திருட்டு, வன்முறைச் செயல்கள் ஆகியவற்றில் இருந்து எப்போதும் விலகி இருக்கிறானோ;*

*நற்குணங்களையே விரும்புகிறவனாய், பிறர் நன்மைக்கு உதவும் காரியங்களில் எவன் ஈடுபடுகிறானோ;*

*எவனது வாழ்க்கை நல்ல காரியங்களையே செய்வதனால் தூய்மையுற்றிருக்கிறதோ;*

*எவன் பிறர் மகிழ்வதைக் கண்டு தான் மகிழ்கிறானோ;*

*எல்லா உயிர்களிடத்தும் கடவுள் இருப்பதை உணர்வதனால் எவன் எவரிடமும் பொறாமையோ, பகைமையோ கொள்வதில்லையோ;*

*ஏழை எளியவர்க்கு இரங்குவதே எவனுடைய இயல்பாகி விட்டதோ;*

*எவன் பிறருக்கு உதவுவதிலேயே கருத்தாய் இருக்கிறானோ;*

*எவன் பிறரிடமுள்ள குணங்களைக் கண்டு மகிழ்ந்து, பிறர் குறைகளைக் கருதாமல் இருக்க விரும்புகிறானோ;*

*எப்பொழுதும் கடவுளிடமே தன் உள்ளத்தைச் செலுத்தி எவன் இனியமொழி பேசுகிறானோ;*

**அவன்தான் பக்தன் !**

*-ஸ்கந்த புராணம்-*



# கடவுளை உணர்வது!

சுவாமி, தயானந்த சரஸ்வதி

நீங்கள் அருமையானதொரு கனவு காண்கிறீர்கள். அதில் விதம் விதமான காட்சிகள் வருகின்றன. பல்வேறு மனிதர்களும் வருகிறார்கள். ஆனால் ஓர் அதிசயம் பாருங்கள் – அந்தக் காட்சிகளோ, மனிதர்களோ, நிகழ்ச்சிகளோ, நீங்கள் ஏற்கனவே பார்த்தவை அல்லது அனுபவித்தவை தான்! அதாவது, இந்தக் கனவு நீங்களே உருவாக்குவதுதான் – உங்களுக்குத் தெரியாதது எதுவும் இதில் இடம்பெற முடியாது.

அதில் காணும் பொருள் அல்லது மனிதர் உங்கள் அறிவிலிருந்து உருவானவர்தான். அதில் ஒரு கொம்பு முளைத்த மனிதரைக்கூட நீங்கள் பார்க்கக் கூடும் ஆனால், நீங்கள் ஒரு மனிதரையும், கொம்பு உள்ள மிருகத்தையும் பார்த்திருக்கிறீர்கள். அந்த இரண்டு அறிவும் சேர்ந்துதான் இந்த வினோதமான காட்சி!

ஆனால் கனவு என்பது விழித்திருக்கும் நிலையிலிருந்து நேராகப் போகக் கூடிய ஒன்று அல்ல. அதற்கு நீங்கள் முதலில் தூங்க வேண்டும். உங்களுடைய அப்போதைய சூழ்நிலையை மறக்க வேண்டும். அரை குறையான ஞாபக நினைவுகளுடன் தூக்கத்தில், கனவில் விழித்துக் கொள்கிறீர்கள். அப்போது உங்களிடம் இரண்டு சக்திகள் செயல்படுகின்றன. ஒன்று – உண்மையான நிலையை மறப்பது; மற்றொன்று – ஒரு புதிய நிலையை உருவாக்குவது.

ஆக, உங்கள் கனவு, அதில் நேரும் செயல்கள், நீங்கள் பார்ப்பது ஆகிய யாவற்றுக்கும் நீங்களே கர்த்தர்; உருவாக்குபவர்; அப்படி உருவாகும் ஒன்று உங்கள் கட்டுப்பாட்டுக்குள் இல்லை யென்றாலும் கூட!

மேஜைமீது ஒரு கடிகாரம் இருக்கிறது. நீங்கள் என்னிடம் "சுவாமிஜி! இந்தக் கடிகாரம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது? என்று கேட்கிறீர்கள் நான், "இது சுவிட்சர்லாந்தில் ஆல்ப்ஸ் மலையின் புல்வெளியில் கிடைத்தது. இதைப் போல நிறைய கடிகாரங்கள் அங்கே அருவியில் மிதந்து வருகின்றன!" என்று சொன்னால் ஏற்றுக் கொள்வீர்களா? "பாவம்! சுவாமி நேற்று வரையில் நன்றாக இருந்தார் இன்று என்னவோ புத்தி ஒரு மாதிரியாக ஆகிவிட்டது!" என்றல்லவா சொல்வீர்கள்?

> "சுவாமிஜி! இந்தக் கடிகாரம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது? என்று கேட்கிறீர்கள் நான், "இது சுவிட்சர்லாந்தில் ஆல்ப்ஸ் மலையின் புல்வெளியில் கிடைத்தது. இதைப் போல நிறைய கடிகாரங்கள் அங்கே அருவியில் மிதந்து வருகின்றன!" என்று சொன்னால் ஏற்றுக் கொள்வீர்களா?

ஏன் நீங்கள் கடிகாரங்கள் ஆல்ப் மலையின் அருவியில் மிதந்து வருவதாகச் சொன்னால் ஒப்புக் கொள்ளமறுக்கிறீர்கள்? இதில் பல பாகங்கள் இருக்கின்றன. அவை கோர்வையான முறையில் இணைக்கப்பட்டு, ஒன்றோடொன்று சேர்ந்து இயங்கும் படியாக, உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதனால் தான் கடிகாரம் ஓடுகிறது. இப்படிப்பட்டதோர் அமைப்புதானே வந்துவிட முடியாது. இதை உருவாக்கிய ஒருவர் இருக்க வேண்டும். அதனால்தான் நீங்கள் நான் சொல்வதை ஒப்புக் கொள்ளவில்லை.

அதேபோல இந்த உலகத்தை ஒருமுறை கூர்ந்து கவனியுங்கள். இதில் எத்தனையோ ஜீவராசிகள் இருக்கின்றன. மண்,மலை,ஆறு

போன்ற பொருட்களும் இருக்கின்றன. ஆகாயமும், காற்றும், அக்னியும் இருக்கின்றன. இவை– ஒவ்வொன்றுக்கும் உலகத்தில் ஒவ்வோர் இடமும், பங்கும், பணியும் இருக்கின்றன. மனிதன் காற்றில் பிராண வாயுவை இழுத்து கரியமில வாயுவை வெளியே விடுகிறான். தாவரங்கள் கரியமில வாயுவை இழுத்துப் பிராணவாயுவை வெளிவிடுகின்றன. ஆக, மனித உயிர்களும் தாவரங்களும் ஒன்றுக்கொன்று ஈடுகொடுத்துக் காற்றில் உள்ள பிராண வாயுவையும் கரியமில வாயுவையும் சரிக்கட்டுகின்றன. அதே போல நீர், நெருப்பு, காற்று போன்ற பலவும் உயிரினங்களுக்கும் தாவரங்களுக்கும் ஈடுகொடுக்கின்றன.

அதாவது, உலகத்தின் அமைப்பு, அதில் உள்ளவை ஒன்றோடொன்று இணைந்து சேர்ந்து கோர்வையான முறையில் இயங்கும்படி உருவாக்கப் பட்டிருக்கிறது; அதாவது, இப்படி உருவாக்கப்பட்டு செயல்படும் ஓர் அமைப்பான கடிகாரத்துக்கு உருவாக்கிய ஒருவர் இருக்க வேண்டும் என்று நீங்கள் சொல்வதைப் போல, இந்த உலகத்தை உருவாக்கிய ஒருவரும் இருந்தாக வேண்டும். இந்த அடிப்படை உண்மையை எல்லோரும் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

> 'உங்களுக்குப் பாட்டனாருக்குப் பாட்டனார் இருந்தாரா?'' என்று நான் கேட்கிறேன். "இருந்தாரே! நிச்சயமாக இருந்தார்!" என்று நீங்கள் அடித்துச் சொல்கிறீர்கள். "எப்படிச் சொல்கிறீர்கள், நீங்கள் அவரைப் பார்த்ததுண்டா?'' என்று நான் கேட்கிறேன். "இல்லை! ஆனாலும் அப்படி ஒருவர் இருந்திருக்க வேண்டும். அதனால் தொடர்ந்து அந்த வழியில் நான் வந்திருக்கிறேன்!" என்று நீங்கள் கூறுகிறீர்கள்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மனிதனும் இருக்கிறான். அவனுடைய உடலில் ஆச்சரியப் படத்தக்க வகையில் உடற்பகுதிகளும் இலங்குகின்றன. அதன் ஒவ்வொரு சிறுபகுதியையும் கவனிக்க இன்று மருத்துவ ஸ்பெஷலிஸ்டுகள் தேவைப்படுகிறார்கள். அவ்வளவு சிக்கலான இந்த அமைப்பு முழுவதும் உங்கள் உடலில் ஒன்றாக இருந்து இணைந்து செயல்படுகிறது. ஈரல் ஓர் இரசாயனத் தொழிற்சாலை – இதயம் ஓர் அதிசயமான பம்ப்–கண் ஓர் இணையில்லாத கலர் காமிரா–இப்படி உங்களைப் பிரமிக்க வைக்கிறது.

இவை எல்லாவற்றையும் கோர்வையாக அமைத்து ஒன்றோடொன்று இணங்கிச் செயல்பட வைக்க அதை உருவாக்கிய ஒருவர் இருக்க வேண்டும் என்று நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா? அதுமட்டுமல்ல; அதில் அறிவு, உணர்ச்சிகள், சிந்தனை, ஞாபகசக்தி போன்றவை கூட அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாடலும் அதற்கு முந்தைய தலைமுறை மாடலைவிட மேலும் சிறப்பாக அமைந்து வருகின்றன. இப்படிப்பட்ட மனித உயிருக்கு ஒரு கர்த்தா–உருவாக்கியவர் இருக்க வேண்டும் என்று ஒப்புக் கொள்கிறீர்களா?

இப்படி உருவாக்கிய ஒருவர் கடவுள்தான் என்று கடவுளை நம்புகிறவர் சொல்வார். அப்படி ஒருவர் இல்லவே இல்லை என்று நம்பாதவர் சொல்வார். ஆனால் இருவருமே கடவுளைப் பற்றி நினைப்பவர்கள் தாம். நினைக்காமல் இருவருமே கடவுளைப் பற்றிப் பேச முடியாது! அதனால் நம்புவதா, வேண்டாமா என்பது பற்றித்தான் இருவருக்கும் சர்ச்சை வருகிறது.

கடவுளை நம்பாதவர் உங்களைக் கேட்கும் ஒரு முக்கியமான கேள்வி இது – "கடவுள் இருப்பதாகச் சொல்கிறீர்களே? நீங்கள் அவரைப் பார்த்ததுண்டா?'', பார்க்க முடியாததால் அவர் நம்பவில்லை. ஆனால் நம்புவது என்பது என்ன? தெரிந்து கொள்வதற்குமுன் ஒரு முடிவுக்கு வருவதுதான். உங்கள் நண்பர், ஒருவரை நல்லவர் என்று சொல்கிறார். அவரை உங்களுக்குத் தெரியாது. ஆனாலும் உங்கள் நண்பர் சொன்னதால் நீங்கள் நம்புகிறீர்கள். அதாவது நம்பிக்கை என்பது நீங்களாகத் தெரிந்து கொள்ளாமல் பிறர் சொல்ல நீங்கள் ஒப்புக்கொள்வதுதான் அப்புறம் நீங்கள் அந்த மனிதருடன் பழகுகிறீர்கள். அவர் உங்களுக்கு உதவ மறுக்கிறார். அதனால் அவர் நல்லவர் அல்ல என்ற முடிவுக்கு நீங்கள் வந்து விடுகிறீர்கள். அதாவது நீங்கள் முதலில் நம்பியது, அப்புறம் அனுபவத்தில் திருத்திக் கொள்ளப்படுகிறது! இப்படி முதலில் ஒப்புக்கொண்டு அப்புறம் மாற்றித் திருத்திக் கொள்ளக்கூடிய ஓர் அறிவுக்கு உரியவரா கடவுள்? அல்லவே அல்ல! ஆகையால் கடவுள் நம்பிக்கை என்று சொல்லுவதே தவறு!

பின் எப்படிச் சொல்ல வேண்டும்? "கடவுள் இருப்பதை ஒப்புக்கொள்கிறீர்களா? அப்படியானால் அதற்கு என்ன அடிப்படை?'' என்று கேட்கலாம். அதனால் "கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா? என்றும் கேட்கிறார்.

“உங்களுக்குப் பாட்டனாருக்குப் பாட்டனார் இருந்தாரா?” என்று நான் கேட்கிறேன். “இருந்தாரே! நிச்சயமாக இருந்தார்!” என்று நீங்கள் அடித்துச் சொல்கிறீர்கள். “எப்படிச் சொல்கிறீர்கள், நீங்கள் அவரைப் பார்த்ததுண்டா?” என்று நான் கேட்கிறேன். “இல்லை! ஆனாலும் அப்படி ஒருவர் இருந்திருக்க வேண்டும். அதனால் தொடர்ந்து அந்த வழியில் நான் வந்திருக்கிறேன்!” என்று நீங்கள் கூறுகிறீர்கள். அதாவது இப்போது நீங்கள் இருப்பதற்கு ஆதாரமாகப் பாட்டனாருக்குப் பாட்டனாராக ஒருவர் இருந்திருக்க வேண்டும். அவரை நீங்கள் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. ஆயினும் அவர் இருந்தது உண்மை.

அதே போல மனித உயிர்களையும்; இயற்கையையும், அதன் செயல்பாடுகளையும், இயக்கத்தையும் பார்க்கும் போது, இவை ஏற்பட்டதற்கு ஆதாரமாக ஏதோ ஒரு சக்தி இருந்திருக்க வேண்டும் என்பதும் உண்மை. அந்தச் சக்தி நம்மைவிட மேலானதாக இருந்திருக்க வேண்டும் என்பதும் உண்மை. கனவை உருவாக்கும் மனிதன், கனவின் படைப்புகளைவிட மேன்மையானவற்றைப் படைக்கக் கூடிய சக்தி கொண்டவனாக இருக்கிறான். ஆயினும் அவனிடமிருந்து தான் கனவுகள் தோற்றம் பெறுகின்றன.

அதே போல, கடவுள் என்ற மாபெரும் சக்தியிலிருந்துதான் எல்லாமே தோன்றி இருக்க வேண்டும். அந்தச் சக்தி நம்மையெல்லாம் படைக்கக்கூடிய, நம்மைவிட மாபெரும் சக்தியாகவும் திகழ வேண்டும். அதற்கு ஒரு பெயரோ, ஆண்பாலோ பெண்பாலோ தேவையா?

ஆம், தந்தை என்று ஒருசாரார் அழைக்கிறார்கள். ஏன் அது தாயாக இருக்கக்கூடாது? படைத்து உருவாக்கிப் பிரசவிப்பவள் மாதா அல்லவா? ஆகையால் மாதாவே என்று அழைப்பது அல்லவா பொருத்தமாக இருக்கும்? இதை இந்துமதம் ஒப்புக் கொள்கிறது. ஆகையால் இறைவனை ஆணும், பெண்ணும் கலந்த அர்த்தநாரீசுவர சொரூபமாகவே வழிபடுகிறது.

இப்போது “கடவுள் எங்கே இருக்கிறார்?” என்ற கேள்வி எழுகிறது. பொதுவாக என்ன சொல்வார்கள்? “சுவர்க்கத்தில் இருக்கிறார்!” என்று சொல்லி அண்ணாந்து பார்ப்பார்கள். ஆனால் சொர்க்கமும் ஓர் உலகம் அல்லவா? அதைப் படைத்தவர் அதற்கு முன் வேறு எங்கேயாவது இருந்திருக்க வேண்டும் அல்லவா? அவர் எங்கே இருந்தார்? அந்தக் கேள்விக்கு நாம் பதில் சொல்ல முடியாது. கடவுள் எதிலிருந்து இவற்றையெல்லாம் உருவாக்கினார்? அதற்கும் நாம் பதில் சொல்ல முடியாது.

ஆனால், ஓர் உண்மையை உணர்ந்தால் இது இரண்டுமே தெளிவாகும். கனவு என்பது மனிதனின் புத்தியில் இருந்து உருவாகும் படைப்பு. இதை உருவாக்கிய மனிதனே இந்த வடிவத்திலும் இடம் பெற்று விடுகிறான். அதாவது, அறிவுமயமான மனிதனின் ஒரு சக்தி அவனுடைய கற்பனையான கனவு உருவத்தையும் படைக்கிறது. அந்த மனிதனே அந்த உருவத்திலும் இருக்கிறான் – அவன் அதைப் படைத்தவனாக இருந்தாலும் கூட!

களிமண்–பானையாகிறது. பானையிலும் அந்தக் களிமண்ணே இருக்கிறது. தங்கம் நகையாகிறது. நகையிலும் அந்த தங்கமே இருக்கிறது களிமண் இல்லாத பானையைப் பார்க்க முடியுமா? தங்கம் இல்லாமல் நகையைப் பார்க்க முடியுமா?.

அதே போல உலகத்தில் கடவுள் வெளியில் எங்கேயும் இல்லை. இன்னோர் இடத்தில் கொலுவிருக்கவும் இல்லை அவர் உருவாக்கிய படைப்பிலே இருக்கிறார். மனித உயிர்களையும், தாவரங்களையும், இயற்கையின் மண்ணையும், மலையையும், ஆற்றலையும், கடலையும் –சந்திரர்களையும், விண்மீன்களையும், விண்வெளியையும் – எல்லாவற்றையுமே உருவாக்கிய வரும் அவர்தான். அவற்றில் இருப்பவரும் அவரேதான் இந்தப் படைப்புகளும்கூட! அவரின்றி இந்தப் படைப்புகள் வரவில்லை அவர் இல்லாமல் படைப்பும் இல்லை!

கடவுள் விண்வெளியாக இருக்கிறார் – சிதம்பரத்தில் போய்த் தரிசியுங்கள் – நெருப்பாய் – ஜோதிசொரூபமாய் இருக்கிறார்– திரு வண்ணாமலையில் போய்ப் பாருங்கள். வாயுவே வடிவமாகத் திகழ்கிறார். காளஹஸ்திக்குச் சென்று பார்த்து மகிழுங்கள், தண்ணீரில் உருவாகிறார் – ஜம்புகேசுவரத்தில் தரிசியுங்கள். பிருதிவி வடிவமாக காஞ்சியில் கண்டு வணங்குங்கள் !

எல்லாம் அவரே; எங்கு அவரே; அவை எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்திருப்பவரும் அவர். அதனால்தான் இந்துமதம் இறைவனை எல்லாவற்றிலும் காண வேண்டும் என்ற பேருண்மையை நமக்குக் கற்றுக் கொடுக்கிறது. இறைவன் படைத்த இயற்கையை, படைப்புகளை இறைவனின் சொரூபமாகப் பார்த்து வழிபடச் சொல்கிறது. உண்மையை உணர்ந்தவர்கள் இறைவனையும் உணர்ந்தவர்கள் ஆவார்கள்!

# வாழ்ந்து பார்க்கலாம் வாருங்கள் !

நீங்கள் உங்கள் தனித் தன்மையை இழந்து விடக் கூடாது. உங்களுக்கென ஒரு சுய சிந்தனை வேண்டும். வாழ்க்கை முன்னேற்றத்திற்கு அது மிகவும் அவசியம்.

மற்றவர்கள் நீங்கள் சொல்வதை ஆமோதிக்க வேண்டும். உங்கள் வார்த்தையை ஏற்றுக் கொண்டு பாராட்ட வேண்டும் என்று துவங்கும் ஒரு மனோபாவம் சில சமயம் உங்களுடைய தனித் தன்மையை இழந்து விடும் நிலைக்குக் கொண்டு வந்து விட்டு விடும்.

நீங்களே கவனித்துப் பாருங்கள் அநேகர்கள், பிறருடைய ஆமோதிப்பிற்காக, அங்கீகாரத்திற்காக ஏங்குவதைக் காணலாம். அதனால் என்ன ஏற்படுகிறது தெரியுமா? எதிராளியின் முக பாவனையைப் பார்த்துக் கொண்டு தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்வார்கள். மற்றும் சிலர், எதிராளி என்ன எதிர் பார்க்கிறார் என்பதையறிந்து அதற்குத் தகுந்தாற்போல் பேசுவார்கள்.

அப்படியும் எதிராளி தங்கள் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தால், உடனே அதற்கேற்பத் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளத் தயங்க மாட்டார்கள். இது மிகவும் கேவலமாகத் தோன்றவில்லையா? உங்களுக்கு உங்கள் சுய சிந்தனை – தனித்தன்மை – என்னவாயிற்று? அவர்களை மகிழ்விக்க நீங்கள் அடிமையாகி விடுவதா?

**தனித் தன்மை இல்லாவிட்டால் நீங்கள் செயற்கரிய காரியங்களைச் சாதிக்க முனைய மாட்டீர்கள்.**

எதிராளியின் பாராட்டை நீங்கள் விரும்பலாம் அது தவறாகாது. ஆனால் நீங்கள் அதற்கு ஏங்கக் கூடாது. அவ்வித ஏக்கங் கொண்டால் உங்கள் தனித்தன்மை அழிந்தே போகும். மனத்தளவில் நீங்கள் பிறருக்கு அடிமையாகி விடுவீர்கள்.

தனித் தன்மை இல்லாவிட்டால் நீங்கள் செயற்கரிய காரியங்களைச் சாதிக்க முனைய மாட்டீர்கள். உங்கள் உடல் நிலை, குடும்பத் தொல்லை இவைகளைப் பற்றி மற்றவர்களிடம் குறைபட்டுக் கொண்டு அவர்களின் அனுதாபத்தைப் பெறுவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பீர்கள். இவ்வண்ணம் உங்கள் வாழ்க்கையை வியர்த்தமாக்கிக் கொண்டிருந்தால் நீங்கள் வாழ்வில் முன்னேறுவதேது?

இது மாதிரியான தனித்தன்மை இல்லாத உங்கள் பலவீனத்தைத் தெரிந்தவர்கள் உங்களிடம் எளிதாகத் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொண்டுபோய் விடுவார்கள். 'முன்பு சந்தித்த பொழுது உடல்நிலை சரியில்லை என்றீர்களே – இப்பொழுது உடல்நிலை எப்படி? என்று உங்களுக்கு வேண்டியபடி – சுவையளிக்கும்படி கேட்டு வைப்பார்கள்.

அது போதுமே உங்களுக்கு, அவர் அனுதாபம் உங்களுக்குக் கிடைத்து விட்டது என்று தெரிந்ததும் பிறகு கேட்க வேண்டுமா? உங்கள் உடல் நிலையைப் பற்றி நீண்ட சொற்பொழிவே ஆற்றத் தொடங்கி விடுவீர்கள். அவர் இடையில் அவ்வப்பொழுது 'ச்ச' 'ச்ச' கொட்டி உங்கள் அன்பை எளிதில் பெற்று விடுவார். அதன் பிறகு அவருக்குத்தான் வெற்றி.

இவ்வண்ணம் பிறர் அனுதாபத்தை நீங்கள் நாடுபவராயிருந்தால், உண்மையில் உங்களுக்கே நீங்கள் கேடு விளைவித்து கொள்கிறீர்கள். உங்கள் துன்பத்திற்காக வருந்துவதாகக் காணோமே ! அதற்குப் பதிலாகப் புதுத் துன்பத்தைப் பற்றிக் கூறி இன்பமடைகிறீர்கள். இதனால் உங்களுக்கு நாளடைவில் தீங்குதான் விளையும்.

பிறர் ஆமோதிப்பை நீங்கள் பெறாவிட்டால் உங்கள் மனம் இடிந்து ஒடுங்கிப் போகிறதல்லவா ! அப்படி மனம் சிறுத்துப் போகும் மனோபாவம் இருக்கிறதே அதுதான் தவறு. அதனால் உங்கள் வளர்ச்சி முடக்கப்படுகிறது என்பதை நீங்கள் அறிய வேண்டும்.

இது மாதிரியான – தனித்தன்மை – இல்லாத உங்கள் பலவீனத்தைத் தெரிந்து கொண்டவர்கள் உங்களை வெகு எளிதாக ஆட்டிப் படைப்பார்கள். அதை அறிந்து கொள்ள வேண்டும்.

அடுத்தாற்போல், உங்களைத் தெரிந்து கொண்டு அதுமாதிரியான அனுதாபமோ அல்லது ஆமோதிப்போ கொண்டு வந்தால், 'டக்'கென உங்கள் பேச்சைத் திசைமாற்றம் செய்யுங்கள். அதன் பிறகு அவருடைய 'பாச்சா' உங்களிடம் பலிக்காது ஓ ! இவர் சுய சிந்தனை உடையவர். தனித்தன்மை கொண்டவர்!

என்று 'ஹிஹிஹி' என்று பச்சைச் சிரிப்பு சிரித்துக் கொண்டு, உங்கள் பேச்சு மாற்றத்தில் கலந்து கொள்வார். இப்படித்தான் நீங்கள் பழகிக் கொள்ள வேண்டும்.

நீங்கள் பிறருடைய நல்ல அபிப்பிராயத்தை எதிர் பார்க்கவும் வேண்டாம். அதற்காக நீங்கள் ஏங்கவும் வேண்டாம். அப்படி அதற்குப் பலியானால் அதாவது அப்படி ஒரு தேவையை—எதிர்பார்ப்பைச்—சுமந்து கொண்டிருந்தால் உங்கள் மனநிம்மதி போயே போய் விடும். மற்றும் நீங்கள் பிறர் அபிப்பிராயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கேற்பக் காரியங்கள் செய்பவராயிருந்தால், உங்கள் தனித் தன்மை அழிந்தே போகும். அதன் பிறகு நீங்கள் எழுந்து நிற்பதேது ?

எப்பொழுதும் உங்கள் சுய சிந்தனையைப் பயன்படுத்திக் காரியத்தில் இறங்குங்கள். அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள் – இவர்கள் அப்படி எண்ணுகிறார்கள் என்றெல்லாம் எண்ணிக்கொண்டு அக்காரியத்தில் இறங்குவீர்களேயானால் உங்கள் முட்டாள் தனம் தான் பளிச்சிடும். அதோடு உங்கள் சிண்டை அவர்கள் கையில் கொடுத்து விட்டாற் போலாகும்.

பிறர் அபிப்பிராயம் சொல்லட்டும், அதை நீங்கள் தடுக்கவேண்டாம். அது உங்களுக்குப் பிடிக்காததாயிருந்தால் அதை எதிர்த்து நீங்கள் போராடலாமல்லவா! அந்தச் சுதந்திரம் உங்களுக்கு உண்டே! அந்தத் துணிச்சல் உங்களுக்கு இருந்து விட்டால் போதும். நீங்கள் வாழ்க்கையில் முன்னேறி விடுவீர்கள். அந்தத் துணிச்சல் உங்கள் தன்னம்பிக்கையைத் தூண்டி விட்டு விடும்.

பிறர் அபிப்பிராயம் சொல்லட்டும், அதை நீங்கள் தடுக்கவேண்டாம். அது உங்களுக்குப் பிடிக்காத தாயிருந்தால் அதை எதிர்த்து நீங்கள் போராடலாமல்லவா! அந்தச் சுதந்திரம் உங்களுக்கு உண்டே! அந்தத் துணிச்சல் உங்களுக்கு இருந்து விட்டால் போதும். நீங்கள் வாழ்க்கையில் முன்னேறி விடுவீர்கள்.

எழுந்து நில்லுங்கள்! இன்னும் தயங்காதீர்கள்! எப்பொழுதும் உங்கள் சுய சிந்தனைக்கு இடம் கொடுங்கள். தனித் தன்மை தானே வளரும். மற்றும் நீங்கள் பிறர் ஆமோதிப்பையோ அனுதாபத்தையோ எதிர்பார்ப்பதால், 'எப்படிச் சொன்னால் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள்' என்பதையே எண்ணுகிறீர்களே யொழிய, உங்களுக்கென்று ஒரு எண்ணம், ஒரு கொள்கை இல்லாமற்போய் விடுகிறதே! அதைக் கவனித்தீர்களா?

ஒருவர் ஒரு கருத்தைச் சொல்லும்பொழுது அதற்கு 'ஆமாம்' போடுவது – அவரே அதே கருத்தை மற்றொரு இடத்தில் மாற்றிப் பேசினால், இதற்கும் ஆமாம் போடுவது, இப்படிக்கூட ஒரு வாழ்க்கையா? என்ன பரிதாபம் ! அவருக்கேற்றபடி தாளம் போட்டு அவருக்கு குழி பறிப்பது போலல்லவா இருக்கிறது. வேண்டாம் இந்தப் பிழைப்பு.

அபிப்பிராயத்திற்கு மாறுபட்டால், உங்கள் கருத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். தயங்கக் கூடாது. எதிராளி கோபப்படட்டுமே ! குடியா முழுகிப் போய்விடும் ? உங்கள் சுய சிந்தனைக்கு – தனித் தன்மைக்கு–ஏற்றம் கொடுத்த பெருமை உங்களை வந்து சேருகிறதல்லவா !

உங்களைப் பற்றியே நீங்கள் சரியாகத் தெரிந்து வைத்துக்கொண்டு விட்டால், எதிராளியின் அபிப்பிராயம் உங்களை ஒன்றும் செய்ய முடியாது. அதனால் நீங்கள் எந்தவித சலனத்திற்கும் ஆளாக மாட்டீர்கள். என்ன சொல்வார்களோ என்று நீங்கள் பயப்படும் பொழுது தான், உங்கள் சுய சிந்தனையும் தனித்தன்மையும் அவர்களிடம் அடைக்கலம் புகுந்து விடுகிறது.

வாழ்க்கையில் முன்னேற வேண்டிய உங்களுக்கு இந்தப் பலஹீனம் ஏன்?


உங்களுடைய துன்பத்தை அவ்வப் பொழுது பிறரிடம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பதால் என்ன ஆகிறது தெரியுமா? அது ஆறாத புண்ணாகவே இருக்கிறது. புண்ணுக்கு மருந்தை வைத்துக் கட்டி விட்டு அதை அவிழ்த்து அவிழ்த்துப் பார்த்துக் கொண்டிருந்தால் எப்படி? அது ஆறவே ஆறாது.

உற்ற மனிதரிடம் சொல்ல வேண்டியதுதான். யோசனையும் கேட்க வேண்டியதுதான். அதற்காக அனைவரிடமும் அதை 'நோட்டீசாக' அடித்துக் கொடுத்து கொண்டிருந்தால் எப்படி? அதனால் உங்களுக்குக் கெடுதலே விளையும். அதன் பிறகு அவர்கள் எல்லாம் உங்களை பார்த்ததும் 'அது ஒரு போர்' என்று எண்ணி வெருண்டோடத் தொடங்கி விடுவார்கள். அதன் பிறகு உங்களுக்குத் தனிமைதான் மிஞ்சும்.

மற்றும் உங்கள் துரதிர்ஷ்டத்தைப் பற்றியே பிறரிடம் ஓயாது பேசிக் கொண்டிருத்தல் கூடாது. வாழ்க்கையில் வெற்றி பெறாததற்கு, உங்களுக்கு துரதிர்ஷ்டம் தான் என்று மற்றவர்களும் குறை சொல்வது கூடாது.

நீங்கள் அப்படித் தோல்வியடைந்ததற்கு காரணம், நீங்கள் வெற்றியடைய விரும்பவில்லை என்றே பொருள். அதற்கென என்ன போராட்டம் நடத்தினீர்கள்? சோம்பேறி வாழ்க்கை வாழ்ந்து வந்தால் தோல்வி தான் கிட்டும்.

# பொங்கல் விழா





மட்டக்களப்பில் நடைபெற்ற பொங்கல் விழாவில் ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தா, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் உரை நிகழ்த்துவதையும், விபுலானந்த இசை நடனக் கல்லூரி மாணவியரின் நடனத்தையும், இளைஞர்களின் கிராமிய விளையாட்டையும் படங்களிற் காணலாம். கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி. ஆர். கைலாசநாதன் அவர்களும் படத்திற் காணப்படுகின்றார்.






# O.S.S.

To :

70 Mr. K.Nadesan
"Theniyagam"
Polikandy
Valvettithurai

From :

The Director,
**Department of Hindu Religious & Cultural Affairs**
98, Ward Place,
Colombo - 7

Printed by Unie Arts (Pvt) Ltd. Colombo 13.